# திருமலை சேதுபதி

(ஒரு தமிழ் நாடகம்)

காதலும் கடமையும் மோதுறும் காலை
பேதியா நெஞ்சே நீதியார் நெஞ்சே.

இந்நாடகம்

அ. மாதவையர் B.A.

இயற்றியது.

சென்னை :
ஸ்ரீநிவாஸ வரதாசாரி அண்டு கோ.

1910
[All rights reserved.]

MADRAS

PRINTED BY SRINIVASA VARADACHARI & CO.

MOUNT ROAD.

# முகவுரை.

இந்நாடகம் தமிழ்நாட்டுச் சரித்திரத்தைத் தழுவியதன்று. இஸ்பானியநாட்டுப் புராதன சரித்திரத்தில் கூறப்படும் விருத்தாந்தம் ஒன்று, காலதேசவர்த்தமானங்களுக்கும் நீதியுணர்ச்சிக்கும் இணங்க, மிகக்கூட்டியும் குறைத்தும் மாற்றியும் இதில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. கதை நிகழ்வது பாண்டியர்காலமேயாயினும், காலமயக்கமானமொழிகளை இதிற் பரக்கக்காணலாம். நாடகநிகழ்ச்சியில், ஊன்றிநோக்காவிடத்துக், காலத்தின் பழமையை இடையிடையே மறந்து, படிப்போரும் பார்ப்போரும் தம் காலத்ததாகவே நினைந்து மயங்குமாறு இவ்வண்ணம் சொற்பெய்தியற்றுவது, ஆன்றோராட்சியோடொத்ததே. நாடகபாத்திரங்களின் பல்வேறு சுபாவங்களுக்குப் பொருந்த, பேச்சுநடைகளும், பதப்பிரயோகங்களும் சொன்முடிபுகளும் தெரிந்தெடுத்தாளுதல் நாடகவியலே. அதிமேதையான கவிவாணரிற் சிலருமே வறிதேமுயன்று இழுக்குற்ற அரும்பெருங்கிரந்தவர்க்கமாகிய நாடகமாக, இக்கதையை யான் கூறப்புகுந்தது, பாலுடன் சர்க்கரையுங்கூட்டுவதுபோலக், கதையின் இயற்கை இனிமையைப் பெருக்குதற்கன்றி, மற்றன்று. இதிற்காணும் குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருளவேண்டுகிறேன். முதனூற்கதையை அறிய விரும்புவார், "இஸ்பானிய சரித்திர அதிசயவிருத்தாந்தம்,"* என்னும் ஆங்கிலப்புஸ்தகத்துள், "நற்குணகுஸ்மான்,"* என்னும் தலைப்பின் கீழ்ப் பார்ப்பாராக.

* The Story of "Guzman the Good," in the "Romance of Spanish History."

# நாடகபாத்திரங்கள்.

திருவேங்கடமாறன்—*பாண்டியநாட்டரசன்.*
வம்சாரிமாறன்—*அரசன் தம்பி ; இளவரசன்.*
திருமலைசேதுபதி—*நாடகத்தலைவன்.*
சோமசுந்தரசேதுபதி—*திருமலைசேதுபதி மகன்.*
சாம்பசிவசாஸ்திரியார்—*பாண்டியநாட்டு முக்கியமந்திரி.*
வீரணன்சேர்வை—*பாண்டியநாட்டுச் சேனாபதி.*
சங்கரசாஸ்திரியார்—*பாண்டியநாட்டுப் பொக்கிஷதாரி.*
எல்லையப்பர்—*ஒரு தமிழ்ப் புலவன்.*
கோமாளிராமன்—*விதூஷகன்.*
கறுப்பணபிள்ளை, நாகப்பன்சேர்வை } *மதுரை நகரவாசிகள்.*
தாமோதரன்—*எல்லையப்பர் தம்பி.*
வீரப்பன்—*ஒரு வாசற்காப்போன்.*
முருகன்—*வம்சாரிமாறன் பணியாள்.*
அச்சுத முதலியார்—*சோழநாட்டுத் தூதன்.*
திருநாராயண பிள்ளை—*அச்சுதமுதலியாருடன் வந்தவன்.*
மகாலிங்கஞ்சேர்வை—*நெல்லைக்கோட்டைத் தலைவன்.*
சண்முகத்தேவன், நெல்லையப்பத்தேவன் }—*நெல்லைக்கோட்டைத் தளவீரர்.*
கோபாலகனபாடிகள், சோணாசல ஓதுவார் }—*நெல்லை நகரவாசிகள்.*
தளவாய்கண்ணன் தம்பி—*சேரநாட்டு அரசன் சேரமானது சேனாபதி.*
சேஷையன்—*சேரமான் மந்திரிகளில் ஒருவன்.*
சேகரன்மண்ணாடியார், பத்மநாபன் நம்பியார், பரமேசுவரப்பணிக்கர் }—*சேரநாட்டுத் தளவீரர்.*
இராவுண்ணி நாயர்—*தளவாய் கண்ணன் தம்பியின் பணியாள்.*
உத்தியோகஸ்தன்—*ஒருவன்.*
அடைப்பைக்காரன் *ஒருவன்.*
தருமிநாச்சியார்—*திருமலைசேதுபதியின் மனைவி.*
மாதவி—*தளவாய் கண்ணன் தம்பியின் தங்கை.*
நாராயணி—*மாதவியின் சேடி.*
வள்ளி—*ஒரு குறத்தி.*
செம்பகம்—*ஒரு பொதுமகள்.*
நெல்லைநகரவாசிகள், படைவீ[illegible]ணியாளர்.
கதைநிகழ் களன் :—*முதல் அ[illegible]மும், பிற்கூற்றும், மதுரையிலும், மற்றவை நெல்லைக்கோட்டையிலும், கோட்டைப்*

# திருமலை சேதுபதி.

## முதல் அங்கம்.

(களம்—மதுரை).

### முதற்காட்சி.

**களம்** :—அரமனைவாசல். **காலம்** :—பிற்பகல்.

[வீரப்பன் நிற்றல் ; தாமோதரன் பிரவேசித்தல்.]

**வீரப்பன் :** அண்ணன் தவசிக்குப் பதிலா ?

**தாமோதரன் :** நீவிரோ என்னுடன் காவல் காப்பது ?

**வீரப் :** பின்னை யாரு ? அண்ணன் பேச்சு இலக்கணமா யிருக்கே. நம்மூரிலே எல்லாரும் இப்படித்தான் பேசுவார்களோ ?

**தாமோ :** பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாருலகில் ?

**வீரப் :** நமக்குப் பாலும் தெரியாது, நெய்யும் தெரியாது ; பனம்பால்தான் நாம் கண்டது. அண்ணன் என்று சேவகத்துக்கு வந்தது ?

**தாமோ :** நாளைப் பொழுதொடு நான்காம் நாளே.

**வீரப் :** என்ன, சும்மா சும்மா கவியா படிக்கிறது ? நம்ம தமிழ் பேச வாராதோ ?

**தாமோ :** அறிவிலி நீயெனை யாரென் றெண்ணினை ?
சிறிதுமே என்னைத் தெரிந்திலை போலும் ?
நல்ல கவிஞர் நயந்து போற்றும்
எல்லை யப்பரென் தமையன் என்பதை
அறிகிலை நீ கொல் ?—

**வீரப் :** யாரைக்கொல்ல ? ஆத்தாடி ! இதென்ன கிணறு வெட்டப் பூதம் புறப்படுகிறதே ! இந்த வாசற்காக்கிற சேவகத்துக்கு அண்ணனை யார் வரச்சொன்னது ? கோமாளி ஐயர்கூட மகாராசா சபையிலே அண்ணன் இருந்தால் வேடிக்கையாயிருக்கும். இங்கே பட்டிக்காட்டு மறக்குஞ்சு காணியாட்சிக்கு அண்ணனை யார் வரச் சொன்னது ?

**தாமோ :** மந்திரி யாரெனக் கந்தரங் கம்சொலி
வந்திவண் க[illegible] விதித்தார் மதியிலி.

**வீரப் :** என்ன, வருகி[illegible]ரையெல்லாம் கவிபாடிப் பயமுறுத்தவா ? தவசிதான் இங்கே இருந்தானே.

**தாமோ :** அரசர் ஆக்கினை. அறிகுவை அன்றோ ?

"எக்குலம் ஆயினும் எத்தொழில் ஆயினும்
'சொக்கர் அடித்தூள்' என நமைச்சொல்லாது,
ஆதிப் பெயரை அறைவார் தம்மை
மோதிப் புடைத்தல் முறையா கும்மே."

அங்ஙனம் செய்யவே இங்ஙனம் அனுப்பினர்.

**வீரப் :** என்ன, மகாராசா கிறுக்கு சாத்திரியாருக்கும் கொஞ்சம் திரும்பிவிட்டதா? இவருக்கு இன்னும் அவ்வளவு வயசாகவில்லையே? சோழியன் குடுமி சும்மா ஆடாது : ஏதாவது சங்கதி இருக்கும் உள்ளே.

[கறுப்பண பிள்ளையும் திருநாராயண பிள்ளையும் தூரத்தில் வருதல்.]

**கறுப் :** ஆனால் சண்டை நடப்பது உறுதியே. சாத்திரியாருக்கும் சேனாபதிக்கும் உள்ளுக்குள்ளே வருத்தம் கங்குகரையில்லை. எங்கேயாவது சண்டையை மூட்டிவிட்டுச் சேனாபதியை அனுப்பிவிட்டால், பின்பு தமக்குவேண்டியபடி மகாராசாவை ஆட்டுவிக்கலாமென்பது அவர் நோக்கம். உங்கள் தூதும் நல்லதறுவாயில் வந்திருக்கிறது.

**திருநா :** உயிருக்கு வந்தாலும், எங்கள் அரசர் இம்மியும் நியாயத்தைவிட்டு விலகமாட்டார். இந்த வழக்கை ஏன்றமட்டும் சண்டையில்லாமல் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதே அவர் நினைப்பு. சேரநாட்டுக் கப்பசசங்கதி என்ன?

**கறுப் :** சேதுபதி தூதுசென்று திரும்பியபின்பு ஒன்றும்தெரியவில்லை. இளவரசரும் அங்கே போயிருப்பதாகக் கேள்வி.

**திருநா :** சேதுபதிக்கும் பிரதானிக்கும் இணக்கந்தானா?

**கறுப் :** அவர்களையும் சொல்லி மற்றொருவரையும் சொல்கிறதா? அவர்களைக் குலதெய்வமாக வைத்துக்கொண்டாடலாம். மகாராசா இருக்கிற சீருக்கும், அவருக்கு அமைந்திருக்கும் மந்திரிகள் சீருக்கும், பாண்டியநாடு, பாண்டியன் என்னும் பேரே இதற்குள் பறந்துபோயிருக்கும், அவர்கள் ஒருவர் மட்டும் இல்லாவிட்டால்.

**திருநா :** அவர் மகனைச் சுவீகாரஞ் செய்துகொண்டு, இளவரசாக்கப் போவதாகப் பேச்சு நடந்ததே.

**கறுப் :** குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்புபோல, மகாராசாவுக்கு ஒரு தம்பி தலையெடுத்திருக்கிறார்; எப்படியாவது அவர் பட்டத்துக்கு வந்துவிடாமல் போகவேண்டுமென்பது குடிகள் கோரிக்கை; சாத்திரியார் எண்ணம் தெரியவில்லை.

கறுப் : அதனால்தான் கொஞ்சம் நம்பிக்கை. அரமனை வாசலுக்கே வந்துவிட்டோம்.

திருநா : வாசற்காப்போர், வில், வாள், ஒன்றுமேயின்றி, ஆலின் விழுதுபோல் கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு நிற்கிறார்களே, இதென்ன புதுமை!

கறுப் : அறுகே வாள், வில்வமே வேல், திருநீறே வெடிமருந்து, அக்கவடமே எறிகுண்டு, அஞ்செழுத்தே திருமாலினது ஐம்படைகளினும் சிறந்த ஆயுதம், என்றெண்ணியொழுகும் அரசர் அரமனையைக் காப்பவருக்கு, ஆயுதங்கள் வீண்சுமைதானே.

திருநா : ஐயா வாசற்காப்போரே! உங்கள் அரசர் திருவேங்கடமாறன் அரமனையில் இருக்கிறாரோ?

தாமோ : "ஆதிப்பெயரை அறைவார்தம்மை, மோதிப்புடைத்தல் முறையாகும்மே." [திருநாராயண பிள்ளையைக் கன்னத்தில் அடிக்கிறான்.]

திருநா : ஏனடா நீ என்னை ஏதோ பிதற்றிக்கொண்டு அடிக்கிறாய்? நீ ஒரு சேவகப்பயல், அரசரிடம் தூதுவந்திருக்கும் என்னைத்தொட்டு அடிக்கிறதா? இப்பொழுதே முதலியாரவர்களிடம் தெரிவித்து உன்னை ஒறுக்கச்செய்கிறேன் பார். என்ன, காஞ்சியான் என்று தெரியாதோ?

தாமோ : காஞ்சியே ஆகுக, கலாபமே ஆகுக,
முஞ்சியைத் திருகுவல் மொழிந்தால் அப்பெயர்.
சோழக் கதிரோடு போய்நீ சொல்லி
நீளக் கடுகி மேவுக தூது.

[தாமோதரன் போதல்.]

கறுப் : சைவம் பழுத்துத் துரைத்தன விருதுகளைத் துறந்ததுமன்றித், திருமாலின் முக்கிய திருப்பதியைக் குறிக்கும் தம் இயற்பெயரைச் சிலநாளாகமாற்றி, எல்லாரும் தம்மைச் 'சொக்கரடித்தாள்' என்றே சொல்லவேண்டும், அப்படிக்கின்றி இயற்பெயரையாராவது சொன்னால் அவர்களை யாரும் அடிக்கலாமென்று, மகாராசா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார். அவர் முன்னிலையில் அது நடைபெறுவதன்றி, இதுவரை இவ்விதம் நிகழ்ந்ததில்லை. இவனும் வேற்றாளாய் இருக்கிறான். வீரப்பா! யாரிது புது ஆளாயிருக்கிறது?

வீரப் : யாரோ புலவர் தம்பியாம்; இப்பொழுதுதான் வந்தார்; சும்மா கவி படிக்கிறார்; சாத்திரியார் அனுப்பித்தாராம்; மகாராசா பேரைச்சொன்னவரை எல்லாம் அடிக்கவாம்.

இன்னும் ஏதோ அம்மான் அடிக்கடி சொல்வதுண்டே? ஆமாம்:
"சேற்றிற் பிறந்த செங்கழுநீர்ப்போலப்,
பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்த வசிட்டரும்;
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற்பிறந்த சத்தியரும்;
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரும்;
பராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்த வியாசரும்;—"
பிராமணுள் யோக்கியதை,—அதோ அரசர் வருகிறுர்!

(சிவசின்னங்கள் பூண்ட திருவேங்கடமாறனும், எல்லையப்பரும், கோமாளிராமனும் பிரவேசித்தல்).

எல்லாரும்: சொக்கரடித்தூள் தொண்டு துலங்குக!

(அரசன் சிவலிங்கத்தை வணங்கிவிட்டுச், சிம்மாசனத்தின் கீழ்ப்படியில் இருத்தல்).

அரசன்: அந்த வைணவப்பதரின் தூதன் எங்கே? அவன் மூகத்தில் விழித்தாலும் பாவமுண்டு. ப்ரதானி! அவனுக்கு என்னபதில் அனுப்புகிறது?

கோமாளி: உதயமுதல் சிரமப்பட்டு, நான் சரியானபதில் பாடிக்கொண்டு வந்திருக்கிறேன். அம்மான் திருத்தித்தந்தால், சோழனைத்திருத்திசெய்து விடலாம்.

அரசன்: எங்கே, சொல், கேட்போம்.

கோமாளி: எல்லையப்பர், பராக்கு! ஏதோ கம்பனும் கும்பனும் பாடின கவியல்ல இது:

கோமாளி ராமன் சோழனுக்குச் சொன்னவெண்பா:
ஏமாந்து போகாதே சோழா—மாமா
சாஸ்திரியார் கொள்ளைச் சமத்தாக்கும்
சைநியத்தைக் கொண்டிங்கே வா.

எல்லை: நன்றுயிருக்கின்றது; ஆனால் தளை சிறிது தட்டுகின்றது.

கோமாளி: சிறைச்சாலையில் ஒரு புதுக்கைதியும் நேற்று இப்படியே சொன்னுன்.

எல்லை: சீர் குறைவாயிருக்கின்றது.

கோமாளி: இந்த நாளிலே அது அம்மான் சொல்லக்கூடாது; மாப்பிள்ளைதான் சொல்லலாம்.

எல்லை: எதுகை யில்லை.

கோமாளி: சங்கரமாமாவை எப்பொழு[illegible]ரலும் பணம் தான் கையிலில்லை என்பர்.

அரசன் : சாஸ்திரியாரே! ஆசாரமண்டபத் திருப்பணிக்குப் பணம் சேர்ந்து விட்டதா?

சங்க : ப்ரதானியவர்கள் ஆஜ்ஞைப்படி, சௌவுகாராருக்கெல்லாம் தறிக்கு ஒரு வராகன் வரிப்போட்டிருக்கிறேன்; ராஜதானிக்குள்வரும் வாஹநங்கள் கொடுக்கும் சுங்கத்தை, அரைவாசி அதிகப்படுத்தியிருக்கிறேன். பணம் இன்னும் கைக்கு வரவில்லை.

அரசன் : வடக்கேயிருந்து இன்னும் சில சிற்பர்கள் தருவிக்க வேண்டும்; பளிங்குக்கல்லும் போதாது; திருப்பணி தாழ்க்காமல் விரைவில் பணத்தைத் திரட்டிவிடும்.

கோமாளி : யார்தாலியை அறுத்தாலும் சரி, கோயில்வேலைமட்டும் நிற்கக்கூடாது. அப்படித்தானே மஹாராஜா?

அரசன் : எம்பெருமான் திருத்தொண்டர்கள் பாததூளிக்கும் ஈடாகாத இந்தப் புழுத்தநாயை, 'மஹாராஜா,' என்று அழையாதே என்று எத்தனை முறை உனக்குச்சொல்வது? ப்ரதானி! அந்த மகா பாவியான சைவதுவேஷிக்கு என்னபதில்?

சாம்ப : ஸகலபாரத்தையும் சொக்குமாணிக்கத்தின்மேல் போட்டுவிட்டு, ஸந்நிதானத்தில் பூக்கட்டிப் போட்டுப்பார்க்கிறது; ஆஜ்ஞைப் பிரகாரம் நடக்கிறது. இன்று நமசிவாயபட்டர் பூஜைமுறையாம். அவர் மஹாசிஷ்டர்; சொக்குமாணிக்கம் அவருக்குப் பிரத்யக்ஷம் என்று சொல்லலாம்; அடிக்கடி அவர் ஸொப்பனங்களில் ப்ரஸந்நமாகி ராஜ்யவிஷயங்களைப்பற்றி ஆஜ்ஞாபித்திருப்பது சொக்காடித்தூள் தெரிந்த விஷயமே. ஈசுவராஜ்ஞையை ஸிரஸின் மேற்கொண்டு நடப்பதைவிட, கேவலம் நம்முடைய மாநுஷபுத்தியும் ப்ரயத்தனமுமா சிலாக்கியம்? இந்த ராஜ்யமே, சொக்குமாணிக்கத்தினுடையது தானே; தாங்கள் பிரதிநிதிதானே. இதே உத்தமமென்று தோன்றுகிறது.

அரசன் : நன்றாய்ச் சொன்னீர் ப்ரதானி:

'அக்கு வடம்புனை ஆனந்த வெள்ளத்தை, அங்கயற்கண்
பக்கத்திருக்கும் பவளாசலத்தைப், பழம்பொருளை,
முக்கட்கனியைக், கடம்பாடவிக்கண் முளைத்தெழுந்த
சொக்கை அடைந்தவர் நீத்தார்தம் நெஞ்சில் துயரங்களே.'

நன்றாய்ச் சொன்னீர். இப்பொழுது சாயங்கால தீபாராதனை சமயத்திலேயே பார்த்துவிடலாம்.

வீரண : அடியேன் ஒரு அறிக்கை: தம் தாயாருக்குச் சீதனமாகக் கொடுத்த ஊர்களைத் தமக்கு விட்டுவிடவேண்டுமென்றே சோழர் தூதனுப்பியிருக்கிறார்; சீதனங்கொடுத்ததோ நாடறிந்த சங்கதி; உள்ளங்கை நெல்லிக்கனிபோல நியாயம் இன்னதென்று விளங்கும்

பொழுது பூக்கட்டிப்போட்டுப் பார்ப்பது பொருந்தாது. சேரமான் இரண்டுவருஷமாகக் கப்பம் கட்டவில்லை; தருகிறதில்லை என்றும் மறுத்துவிட்டான்; கட்டானேயானால், நெடுநாளாகப் போர்முகம் காணுமே கல்லும்மண்ணும் சுமந்துழலும் படைவீரர்களைக் கொண்டுபோய், அவனை நெறிப்படுத்தி இறையிறுத்து வருகிறேன். இதை விட்டு விட்டு, உற்றாருடன் வீண்வழக்கு வேண்டாம். உலகறியக் கொடுத்து விட்டதைத் திரும்பியும் விரும்பலாமா?

**எல்லை :** "மலையின் மாளிறகுகண்டேன் வாரிதி நன்னீர்கண்டேன், சிலை மதனுருவங்கண்டேன், சிவன் சுத்தக்கழுத்துங்கண்டேன், அலைகடல் கடையக்கண்டேன், அயனைந்து தலையுங்கண்டேன், கொலை இந்த்ரனிருகண் கண்டேன், கொடுத்ததை வாங்கக்காணேன்."

என்றே பெரியோர் நன்றே கூறினர்.

**சாம்ப :** "எனையாளுமீசன் செயல்," என்னும் மகுடத்தையுள்ள கவி புலவர்க்கு தத்ஸமயம் ஞாபகமில்லையோ?

**அரசன் :** நம்ம சேதுபதியின் அபிப்பிராயமென்ன?

**திரு. சே :** பெற்றதாய் பசித்திருப்பினும் பெரியோர் பழித்தற் குரியதொன்றைச் செய்யலாகாது: சிறியோருமே ஒப்பாததை இறைவனே செய்யின் நகைப்புக்கிடமாகும் அன்றோ? இந்நாட்டினது தொல்புகழையும், முன்னோரது அறநெறிச்செல்வத்தையும், நினைந் தொழுகும் அரசன், தன்னால் அவைமாசுற்றுக் குன்றுதவண்ணம், எத்துணை மதியூகத்தோடும் மனக்கவலையோடும் தன் செங்கோலை நடாத்தவேண்டும்!

**எல்லை :** இன்றது நெருநல தன்றிந் நாடு:
என்று சந்திர சூரியர் இயங்கினர்
அன்று தொட்டிசை துன்றிய நாடிது;
ஈசனே அனைய மாசிலா முனிவன்
சந்தன மலையமர் சுந்தர நாடிது;
செங்கலை வாயும் பொங்கலை வாயும்
'முத்தமிழ் துதிக்கும்' உத்தம நாடிது;
தொண்டர்க் கெளிய அண்டர் நாயகன்
திருவிளை யாடல் செய்த நன்னாடிது;
முக்கட் கடவுளும் முத்தன மடந்தையும்,
மகிழ்ந்து மணந்து மகவும் பயந்து,
கருணையில் அளித்த பொருனை நாடிது;
அமிழ்தினும் சிறந்த தமிழ்மொழி பிறந்து
பலகை ஏறியும் வைகை மீறியும்
தலைமை கூடிய புலமை நாடிது;

(1^) ADYANMIYUR MADRAS-41

ஒருமறைத் தனிமுதல் உருமறைத் துவந்து
அருமறை யவற்காப் பொருள்மறை புகன்று
பொற்கிழி அறுத்த அற்புத நாடிது;
இறையவன் சொற்கும் குறையது கூறும்
வாய்மைசால் புலவர் காமுறு நாடிது;
திடமுறு பஞ்சவர் நடுநா யகற்கு
மடமயில் ஈந்து மகிழ்ந்த திக்குடி;
அடலே றனையநின் ஆதியோர் தம்முள்,
கடலே சுவறக் காய்ந்தனன் ஒருகோ;
தெய்வ நாயகனை மைமுகிற் குலங்கள்
பெய்வ தின்றுப் பிணித்தனன் ஒருகோ;
ஆறு சேர்முடி நீறு பூசியை
மாறி யாட வைத்தனன் ஒருகோ;
மறந்தே பிழைத்த வலக்கை கொய்தே
அறந்தேர் அரசியல் ஆற்றினன் ஒருகோ;
ஆதலினன்றே வேதத் தனிமுதல்
நின்குல முதலைத் தன்தலை ஏந்தி
அம்பலந் தோறும் இன்புறும் ஆடி
ஒப்புயர் வற்ற இப்புகழ் பெற்ற
நாடே நாடலால் மற்றெது நாடே.

சாம்ப: இவ்வளவு பிரக்யாதி பெற்ற தேசத்தில் ஒருபாகத்தை அந்நியர்க்கு விட்டுவிடுவதுதான், ராஜகீர்த்தியைச் சோபிக்கச் செய்யுமோ? இதுதான் வீரமோ?

திரு. சே: "கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன் மறவருமென
நான்குடன் மாண்டதாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்."

அரசன்: வைணவப்பதராகி விட்டவனோடு நாம் உறவாடுகிறதா? சொக்குமாணிக்கத்தின் தொண்டர்களாகிய நம்குடிகளை அந்தப் பாவியின் கொடுங்கோலுக்குள்ளாக்குதலும் அறநெறியாகுமா?

(உத்தியோகஸ்தன் ஒருவன் பிரவேசித்தல்.)

உத்தி: சொக்காடித்தாள் தொண்டுதலங்குக! சோழநாட்டுத் தூதர் வந்து சமயம் விசாரிக்கிறார்.

அரசன்: வரச்சொல். [உத்தியோகஸ்தன் போதல்.] ப்ரதானி

சொன்னபடி சொக்குமாணிக்கத்தின் திருவுளத்தையறிந்து நடந்து கொண்டால், பின்பு விதிபோலாகிறது.

அம்மான் அடிக்கடி சொல்வதுண்டே :

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்."

(அச்சுதமுதலியாரும் திருநாராயணபிள்ளையும் பிரவேசித்தல்.)

**வீரண** : [மறைவாய்.] "சொக்கரடித்தூள் தொண்டு துலங்குக," என்று வாழ்த்தும்.

**அச்சு** : ஸ்ரீராமாநுஜதாஸ ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜ விக்கிரம சோழமஹாராஜாவின் தூதன் தொண்டைமண்டலம் அச்சுத முதலி என்பேன், பாண்டிய மஹாராஜருக்கும் இந்தச் சபை யாருக்கும் வந்தனம் அளிக்கின்றேன்.

**அரசன்** : [சேவிகளைப்போத்திக்கொண்டு] சிவ! சிவ! வந்த காரியமென்ன விரைவிற் சொல்லும். ப்ரதோஷகாலம் நெருங்கிவிட்டது, போகவேண்டும்.

**அச்சு** : மகாப்ரபோ! தூதுவிஷயத்தை வெளியிடுமுன், ஒரு சிறு விண்ணப்பம்,—

**கோமாளி** : சின்னதென்றால் கறண்டியப்பமோ? சுண்டைக் காய் மிளகாய் போட்டிருக்குமோ? இதற்குத்தானா இருபத்தெட்டுப் பட்டை நாமம்!

**அச்சு** : மகாப்ரபோ! என்னுடன் வந்திருக்கும் இந்தத் திரு நாராயணபிள்ளையை, அரமனைத் துவாரபாலகரில் ஒருவன் காரண மின்றி அடித்து, அவமானப்படுத்தி விட்டான்?

**கோமாளி** : இரண்டு கன்னத்திலுமோ, அதிலும் பக்ஷபாத முண்டோ?

**அச்சு** ; தங்கள் முன்னோரில் ஒரு பாண்டியன், சோழநாட்டு வணிகனை அநியாயமாய் ஒறுத்தமைபற்றி, அவன் பத்தினிப்பெண்டின் சாபத்தால் தீயுண்டு சாம்பரானது இந்த மதுரைமாநகரம்.

**கோமாளி** : இன்னும் அப்படி வராமல்தானே எல்லாம் கற்பணியாக நடக்கிறது.

**அச்சு** : அன்றியும் இராஜதூதராக வந்தோரை, அதிதிகளாக உபசரித்து, கௌரவப்படுத்துவதே அரசியலுக்கு அழகு. அங்ஙனமிருக்க, ஒரு தவறுமே செய்யாத இவனை, வாசற்காக்கும் சேவகன் ஒருவன் அடித்து அவமானித்ததை விசாரித்து, நீதி செலுத்தவேண்டுகிறேன்.

அரசன்: எவன் அப்படிச் செய்தவன்? இவன் என்னசெய்தான்?

சாம்ப: [மறைவாய்] ராமா! இப்பொழுதுதான் ஸமயம்வரும்; ஞாபகம்.

கோமாளி: [மறைவாய்] இதோ போடுகிறேன் பாருங்கள்.

அச்சு: மகாப்ரபோ! இவன் ஒரு குற்றமுமே செய்திலன். இவ்வூரானாகிய தன் நண்பன் கறுப்பணபிள்ளை யென்பவனோடு,—அவனைக்கேட்டாலும் உண்மை தெரியும்,—இவன் நகரச்சிறப்பைக் கண்டுகளித்துக்கொண்டு, அரமனைவாயிலை அடைந்து, தங்கள் பவனியையும் காணவிரும்பி, அங்கு நின்ற துவாரபாலகன் ஒருவனை நோக்கி, “உங்கள் அரசர் திருவேங்கடமாறன்,—”

கோமாளி: ‘ஆதிப்பெயரை அறைவார் தம்மை, மோதிப் புடைத்தல் முறையாகும்மே.’ [அச்சுத முதலியாரை அடிக்கிறான்.]

வீரண: }
திரு. சே: } ஆ! ஆ! இதென்ன அபவாதம்!

அச்சு: இது ராஜசபையென்று நினைத்தன்றோ அரசர் என்னைத் தூதனுப்பியதும் நான் வந்ததும்? தம்மானமும் கெட்டு, பிறர் மானத்தையும் கெடுக்க முயலும், மூடரும், மூர்க்கரும், விதூஷகரும் கூடிய பைத்தியகாரக் கும்பலாகவன்றோ இது காணப்படுகிறது? இனிப் போர்முகத்தில் வில்லினாற் சொலும் சொல்லன்றி, வேறு பேச்சு என்னவிருக்கிறது? இங்கெனக்குக் காரியமுமில்லை.

[அச்சுத முதலியாரும் திருநாராயணபிள்ளையும் போதல்.]

கோமாளி: (மறைவாய்) மாமா! வாக்கு ஞாபகமிருக்கட்டும்.

சாம்ப: (மறைவாய்) ஒரு கலத்துக்கு இரண்டு கலம் தரச் சொல்லுகிறேன். (பகிரங்கமாய்) பார்த்தீர்களா சோழநாட்டான் துடுக்கை! ஏதோ கோமாளி பரிகாசமாய்ச் செய்ததற்காக,—அதுவும் ராஜ ஆஜ்ஞைப்படிதான்,—ராஜஸதஸ்ஸை இப்படி அவமானப்படுத்திவிட்டுப் போகிறான். இவனென்ன ராஜனா? ராஜகுமாரனா? கேவலம் ஏவினது செய்யும் ஊழியக்காரன், சுவானத்துக்கு ஸமானம், கிஞ்சித்தும் பயமின்றி, அந்த ப்ரஸந்நமூர்த்தியைக்கூட லக்ஷியம் பண்ணாமல், ராஜாதிராஜனையும் பிரபுக்களையும் எடுத்தெறிந்து தூஷிக்கிறதா இவன்? இவனை இந்த நிமிஷமே காராகாரத்தில் பந்தனம் பண்ணி, சித்திரவதை செய்தால் தானென்ன? மஹாபாபியாகிய சிவத்வேஷியிவன்,—

அரசன்: சேனாபதி! உடனே அந்தப் பயலைப்பிடித்து,—

திரு. சே : சிவ ! சிவ ! இன்னும் அந்தப் பழியும் வேண்டாம். இந்நாட்டுக்கும் தங்கள் குடிக்கும், நான் உண்மை ஊழியனென்பது, சொக்காடித்தூளும் பிறரும் அறிந்ததே ; போரென்றால் புறமிடுபவனு மல்ல ; எவனேயாயினும, எத்துணை இழிந்தோனாயினும், தூதென்று வந்தோனை வெகுமானித்து, அவன் பெருந்தவறிழைப்பினும் பொறுத் தருள்வதே அரசநீதி ; அங்ஙனமிருக்க, நியாயவழக்கில்வந்த தூதனை யும் அவன் பரிவாரத்தையும் அடித்து அவமானித்ததும் போதாமே, அவனைக்கொலையும் புரிந்தால், இந்நாடும் குடியும் பாழாய் விடுமென் பது திண்ணம். தன் அழகிய பூஞ்சோலைகளையெல்லாம் அழித்துப், படைவீரரையும் அருமை மகனையுமே வதைத்துத், தன்னையும் எள ளஞ்செய்த குரங்கையே, அரக்கனாகிய இலங்கேசனுமே கொன்றா னில்லை ;—

கோமாளி : இவனுக்கு வாலில்லையே ; குடுமியில் பந்தங்கட்டிக் கொளுத்தலாமா, அல்லது துவாதசநாமங்களின் மேலும் சூடு போட லாமா ?

திரு. சே. : அசந்தர்ப்பமாய் உளறாமல் வாயை மூடிக்கொள் ; உன்னால் வந்த கேடே இது. அரச ! அவரை ஆறுதல்செய்து, தூதுக்கு விடையளித்தனுப்புவதே பெருந்தன்மை ; மற்றொன்று நினைப்பதும் இழுக்காம், தீராப்பழியுமாம்.

எல்லை : “ பூதலப்பரப்பி னண்டப் பொகுட்டினுட் புறத்துட் பொய்தீர், வேதமுற்றியங்கு வைப்பின வேறுவேறிடத்து வேந்தர், மாதரைக் கொலைசெய்தார்க ளுளரென வரினும்வந்த, தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர் ? ”

வீரண. இனி, என்ன சமாதானஞ் செய்தாலும் போர் விளைந்தே தீரும் ; சோழராசர் தூதனுப்பினதை, அவர் பிரபுக்கள், தளகர்த்தர், ஒருவரும் ஒப்பவே யில்லையாம் ; தங்கள் வழக்கு நியாய மாயிருக்கப், போர்முகத்தில் அதைச் சாதித்து நாட்டுவதே தகுதி என்றார்களாம் ; அரசர்தான், போரினால் குடிகளுக்குண்டாகும் தீங் குகளை உத்தேசித்துத், தமது முக்கிய மந்திரியாகிய இந்த அச்சுத முதலியாரை அனுப்பினராம். பிரதானியவர்கள் கோரிக்கை நிறை வேறுவது இனி உறுதியே. வெள்ளாற் றெல்லைக்குச் சேனைகளுடன் உடனே செல்வதே திறம்.

திரு. சே. : அது மெய்யே : இவ்வளவு நிகழ்ந்தபின், சோழர் ஒரு பொழுதும் சமாதானத்துக்கு இணங்கார். ஆயினும், கைகடந்து விட்ட தவறுக்கு, நம்மாலானமட்டும் ஆறுதல் சொல்லுதல், நமது கடமை, நம்பெருந்தன்மைக்கும் அழகு ; பயன்படுமோ படாதோ அது மற்றொன்று. பூக்கட்டிப் போட்டுக் கடவுளின் திருவுளத்தைச்

சோதிக்கும் சிரமமும் இனி மிகையே. பிரதானியவர்கள் உட்கருத்தே நிறைவேறிற்று.

சாம்ப: நீங்கள் என்னதான் சொன்னாலும், தேசத்தின் க்ஷேமத்துக்கும் கீர்த்திக்கும். ப்ரஸ்தாப விஷயத்தில், என் அபிப்பிராயமே அனுகூலமானது. இந்த ராஜ்ய விஷயத்தில் எனக்குள்ள அபிமானமும்,—

வீரண: அதிலென்ன சந்தேகம்? சொந்த சொத்தைப் போலவே கண்பார்த்து வருகிறீர்கள்.

அரசன்: என்னவந்தாலும் வரட்டும்: அந்த சிவதுவேஷியின் இணக்கமே ஆகாது. சேனைபதி நாளையே புறப்படவேண்டும்.

சாம்ப: நம்முடைய ஸேனைபதியும் ஸேதுபதியும் உள்ளவரை நமக்கென்ன பயம்? சொக்கரடித்துள் சொன்னதுபோலவே முடிந்தது: விதியை விலக்கலாமா?

அரசன்: நான் முன்னமே சொல்லவில்லையா, "மற்றொன்று சூழினும் தான்முந்துறும்," ஊழ். இப்படி வருமென்று யாராவது நினைத்தோமா? இனி நாம் தாமசிக்கலாகாது; அந்தவைணவப்பதர் மகாசூரனென்று பேர்பெற்றவன்; ஆனாலென்ன, சொக்குமாணிக்கமிருக்க நமக்கென்ன பயம்? அவன் கிளம்புமுன், பொன்பேத்தி அறந்தாங்கிக் கோட்டைகளை நாம் பிடித்துக்கொள்ளவேண்டும்; நாளையே சேனைபதி புறப்படவேண்டும்; நம்முடைய சைனியங்கள், திருநீற்றுப்பதிகத்தைப் பாடிக்கொண்டே யுத்தத்துக்குச் செல்லட்டும்; நாள் தவறாமல், நான் விசேஷ அபிஷேகங்கள் அருச்சனைகள் எல்லாம் செய்வித்துச் சொக்குமாணிக்கத்தின் பிரசாதம் படைவீட்டுக்கு அனுப்புகிறேன்; பின்பு ஜயம் நம்மதே.

வீரண: தங்கள் பாதசேவையில் உயிரைவிடவந்தாலும் படைவீரர் பின்னிடார்; ஆனால், இப்பொழுது ஆறுமாதகாலமாக அவர்களுக்குச் சம்பளம் சரிவரக் கொடுபடவில்லை; போர்முகத்தைப் பார்த்து இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேலாகிவிட்டது; கோயிற்றிருப்பணியில் கல்லும் மண்ணும் சுமந்திளைத்து மெய்தளர்ந்திருக்கிறார்கள்; செல்லவேண்டிய சம்பளத்தையாவது கொடுத்துவிட்டால், உற்சாகமாகப் போருக்குப் புறப்படுவார்கள்.

கோமாளி: மேயப்போகிறமாடு, ஒருகட்டுப் புல்லும் கொம்பிலே கொண்டுதான் போகுமா?

அரசன்: அதெல்லாம் பிரதானி தனாதிபதிகளுடன் ஏற்பாடு செய்துகொள்ளும்; நாளைமாலை இந்நேரத்துக்குச், சேனைவழியிலிருக்கவேண்டும். ப்ரதோஷகாலம் அதிக்கிரமித்துவிட்டது; நான் கோயிலுக்குப் போகிறேன்.

சங்க : பணமுட்டு அதிகம் தக்ஸமயம்.

திரு. சே : இந்த யுத்தச் செலவுக்கு நான் பதினாயிரம் வராகன் தருகிறேன் ; என் ஆள்களையும் அனுப்புகிறேன்.

கோமாளி : என்சம்பளப்பாக்கியும் மூன்று பணத்துண்டுவீதம் வட்டியும் கிடைத்தால், நான் முக்கால்பணம் தருகிறேன் ; யுத்த முடிந்து கொள்ளைகளைப்பங்கிடும் ஸமயத்தில், நானும் போகிறேன்.

அரசன் : சேதுபதி இந்த நாட்டுக்கு ஒருகொளுகொம்பில்லையா? ஆனாலென்ன, எல்லாம் அவரைச்சேருவது தானே : அந்தப்பாவிப் பயலோ வம்சத்துக்கு நாசகாலனாய் ஏற்பட்டுவிட்டான் ; போனவிடமே உறுதியாய்த் தெரியவில்லை; இந்தப் பாழ்ங்கட்டை மண்ணோடு மண்ணானபின்பு, வேறுயாரிருக்கிறார்கள் ? நம்ம சோமசுந்தரம் எங்கே, சிலநாள்களாகக் காணோம்?

திரு. சே : என்னோடு கோளம் சென்று வந்ததுமுதல், சங்கீதத்திலும், ஓவியத்திலும், வடமொழிப்பயிற்சியிலும் அதிகப்பற்றுண்டாகிப், பயின்றுகொண்டிருக்கிறான். நான் சொல்லிவரச் செய்கிறேன்.

அரசன் : தீபாராதனை நமக்காகத் தவக்கப்பட்டிருக்கும். அபராதம் ! அபராதம் ! குண்டா, போவோம் வா.

கோமாளி : என்னைக் 'குண்டா' என்றால், நான் அப்புறம் "மஹாராஜா" என்பேன் ; என்பேர் தெரியாதா என்ன ? என்தம்பியே குண்டோதரன். அபிவாதயே சொல்லட்டுமா ? அபிவாதயே, அஸம்பாவித, விகடவிநோத, விதூஷக, த்ரயாரிஷய ః ப்ரவரா ந்வித ః, விதூஷக கோத்ர ః, அஸந்தர்ப்ப ஸூத்ர ః, மதுவர்க்கசாகா அத்யாயை, ஸ்ரீ கோமாளி ராம சர்மாநாம அகம் அஸ்மிபோ ః.

அரசன் : சிவ ! சிவ ! அந்தப்பெயரை என்செவியிற்படச் சொல்கிறாயா துஷ்டா ? இனி அதைச்சொன்னால் உன்னை நிச்சயமாகவே விரட்டிவிடுவேன்.

எல்லை : 'மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரமாம் ; முற்றும், தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும்பதமாம் ; தானே, இம்மையே எழுமை நோய்க்கும் மருந்துமாம் ; இராமன் என்னும், செம்மைசேர் நாமமென்றே செப்புவர் சீரியோரே.'

அரசன் : என்ன, அம்மான்! அவன் தான் சொன்னான், நீர் அதற்கும்மேற் போகிறீரா ? இனி ஆறுமாதகாலம் இங்குவரவும் வேண்டாம், என்முகத்தில் விழிக்கவும் வேண்டாம்.

கோமாளி : என்முகத்திலும் அப்படியே. [திருவேங்கடமாறனும் கோமாளிராமனும் போதல்.]

**வீரண:** அசந்தர்ப்ப சூத்திரம் அம்மானுக்குத்தான்; கோமாளி யையருக்கில்லை.

**திரு. சே:** அரசர் தன்மையை அறிந்திருந்தும் இங்ஙனமோ ஒழுகுகிறது? இங்கு பூஜைக்கு வந்துவிடுவார்கள்; மேல் நடக்க வேண்டியதைப்பற்றி யோசிக்க, ஆஸ்தானமண்டபத்துக்குப் போவோம், வாருங்கள். [திருமலை சேதுபதியும் வீரணன் சேர்வையும் போதல்.]

**சங்க:** மாமா, நாமும் போவோம்: எப்படியாவது, நாளையே இந்தச்சேர்வைகாரனைக் கிளப்பிவிடவேண்டும்; தறிவரிசங்கதிகளைப் பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறான் அவன்.

**சாம்ப:** இம்! அவன் விஷமம் ஏதாவது பண்ணினால், சைனியப்பேரேட்டு ஊழலை நாம் துலக்குகிறது; கூழுக்கு மாங்காய் தோற்குமா? நம்முடைய ஸர்வமானியகிராமங்களும் சோழனுக்குள்ளாகி விடாதபடி, யுத்தத்தை முறுக்கிவிட்டு, அந்தக்கிழம் இன்னும் ஏதாவது நினைத்துக்கொண்டு மாறுவதற்குமுன், சேர்வைகாரனை நாளையே வெள்ளாற்றைப்பார்க்க விரட்டிவிடவேண்டும்.

**சங்க:** அந்தத்தூதனுக்கு நல்லயுக்தி பண்ணினீர்கள்!

(சாம்பசிவசாஸ்திரியாரும் சங்கரசாஸ்திரியாரும் போதல்.)

**எல்லை:** (முன்வந்து) நாணி நலிந்து தாண்மறை விருந்த
பாணனை யாரு மறந்தனர் பார்மின்!
புலவர் அருமை அறிவார் இலரே!
அரசனோ மதியிலி, அமைச்சனோ துரோகி,
உரைசெய்நாத் தீயும் ஒருவன் இளவரசு;
ஈண்டிய பாவலர் யாண்டுமே மேவிய
பாண்டிய நாட்டின் பரிசிது, பாவம்!
நீதியும், வாய்மையும், நெடும்புகழ் நினைவும்,
பேதியா நெஞ்சன், பெட்புற முத்தமிழ்
ஓதி யுணர்ந்த ஒப்பில் புலவன்,
சேது பதியலால், ஏது கதியினி
நாதனி லெற்குமிந் நாட்டிற் கும்மே?
ஆதலின் அவன்பாற் போதால் நன்றும்;
காதுறு செய்தியும் கழறலா கும்மே. [போதல்.]

## மூன்றாங்காட்சி.

**களம்:** மீனாக்ஷியம்மன் கோயில் முன்பு, [**காலம்:** முன்னிரவு.

(நாகப்பன் சேர்வையும் கோடங்கிவேடம்பூண்ட முருகனும் பிரவேசித்தல்.)

**நாகப்பன் சேர்வை:** அர்த்தசாம காலமாச்சுதே, இதுதானா வருகிறவழி? எனக்கே இனந்தெரியவில்லையே.

**முருகன்:** செம்பகத்தின் வீட்டுக்குவந்தேன்; கோயிலுக்குப் போயிருக்காளென்று தாய்க்கிழவி சொன்னாள்; நேராக வருகிறேன்.

**நாகப்:** இங்கே மெய்காவலிலிருந்து தப்பினபிறகு, எங்கே போனீர்கள்? சாத்திரியார் ஆனமட்டும் கசகர்ணவித்தையெல்லாம் செய்து தேடிப்பார்த்தார், அகப்படவில்லையே.

**முருகன்:** தலைபிழைத்தது தம்பிரான் புண்ணியமென்று, நேரே கேரளத்துக்குக் கம்பியை நீட்டிவிட்டோம்; அவர்கையிலே திரும்பவும் அகப்பட்டுப் பிழைக்கவா!

**நாகப்:** நம்மவர் மலையாளத்திலேதான் இருக்கிறாரோ?

**முருகன்:** கொஞ்சம் கிட்டேவா, அண்ணே! பேச்சு யார்காதிலேனும் விழப்போகுது. நம்மவர் நெல்லைக்கு வந்துவிட்டார்.

**நாகப்:** என்ன, நம்மநாட்டுக்குள்ளேயா! சாத்திரியாருக்குத் தெரிந்தால் தொலைத்துப் போடுவாரே.

**முருகன்:** அவர் அறியுமுன் நெல்லைக்கோட்டையும் சீமையையும் பிடித்தாய்விடும்; சேரமான் சேனையும் கூடவுண்டு.

**நாகப்:** என்ன, என்னசங்கதி? நல்லவிளங்கச்சொல்லு.

**முருகன்:** சேதுபதி தூதுபோய்வந்ததுமுதல், சேரமானுக்குக் கோபமாம்; அவருக்கும் சேரமான்தளவாய்க்கும் பிரமாதகலகமும் மனத்தாபமுமாம்; நாங்களும் போய்ச்சேர்ந்து இளக்கவே, சேரமான் தளவாய் கிளம்பிவிட்டான். கப்பத்தையும் நிறுத்தி, நெல்லைக்கோட்டையையும் பிடிக்கவேண்டுமென்பது அவர்கள் ஆசை; நம்மவர் கப்பம் கொடுத்துவிடுகிறது, அவர்கள் நாட்டை இவருக்குப்பிடித்துக்கொடுத்துவிடுகிறது என்றும், ஏற்பாடாயிருக்கிறது; இவருக்கு ராச்சியம்கூட அவ்வளவு தேட்டில்லை; இவ்வளவுக்கும் காரணமாயிருந்த சாத்திரியார் மகளை எப்படியாவது சிறைப்பிடித்து அழித்துவிடுவதாகச் சபதம் செய்திருக்கிறார். ஆகவே, ஒன்றோடொன்று ஒத்துப் போய்ப், பஞ்சும் நெருப்பும்போலப் பற்றிக்கொண்டது.

**நாகப்:** நீ இங்கே வந்த அவசரம்?

**முருகன்:** எல்லாம் அவர் சோலியாகத்தான்.

**நாகப்:** அவர் சோலிதெரிந்ததுதானே; அங்கே மலையாளத்திலே வண்டிவண்டியாய்க் கிடைக்குமாமே.

முருகன் : அதிலே ஒரு சிக்குப் பட்டுக்கொண்டது.

நாகப் : என்ன ? என்ன சிக்கு ?

முருகன் : ஆத்தாடி ! அதெல்லாம் ராசாக்கள் சங்கதி.

நாகப் : என்ன, முருகா, நம்ம பழக்கம் இன்றைக்குத்தானா ? நாகப்பன் உதவியில்லாமல்தான் நீங்கள் தப்பியோடினதோ ? என்னை யொளித்த ரகசியமா ?

முருகன் : இல்லை ; ஆனால் எதாவது தாகத்துக்குச் சாப்பிட்ட வேளையிலே,—

நாகப் : முக்கலக்கள்ளைக் குடித்தாலும் நாகப்பனா அப்படி யெல்லாம் உளறுகிறவன் ? அதோ குடித்துப் போட்டுக் கடைவாச லிலே சாத்திரியார் சாயத்தை வெளுத்துக்கொண்டிருக்கிறானே, அந் தக் குடிகாரப் பார்ப்பான் கோமாளி ஐயனா என்ன, நான் ? சும்மா சொல்லு.

முருகன் : தளவாய்க்கு ஒரு தங்கச்சி இருக்கிறாள் : சிறை யென்றால், ரம்பை திலோத்தமையெல்லாம் அவளுக்கு எதிரில்லை ; நம்ம நாட்டிலேயே அப்படியில்லை.

நாகப் : சாத்திரியார் மகளை விடவா ?

முருகன் : பூ ! சாத்திரியார் மகள் அவளுக்குச் சேலை தப்பக் கூட யோக்கியதை இல்லை ; இந்த நாட்டிலே நான் பாராத சிறையா ? அவளுக்கு இணையேயில்லை. அவளைக்கண்டது முதல் நம்மவருக்கு அவள்மேலே கனகிறுக்கு ; ஆனால் அவள் இசைகிறாளில்லை. அவ ளுக்குச் சேதுபதி மகன்பேரிலே இட்டமாம். அந்த நாட்டு வளமை தான் தெரியுமே : நம்மவர் முண்டுகொடுத்துச் சப்பந்தம் பண்ணிக் கொள்வது சேரமானுக்கும் இட்டந்தான், தளவாய்க்கும் இட்டந் தான். ஒருவிதமாக அது முடியுமட்டும், அங்கே கொஞ்சம் யோக் கியதையாக இருக்கவேணும், வெளிப்பழக்கம் கூடாதென்று நான் சொன்னேன் ; அதன்பேரிலே, இங்கே என்ன நடக்கிறதென்று பார்த் துக்கொண்டு,—நம்மவர் சும்மா இருப்பாரா ?—தமக்கும் குண முண்டு, அவளுக்குச் சங்கீதம் சொல்லிவைக்க ஏற்படுத்தி, இவள் மூலமாக மனசைத் திருப்பவும் செய்யலாம் என்றெண்ணி,—செம் பகத்தைக் கூட்டிவரும்படி என்னை அனுப்பினார்.

நாகப் : எனக்கொன்றும் சொல்லியனுப்பவில்லையா ?

முருகன் : அண்ணனையும் கூடவே அழைத்துவரச்சொன்னார்.

நாகப் : இதென்ன உன் கைச்சரக்கா ?

முருகன் : ஆத்தாடி ! அதுவும் அண்ணனிடத்திலா ? மீனா க்ஷித்தாய் எதிரே நின்று சொல்லுகிறேன் : நிசந்தான்.

நாகப் : எப்பொழுது புறப்படுகிறது ?

முருகன் : நெல்லையிலிருந்து தலைவர் அனுப்பின ஆள்கள் இன்னும் வந்திருக்கமாட்டார்கள் : அவர்கள் பிறகேதான் நானும் வந்தேன் ; நேற்றிராத்திரி ஆண்டிபட்டிச் சத்திரத்திலே படுத்திருந்தோம் ; விடியச் சாமத்துக்கு எழுந்திருந்து, வாசற்கதவை வெளியிலே பூட்டித் திறவுகோலைக் குளத்தில் எறிந்துவிட்டு, நான் முன்னால் வந்துவிட்டேன். அவர்கள்வந்து சங்கதியைச் சொன்னவுடனே, இங்கிருந்து உதவிக்குச் சேனைபோகாதா ? நாமும்கூடவே போகிறது.

நாகப் : சேனையும் சேர்வைகாரரும்தான் வெள்ளாற்றுப்பக்கம் நாளையே சண்டைக்குப் புறப்படப் போகிறார்களென்று, நாலுநாழிகையாக ஊரெல்லாம் தமுக்கடிக்கிறதே.

முருகன் : யாராவது போவார்கள் ; வந்தஆள்களாவது திரும்ப மாட்டார்களா ? கூடவே போவோம்.

நாகப் : உன்னை இனந்தெரிந்தால் விடுவார்களா ?

முருகன் : எல்லாம் பூனையிருக்கிற இடத்திலேதான் எலியும் போன் பேர்த்தி யெடுக்கிறது. அண்ணனுக்கே தெரியவில்லையே. செம்பகத்தைக்கூட, யாரும் அறியாமே, ஆண் வேஷம் போட்டுக் கூட்டிவரச்சொல்லியிருக்கிறார். அதோவருகிறாள் : ஒரு வேடிக்கை பண்ணுகிறேன்.

[செம்பகம் கோயிலிலிருந்து வெளியே வருதல்.]

முருகன் : [உடுக்கடித்துக்கொண்டு] நல்லவாக்குச் சொல்லடி, நல்லவாக்குச் சொல்லடி., மலையாளபகவதி ! நல்லவாக்குச் சொல்லடி முண்டே ! இன்னுவருகிறாங்களே, இந்தத்தாய், நித்திய சுமங்கலி, நிதமொருமாப்பிள்ளை, சொகுசான மாப்பிள்ளை, ஆனையோகம் வருகுது, ராசயோகம் வருகுது ; தாயே. கோடங்கிக்கு ஒரு மூடி தேங்காயேனும் கொடுக்கக்கூடாதா, லட்சுமீ ?

நாகப் : என்ன, செம்பகம், கோடங்கி உண்வண்டோலத்தை வெளுக்கிறானே.

செம்ப : முருக அண்ணனை இன்றைக்குத்தானா நான் அறிவேன் ? ஊஷ் ! வேஷத்தைப்பார் வேஷத்தை ! கொல்லத்தெருவிலா ஊசிவிற்க வருகிறது ? நறுக்கித் தறித்துச் செம்மறியாட்டுக் கடாக் கொம்புபோல மீசையும், வேலைகேட்ட வேலையும், கோடங்கி உங்கள் நாளிலே இப்படித்தான் வருவானோ ? தெருவிலே நிற்கவேண்டாம் ; வீட்டுக்குப் போகலாம்.

நாகப்: உனக்கு ராசயோகம் வருகுதாமே, செம்பகம், நானும் வாட்டுமா?

செம்ப: வறட்டுமா தொண்டையிலே விக்கும். சின்ன மகா ராசா போகவிட்டுத்தான் உங்களைக் கண்ணிலே காணுகிறதில்லையே. கோடங்கியைக் கூட்டிக்கொண்டு வாருங்கள், நான் முன்னாலே போகிறேன். [செம்பகம் போதல்.]

நாகப்: முருகன் பூச்சுப் பலிக்கவில்லையே, அவளிடத்திலே.

முருகன்: கைகாரச்சிறுக்கி இல்லையா அவள்! அவளை எத்தயாரால் முடியும்? அதிலேயும் வேடம்போட்டு நாடகம் ஆடுவதிலே அவளுக்கிணை உலகத்திலே ஏது? கூத்திலே சந்திரமதி வேடம்போட்டு மகனுக்குப் புலம்பினதைப் பார்த்துப் போட்டுத்தானே, நம்மவர் அவள் வலையிலே சிக்கிக் கிறுங்கினது. அண்ணாவுக்குத் தான் அவள் சங்கதி தெரியுமே.

நாகப்: தெரியும், அப்பா, தெரியும்: அவள் புருசன் கந்தசாமித்தேவனை, எப்படியாவது மூன்றுநாளைக்குள்ளே வேலையைத் தீர்த்துப்போட்டு, அவளைக்கொண்டுவந்து விடவேணுமென்று, அவர் உத்திரவு பண்ணினதும்; சல்லிக்கட்டுப்பார்க்கவென்று நாம் அவனைக் கூட்டிக்கொண்டுபோய்க் காரியத்தை முடித்ததும், அவள் வரமாட்டேனென்று முரண்டினதும், நூறுவராகனும், கண்டாங்கிப்பட்டுச்சேலையும், காசுமாலையும் முன்னமேகொண்டு கொடுத்துப், பயமும் நயமுமாக அவளை இணங்கச்செய்ததும், அதற்குள்ளே மறந்தா போய்விடும்? நம்மவர்தான் எத்தனை குடியைக்கெடுத்து, எத்தனைபேரைக் கொலை கண்டிருக்கிறார்!

முருகன்: நேரமாச்சுது, போவோம், அண்ணே. [போதல்.]

## நான்காங் காட்சி.

களம்: சாம்பசிவசாஸ்திரியார் வீடு.] [காலம்: முன்னிரவு.

[சாம்பசிவ சாஸ்திரியாரும், சங்கர சாஸ்திரியாரும் பேசிக்கொண்டிருத்தல்.]

சாம்பசிவசாஸ்திரியார்: காலைக்சுற்றின பாம்பு கடித்தாலொழிய விடுமா? இந்த லக்ஷம் வராகனும் கொடுத்திராவிட்டால், சேர்வைகாரன் இவ்வளவு சீக்கிரம் போயிருக்கவேமாட்டான்.

சங்க: ஒரு ஸங்கடம்தீருமுன்பு வேறொன்று வந்துவிட்டதே: இந்தக்கோளத்துச் சனியனுக்கு என்னசெய்கிறது?

சாம்ப: அந்த மஹாபாபிவம்சாரியால் வந்த வினையிது. நெசவுதறிவரியும் சுங்கமும் முன்கையிருப்புமாக எவ்வளவுண்டு?

சங்க : இன்று ஸாயங்காலம் வரை வஸூலானதையும் சேர்த்து, சேர்வைகாரனுக்கு வாய்க்கரிசி போட்டதுபோக, நாலரை லக்ஷம் கையிலிருக்கிறது.

சாம்ப : திருப்பணிக்கு ஏதாவது கொஞ்சம் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் அந்தக்கிழம் விடாது.

சங்க : இரண்டுவருஷமாய்க் கப்பத்தில் விழுக்காடு வந்து கொண்டிருந்ததுபோய், இப்பொழுது யுத்தத்துக்கு மேற்பணம் வேண்டுமென்றாகிவிட்டதே; இதற்கென்ன செய்கிறது?

சாம்ப : செல்லுக்கும் செலவுக்கும் ஸேதுபதியிருக்கிறான்: 'நாடு,' 'நாடு,' என்று பிராணனை வாங்குகிறானே, செலவழிக்கட்டுமே; நமக்கென்ன குருக்ஷேத்திரம் பாழேபோகிறது? அதெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டேன். சேர்வைகாரனுக்குக் கொடுத்ததுமன்றி, நெல்லையுத்தச் செலவும் அவன் பொறுப்பே. நாளைக்கு என்பிள்ளைக்கும் உன்பிள்ளைக்குமா பட்டம் வரப்போகிறது?

சங்க : ஏன், மாமா, வம்சாரியே பட்டத்துக்கு வந்தாலோ? அவன் பாட்டுக்குக் கூத்தியாரைக் கட்டிக்கொண்டு திரிவன், நம்மிஷ்டம்போல் ஸகலத்தையும் நடத்தலாமே.

சாம்ப : அவன் ஸங்கதி உனக்குத்தெரியாது: படுபாதகப்பயலாக்கும். அவனுக்குப்பட்டம் வந்தால், முதல்காரியம், நம்மகுழந்தை காமாக்ஷியை அழித்துவிடுவன்; நாம் ஆயுஸுமுழுவதும் சிரமப்பட்டுத் தேனீசேர்ப்பதுபோலச் சேர்த்திருக்கும் ஸொத்தையெல்லாம் ஒருநிமிஷத்தில் அபகரித்துக்கொள்வன். அடே அப்பா! அவன் பட்டத்துக்கு வருவதாயிருந்தால், உள்ளதைச் சுருட்டிக்கொண்டு ஊரைவிட்டு ஓடவேண்டியதே. நம்மகாமுவை கோயில்ப்ராகாரத்தில் பலாத்காரமாய்க் கையைப்பிடித்திழுத்ததால், நம்முடைய கையில் சிக்கினது, தெய்வானுகூலமென்று நினைத்திருந்தேன்; அவன் சிறைதப்பியோடிப்போனதுமுதல், உள்ளூர எனக்குள்ள மனோவிசாரத்தை நீயா கண்டாய்? இதோபார், போயின்னும் இரண்டுமாசம் ஆகவில்லை, அதற்குள் இரண்டுவருஷகாலமாய் நடந்தேறிவந்த, சேரமானுக்கும் நமக்குமுள்ள அந்தரங்க ஏற்பாட்டை யெல்லாம் குலைத்து, யுத்தத்தை மூட்டிவிட்டான்! பொல்லாதபயல் அவன்.

சங்க : அவனை இனி அடக்கவழி?

சாம்ப : யானையே தன்னைக்குத்தியடக்கும் அங்குசத்தையெடுத்துப் பாகன்கையில் கொடுப்பதில்லையா? இதோ நெல்லையிலிருந்து வந்திருக்கும் ஸமாசாரத்தால், அவன்மேல் ராஜதுரோகம் கரதலாமலகமாய் ருஜுவாய்விட்டது; இனிமேல் பயமன்னியில் ஷிரஸ்ச்சேதம் பண்ணிவிடலாம். தன்மகனுக்குப்பட்டம் கிடைக்கவேண்டுமென்ற

அபிலாசையால், அவனையும் சேரமான் ஸைநியங்களையும் எப்படியாவது ஜெயித்து விரட்டிவிடவேண்டுமென்னும் ஆத்திரம், ஸேதுபதிக்கு அபரிமிதமாயிருக்கிறது ; அவன் ஜீவனோடிருக்கும்வரை, இந்தக்கிழம் என்னசொன்னாலும், செய்தாலும், ஸேதுபதிமகனுக்குப்பட்டம் ஸ்திரமில்லை ; தன் ஸேதுநாட்டை விக்கிரயம்செய்து திரவியமும் ஸைநியமும் சேகரித்தாவது, தான்போய் இந்த யுத்தத்தை முடிப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறான். சோழயுத்தத்தை நிறுத்திச் சேர்வைகாரனையும் ஸைநியத்தையும் தெற்கே திருப்பப்பார்த்தான், அதை நான் தந்திரமாய்த் தடுத்துவிட்டேன் ; இன்று நீயில்லையே : ஸதஸில் வெகு போராட்டம். ஆகவே, ஸேதுபதிகையில் வம்சாரி அகப்பட்டால், எமன் கையிலகப்பட்டதற்கு ஸமானம்தான் ; அதவா, தப்பியோடிவிட்டாலும், ஒருஸமயம் ஜெயமடைந்து விட்டாலுமே, ராஜத்ரோகியென்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு, அவனை வேறுவழியில் ஜோலியைத் தீர்த்துவிடலாம். எப்படியானாலுமே, இனி அவன் செத்தவனே.

சங்க : ஸேதுபதி மகன் பட்டத்துக்கு வந்தால், நம்மபாடு,—

சாம்ப : அபாயம் வருமுன் வந்ததாகப் பாவித்து விசாரப்படுவது மௌட்யமே. அவன் வந்தாலென்ன? நமக்கு ஒரு குறையும் வராது : சேர்வைகாரனைப்போல, ஸேதுபதி அவ்வளவு பிராமணத்வேஷியல்ல. இந்தக்கிழம் இன்னும் ஐந்தாறு வருஷத்துக்காவது இழுத்துக்கொண்டு கிடவாதா? அப்புறம் அவன் ராஜாவானாலும், தகப்பன் மகன் இருவருமே ஸத்யஸந்தர்கள் ; நம்முடைய ஆஸ்தியைத் தொடமாட்டார்கள். ஒருவேளை அதற்குள் ஸேதுபதியும் காலஞ்சென்று விட்டாலோ, அவன் மகன் சுத்தவெகுளி : வெளுத்ததெல்லாம் பாலென்று நினைப்பவன் ; நம்முடைய ஸங்கதியும் அவனுக்கு அவ்வளவு தெரியாது ; அவனை ஸுலபமாய்க் கைவசமாக்கிக்கொள்ளலாம்.

சங்க : சேர்வைகாரனுக்குக் கொடுத்ததுபோக சேஷமுள்ள நாணயத்தை ரொக்கமாக வைத்துக்கொண்டிருந்தால், எதாவது அஸந்தர்ப்பம்வந்து சேரலாகாதே.

சாம்ப : இந்த நெல்லை யுத்தத்துக்குப் பணம்வேணும் ஸேதுபதிக்கு : அவன் கையில் ஆயிரத்துக்கு மேலிராதென்று தோன்றுகிறது ; நான் ஒரே தீர்வையாய்ச் சாதித்துவிட்டேன் ; தன் ஸம்ஸ்தானத்தில் ஒருபாகத்தைச் செட்டிகளிடத்தில் அடைமானம் வைத்துப் பணம் சேர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு போயிருக்கிறான். வீரவாகு செட்டி மூலமாக, இந்தப் பணத்தைக்கொண்டு நாமே அடைமானம் வாங்கிக்கொள்ளலாமென்று எண்ணுகிறேன்.

சங்க: அது வெளிக்குத் தெரிந்துவிடாதா, மாமா? வீர வாகுவே ஒருவேளை நம்மை மோசம் செய்துவிட்டாலோ?

சாம்ப: இதிலெல்லாம் உனக்கு இன்னும் அநுபவம் போதாது. நான் பார்த்துக்கொள்கிறேன்.

[ஒரு பணியாள் பிரவேசித்தல்.]

பணியாள்: யாரோ, தாமோதரனும்; புலவர் தம்பியாம்; இனும் கொடுப்பதாக உத்திரவாயிருந்ததாம்; வந்திருக்கிறான்; பேச்செல்லாம் கவியாயிருக்கிறது.

சாம்ப: வீட்டுக் கணக்கன் இருக்கிறானா?

பணியாள்: ஏதோ கணக்கெழுதிக்கொண்டிருக்கிறார்.

சாம்ப: தனது பற்றுப்போட்டு, அவனுக்கு நாலு வராகன் கொடுக்கச்சொல்லு; அவனை, ஒருவேளை நெல்லைக்குப் போகவேண்டியிருக்கும் என்று, பிரயாணத்துக்கு ஸித்தமாக நாளை ஸாயங்காலம் வரச்சொல்லு.

[பணியாள் போதல்.]

சங்க: யார் அது?

சாம்ப: ஸாவகாசமாய்ச் சொல்லுகிறேன். வீரவாகு செட்டிக்குச் சொல்லியனுப்பினேன்; இன்னும் வரவில்லை. நீயே போய் வந்தால் உத்தமம்; ஒன்றும் சொல்லாமல், கையோடு என்னிடம் கூட்டிக்கொண்டு வந்துவிடுபோதும். அதென்ன பல்லக்குச் சத்தம்?

[ஒரு பணியாள் பிரவேசித்தல்.]

பணியாள்: ஸேதுபதி வந்திருக்கிறார்; அவசரமாய்க் கண்டு பேசவேண்டுமாம்.

சாம்ப: இங்கேயே அழைத்துவா.

[பணியாள் போதல்.]

என்ன ஸங்கதியாயிருக்கும்? ஒருவேளை பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகுமோ? எதற்கும், சங்கரா, நீ யொன்றும் இசைவுக்கேடாய் பேச்சுக்கொடுத்து விடாதே.

சங்க: நான் வாய் திறக்கவேயில்லை.

[திருமலை சேதுபதி பிரவேசித்தல்.]

சாம்ப: வாருங்கள், வாருங்கள், இப்படி இந்த ஆஸனத்தில் இருக்கவேண்டும். என்ன ஸமாசாரம்? ஒரு வார்த்தை சொல்லியனுப்பினால் நான் வரமாட்டேனா?

திரு. சே.: ஒருவேளை, நித்திரையாயிருக்குமோ என்றெண்ணி னேன்; மருமகனோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள் போலும்.

சாம்ப: இந்தத் திருப்பணி வேலை முடியுமட்டும், இராவேது, பகலேது, நித்திரையேது? பொக்கிஷத்தில் மொத்தம் கையிருப்பு லக்ஷத்துப் பதினாயிரம் வராகன் இருந்தது; அதில் லக்ஷத்தை ஸேனா பதிக்குக் கொடுத்தாய்விட்டது; இதுவரையும் வேலைசெய்துகொண் டிருந்த ஸைநிய வீரரும் போய்விட்டார்கள்; பத்து முந்நூறு போரா வது இருக்கட்டும் என்று நிறுத்திவைத்திருந்தேன்; உங்கள்கூட நெல் லைக்குப்போகவும் ஸைநியம் வேண்டியிருப்பதால், அவர்களும் போய் விடுவார்கள். இனிக்கூலியாள் கொண்டுதான் வேலை நடக்கவேண் டும்; ஒருதினம் திருப்பணி தாமசப்பட்டாலோ, நம்முடைய உத்தி யோகமே போய்விடும்; அதற்குத்தான், என்ன செய்கிறதென்று கையைப் பிசைந்துகொண்டு, அம்மானும் மருமகனுமாக யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சே.: அரசும் ஆட்சியும் நிலைத்த பின்னன்றோ மேல் யோசனை? கோமாளி கூறியதுபோல, அரசர் நேற்று உரலாயிருந் தார், இன்று மத்தளமாய்விட்டார். நீங்கள் பிடித்த பிடியைச் சாதித்துவிட்டீர்கள்: சேனாபதியும் சேனையும், வீண் வழக்கும் அநி யாயமுமான யுத்தத்துக்குப் போய்விட்டார்கள்; வென்றாலுமே, தோற்றாலுமே, இரண்டும் ஒன்றே. உங்கள் மானிய கிராமங்களைப் பற்றி இனிக் கவலையில்லை; அதுபோகட்டும்: சேரமான் கப்பம் கொடேனென்று மறுத்ததுமன்றி, நம்மையே விரட்டவும் துணிந்து விட்டானே. அவனுக்குப் புத்திவருத்தவேண்டாமா? திருப்பணி தானா இப்பொழுது பெரிது?

சாம்ப: நீங்கள்தான் காலையில் ராஜஸதஸ்ஸில் வாக்குக் கொடுத்துவிட்டீர்களே என்று, திடமாயிருக்கிறேன். திருப்பணி வேலைக்கென்று நிறுத்திவைத்திருக்கும் முந்நூறு ஆள்களையும், நீங்கள் கொண்டுபோவதில் ஆக்ஷேபமேயில்லை. ஸேதுபதிவாயால் அபயப் பிரசாதம் கிடைக்கவிட்டு, எனக்கென்ன பயம், என்ன கவலை?

திரு. சே.: வாய்சர்க்கரை, கை கரணைக்கிழங்கு என்பது, உங் களுக்கே தகும். ஆள்கள் போதும்; இன்னும் வழியிலும் திரட்டிக் கொள்கிறேன். வம்சாரியும் தளவாய் கண்ணன் தம்பியும், மற்ற யோக்கியதை எப்படியிருந்தாலும், கைதேர்ந்த போர்வீரர்களென்பது உங்களுக்குத் தெரிந்ததே; ஆயினும், ஐந்நூறு பேரைக்கொண்டு, வருஷம் மூன்றானாலும் நெல்லைக்கோட்டையைக் காக்கும் தைரியம் எனக்குண்டு. மகாலிங்கம் அனுப்பின தூதனை விவரமாய் வினவிய தில், ஒரு மாதத்துக்குக்கூடக் கோட்டையிலிருக்கும் தவசமும்

மற்றைப் பண்டங்களும் போதாவென்று தெரியவருகிறது ; அறுப்புக் காலத்தில் திடீரென்று படையெடுத்துவந்து, பயிரையெல்லாம் கொள்ளையாடியும் அழித்தும் விட்டார்களாம். ஆகவே, இங்கிருந்தே, ஐந்தாறுமாதமாவது முற்றுகை தாங்கக்கூடிய தவசமும், பண்டங்களும் கொண்டுபோகவேண்டும். என் கையிலிருந்த பணத்தில் பெரும் பகுதியை, சேனாபதிக்குக் கொடுத்துவிட்டேன். லக்ஷம் வராகனாவது உடனேவேண்டும்,—

சங்க : பதினாயிரம் வராகனுக்குமேல் ஒரு செப்புக்காசுகூடப் பொக்கிஷத்தில் கிடையாது ; அரமனைச் செலவுக்குக்கூட அதுதான் தத்ஸமயம் கையிருப்பு.

திரு. சே. : இந்தக் கதையும் வீண் பேச்சும் வேண்டாம் ; ப்ரதானியவர்களுக்குச் சொல்கிறேன் : என் இயல்பை நன்றாய் அறிவீர்கள் ; நான் பலபேச்சுக்காரனுமல்ல, வாக்கு மாறவுமாட்டேன். நாட்டுக்கு இத்தகைய ஆபத்து வந்துவிட்ட தறுவாயில் உதவாத சொத்து, எனக்குப் பெரிதல்ல. சேரமான் தளவாய்க்கும் வம்சாரிக்கும் கீழ்ப்பட்டுச் சேதுக்கரையை ஆள்வதினும், போர்முகத்தில் இறப்பதே மேன்மை. பணமோ, இந்த நிமிஷமேவேண்டும். இந்தத் தொல்லைக்குப் பயந்தே, முதலில் செட்டிகளைக் கேட்டுப்பார்த்தேன் ; முப்பதினாயிரம் வராகன்தான் கிடைத்தது ; இன்னும் லக்ஷத்துக்குக் குறையாமல்வேண்டும். என் நாட்டில் போதுமான பாகத்தை இறங்கொற்றியாக அனுபவித்துக்கொள்ளலாம் பணம் நாளை காலையில்,—

சாம்ப : லக்ஷம் வராகனா !

திரு. சே. : எங்கிருந்து வந்தது, யார் பணம், என்று நான் கேட்கவேயில்லை. நான் கொண்ட சொந்தக் கடனாகவே பாவித்து, இம்மியும் குறையாமல் இறுத்துவிடுகிறேன். அரசருக்குக்கூடத் தெரியவேண்டாம்.

சாம்ப : ராஜ்யமே தங்கள் குடும்பத்தைச் சேருவதுதானே.

திரு. சே. : சுவரை வைத்துக்கொண்டன்றோ சித்திரமெழுத வேண்டும்? நாளையே நாடு முழுதும் என் கைவசமாகிவிடினுமே, மறுபேச்சின்றி இந்தக் கடனையிறுத்துவிடுகிறென் : நான் வாக்குமாற மாட்டேன் என்பதையும் அறிவீர்கள்.

சாம்ப : சந்திரஸூரியாள் திசைமாறி யுதித்தாலும் அதேது ?

சங்க : திடீரென்று லக்ஷம் வராகனுக்கு எங்கேபோகிறது ?

திரு. சே. : அதெல்லாம் எனக்குத்தெரியாது நாளைக்காலையில் நான் சொன்ன நிபந்தனைப்படி பணம்வேண்டும். இல்லாவிடின்,

'ஆபத்துக்குப் பாவமில்லை,' என்று, நீங்களே சொல்வதுண்டே; நாட்டுக்கு வந்தகேடு நாட்டாருக்கெல்லாம் பொதுத்தானே? பொறுக்கி நாலுவீடுகளைச் சோதனை செய்தால், ஒரு லக்ஷத்துக்கு நாலு லக்ஷம் கிடைத்துவிடும்; கிடைக்கக்கூடிய வீடுகளும் தெரியும்: முதலில் என் வீட்டையே சோதிப்போம்; பின்பு உங்கள் வீடும், உங்கள் மருமகன் வீடும்;—நம்மினும் நாட்டுக்கு வேண்டியவர்கள் யாரிருக்கிறார்கள்? இதுவே கடைசி வழியாக எண்ணியிருக்கிறேன்.

சாம்ப: அப்படி யொன்றும் வேண்டாம். தாங்களும் சும்மா சொல்லுகிறீர்களே யொழிய, தங்கள் அடியை மிதித்தோர்க்குக்கூட அப்படிப்பட்ட துர்யுக்திகள் தோன்றாது. ஏன், சங்கரா, உன் அம்மாமி ஏதோ சில ஆபரணங்களை விற்ற பணமும், சீட்டுவிழுந்த பணமுமாக, கையில் வைத்துக்கொண்டிருந்தாளே; தன்பேருக்கு நிலத்தில் போடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாளே, என்னசெய்தாள் தெரியுமோ?

சங்க: நேற்றுக்கூட என்னிடம் சொன்னாள்; அவளைக் கேட்டு,—

திரு. சே. நான் அணுவும் சொல் தவறமாட்டேன்; நாளைக் காலையில் தானுபதியை அனுப்புகிறேன், பணத்தையுடனே அனுப்பி விட்டு, ஒற்றிச் சொத்துக்களைப்பற்றி அவனுடன் ஏற்பாடுசெய்து கொள்ளுங்கள். நடுநிசியாகிறது, நான்போய்வருகிறேன்.

சாம்ப: பணம் பெண்டுகள் பணம்;—மெள்ளப்பார்த்து இறங்குங்கள், படி வழுக்காமல்,—தங்கள் தயவையும், தேசத்துக்கு வந்திருக்கும் ஆபத்தையும் உத்தேசித்து,—

திரு. சே.: ஒன்றும் பயப்படவேண்டாம் பணத்தைப்பற்றி; அதிகமாய்ச் சொல்லவும்வேண்டாம்; இந்த சமயத்தில் உதவியதை மறக்கமாட்டேன். பணத்தைமட்டும் அதிகாலையில் அனுப்பிவிடுங்கள். நில்லுங்கள்; நான் போய்வருகிறேன். [போதல்.]

## ஐந்தாங் காட்சி.

களம் :—சேதுபதி வீடு.] [காலம் :—நள்ளிரவு.

[சோமசுந்தரசேதுபதி யாழ் வாசித்துக்கொண்டு பாடுதல்.]

இராகம்—ஆனந்த பைரவி : தாளம் : ரூபகம்.

பல்லவி.

"செல்லாயோ விரகம் சொல்லாயோ."

அநுபல்லவி.

மெல்லவென் உள்ளம் மயக்கி உருக்கியே
அல்லல்வி ளைக்குமா தவியண் டையிலே—செல்.

சரணம்.

அஞ்சுகணை விஞ்சை மதன் மிஞ்சிடவே
பஞ்சைஎன் மீது பாபாத் தெய்கிறான் ;
கொஞ்சு கிளியவள் அஞ்சனக் கண்களென்
நெஞ்சுமுன் நிற்கும் ஐயோ !
வஞ்சியவள் கிஞ்சுகவாய்ச் செஞ்சொல்களைப்
புந்தியழிந்து புலம்புவேனோ பாவி !
பஞ்சவர்ணச்சிறை அஞ்சுகமே உனைக்
கெஞ்சுகிறேன், தஞ்சம், உயிர் துஞ்சிடுமுன்—செல்.

கோடிஸர்ப்பத்தின் ஸிரஸிலுள்ள நாகரத்நத்தைப்போல, ஒரு கொடிய மூர்க்கன் வசமன்றோ அவளிருக்கிறாள் ; அவனுக்கும் என் தந்தைக்குமோ தீராப்பகை ; இனி நான் சோநாட்டுக்குச் செல்லும் வழியையும் காணேன் ; எத்தனைநாள், அவள், தன் தமையன் சொல்லைமீறி, எனக்காகக் காத்திருப்பாள் ? பெண்களும் ஆண்மையைவிரும்பும் அவள் திவ்யஸௌந்தரியத்தை, நான், எவ்வண்ணம், எக்காலத்தில் அடையப்போகிறேன் ? என் தந்தையுடன் நான் கோளத்துக்குப் போகாமலிருந்தேனில்லையே ! சீ ! இதென்ன மௌட்டியம் ! அவள் கட்டழகைக் கண்டுகளியாத கண்களும், அவள் தேன்மொழியையும் வீணைகானத்தையும் கேளாத செவிகளும், பொறிகளாமோ ? சிவகனும் அவளை யாழில்வென்றிருக்கமாட்டான். சித்திரமெழுதுவதில்தான் என்ன விரைவு, என்ன சாமர்த்தியம் ! பவளக்கொடிகள் போன்ற அவள் மெல்லிய விரல்களால் என்னுருவம் எழுதப்பட்டதே இதுவரையும் கைவந்த ஜன்மஸாபல்யம். நானும் எழுதுகிறேனே ! கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி கதைதான். அவள் மந்தஹாஸத்தை ஒருவாறு காட்டிவிட்டேன், அவ்வளவு மோசமில்லை ; ஆனால் அவள் கண்களின் அழகையும், மதர்ச்

சியையும், மருட்சியையும், ஆவியையும், ஆத்மாவையும் அடியோடு கொள்ளை கொள்ளும் குளிர்ந்த ஆசைப்பார்வையையும் என்னால் எழுதமுடியவேயில்லை. அம்பிகாபதியைப்போல,

" உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவ தவியாதென் செய்வேன்—வரியாவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு."

என்று, நானும் நிஜமாகவே சொல்லலாம். அவள் கண்களின் அழகை எப்படி விவரிப்பது? " பிறர் பிறர்க்கெண்ணி நோக்கி யியம்பரும்" தன்மையதாயன்றோ இருக்கிறது. அதை யறியாமலா, ரஸிகசிகாமணியாகிய நாயனார், தகையணங்குறுத்தலை வருணிப்பதில், பத்தில் ஐந்துகவிகளால் கண்களையே புகழ்ந்து கூறினார்! கண்ணை மட்டும் எழுதியெழுதிப்பழக நினைந்து இதில் நூறுகண்களுக்குக் குறையாமல் எழுதியாய்விட்டது. [ஒருசித்திரப் பலகையை எடுத்து.] ஒன்றேனும் அவள் கண்களுக்குச் சிறிதும் ஒப்பில்லையே...

[தருமிநாச்சியார் பிரவேசித்தல்.]

தருமி: இன்னும் தூங்கவில்லையா, சோமு? அதென்ன சித்திரம், நான் வந்ததும் மறைக்கிறாய்? எங்கே, உன் வேலையை நான் பார்க்கக்கூடாதா?

சோமசு: ஒன்றுமில்லை; எதோ எழுதிப் பழகிக்கொண்டிருந்தேன்.

தருமி: இதென்ன, எல்லாம் கண்களால் நிறைந்திருக்கிறதே? தேவேந்திரனது திருமேனியா?

சோமசு: அப்படித்தான் ஏதோவெழுதிப் பழகிக்கொண்டிருந்தேன்.

தருமி: உன்தந்தையாரெங்கே? ஒருவேளை இங்கிருப்பார்கள் என்றெண்ணியே வந்தேன். உன்னிடம் சங்கதிகளைச் சொன்னார்களா?

சோமசு: என்ன விஷயம்? நான் அவர்களைக் காணவில்லையே.

தருமி: நீ எப்பொழுதும் ஏடும், சித்திரக்கோலும், யாழுமாக இருக்கிறாய்; அவர்களுடன் சாப்பிடக்கூட வருகிறதில்லை. உனக்கு வரப்போகிற பெரும்பதவிக்குத் தக்கபடி நீயிருக்கவுமில்லை; நாட்டு விஷயங்களைப்பற்றி நீ விசாரிக்கிறதேயில்லை.

சோமசு: அம்மே! ஐயா அவர்களிருக்க, எனக்கேன் அவ்விதக் கவலைகள்? என்னபதவி வரப்போகிறது எனக்கு?

தருமி : முன்பொருநாள் சன்னையாகச் சொன்னாராம்; நேற்று மாலையும், திரும்பவும் இன்று காலையும் அரசரே வாய்விட்டு ராசசபையில் சொன்னாராம்; நாடெங்கும் பிரஸ்தாபப்படுகிறது: நீ இளவரசனாகி, அவருக்குப் பின்பட்டத்துக்கு வரவேண்டுமாம்.

சோமசு : இளவரசர்தான் ஒருவர் இருக்கிறாரே ?

தருமி : அந்தச் சண்டாளன் பேர்சொன்னாலும் குடிப்பெண்கள் நடுங்குகிறார்கள் ; நாட்டில் ஒருத்தியேனும் உத்தமபதிவிரதையாயிருந்தால், அவள் கற்பின் மகிமையினாலாவது, அந்தப்பாதகன் பட்டமாளாமல் போகவேண்டும். இத்தனை நாளும் தானாக ஊரையழித்தது போதாமே, இப்பொழுது சேரமானோடு சேர்ந்துகொண்டு, நாட்டையே கெடுக்கத் தலைப்பட்டிருக்கிறானாம்.

சோமசு : அதென்ன அம்மா! நானொன்றும் கேள்விப்படவில்லையே.

தருமி : அவனும் சேரமான் தளவாயுமாகப் படையெடுத்து வந்து, நெல்லைக் கோட்டையைச் சூழ்ந்துகொள்ள விருக்கிறார்களாம். நம்ம மகாலிங்கத்தினிடத்திலிருந்து ஆள்கள் வந்திருக்கிறார்கள் ; இங்கேதான் சாப்பிட்டார்கள். உன் தந்தையார், நம்மசேதுக்கரைநாட்டில் ஒருபாகத்தை அடைமானம் பண்ணிப் பணம் சேர்த்தாவது, இன்னும் இரண்டு நாள்களில் ஆளும் பண்டமும் சேகரித்துக்கொண்டு, சண்டைக்குப் புறப்படப்போகிறார்கள் ; இவர்கள் ஊரைவிற்கும்படி, நாடும் அரசும் அஸ்தமித்துப்போய்விட்டது.

சோமசு : சேரமான் தளவாய்மட்டுமோ,—[மறைவாய்] ஐயோ! என் மனம் பதறுகிறதே! அந்தப்பாவி மூலமாய் என் மாதவிக்கு என்ன ஆபத்துண்டாகுமோவே?

தருமி : சேரமான் தளவாய் சேனையும், இந்த ஊர்ப்பழிகாரனும்.

சோமசு : அம்மே! ஐயா அவர்களுடன் நானும் செல்வேன்.

தருமி : உன் தந்தையாரும் அப்படியே தான் விரும்புகிறார்கள் ; நான்தான் தடுத்துச்சொன்னேன் ; இளவரசுக்குரிய நீ இங்கேயே இருக்கவேண்டுமென்று, அரசரும் விரும்பினாராம் ; உன் தந்தையார், ஒரே பிடிவாதமாய், நீயும் கூடப்போகவேண்டுமென்றே சொல்கிறார்கள் ; அவர்கள் சொல்லிவிட்டால், மாறுவதுண்டா? நீ இஷ்டப்படாவிட்டாலும் போகவேண்டுமாம்.

சோமசு : அவர்கள் யுத்தத்துக்குச் செல்ல, இந்தவயதில் நான் வீட்டிலிருந்தால், பேடியென்று என்னை நாட்டார் ஏசார்களா?

[திருமலைசேதுபதி பிரவேசித்தல்.]

ஐயா! கும்பிடுகிறேன்.

திரு. சே: சிரஞ்சீவியாய், சுகமாயிரு! சோமு, உன்னைக்காணவே இல்லையே; அரசர்கூடவிசாரித்தார். தருமி, மகனிடம் சங்கதிகளைச் சொல்லினையா?

தருமி: சொல்லிக்கொண்டிருந்தேன், நீங்களும் வந்தீர்கள். அவனும் உங்களுடன் யுத்தத்துக்குச்செல்ல விரும்புகிறான்.

திரு. சே: என்மகனே! [அவனைத்தழுவிக்கொண்டு.] இப்பொழுதுதான் என்கவலை நீங்கிற்று, என் மனமும் குளிர்ந்தது. கோபிலென்றும் திருப்பணியென்றும் ஓயாதபயித்தியம் பிடித்து, ஒருநயவஞ்சகப்பார்ப்பான் வலையிற்சிக்கி, நாட்டையெல்லாம் பாழாக்கி, பாண்டியநாடென்று முன்பு சிங்கசொப்பனமாயிருந்ததுபோய், இப்பொழுது யாரும் இகழும்படி செய்துவிட்ட ஓரரசனுக்குப்பின், யாழும் சித்திரக்கோலுமே கதியாக வீண்பொழுதுபோக்கும் ஒருபேடிபட்டத்துக்கு வந்தால், நாடு இன்னும் அலங்கோலமாய் விடுமேயென்று, மனம் வருந்திக்கொண்டிருந்தேன்; அவ்வாறுவதினும், யுத்தவீரமும் மனோதீரமுமுள்ள அந்தப்பாவியேனும் பட்டத்துக்குவருவதே திறமென்று கூட நினைத்தேன்; இப்பொழுது தான் என்கிலேசம் ஒழிந்தது. சோமு! நாம் நாளையே புறப்படவேண்டும்.

சோமசு: ஐயா! நான் இப்பொழுதே சித்தமாகிறேன். [போதல்.]

திரு. சே: தருமி! இப்பொழுதுள்ள என் உளமகிழ்ச்சியை என்னென்று சொல்வேன்! ஒரேமகன், ஊழ்வசத்தால் அரசாட்சிக்குரியவன், வெறும்பேடிபோலிருக்கிறானேயென்று நொந்துக்கொண்டிருந்தேன்; இனிக்கவலையில்லை.

தருமி: உங்களுக்குப் பிறந்தபிள்ளையில்லையா? விதையொன்றுபோடச் சுரையொன்று முளைக்குமா? இதெல்லாம் விளையாட்டு; குடியென்றும் கூத்தியாளென்றும் கெட்டுப்போகாமல், இப்படியாவதிருக்கிறானேயென்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. சே: அது மெய்யே: இந்தயுத்தமுடிந்து வந்தவுடன், இனித்தாமசிக்காமல், அவனுக்குக் கலியாணமும் நடத்திவிடவேண்டும்; நாம் இதுவரையும் நினைத்திருந்தபடி, பாளையப்பட்டுப் பெண் ஒன்று மிசையாது; இராசபதவிக்கேற்க ஒருபெண்ணைத் தேடவேண்டும்; வயது இருபத்தொன்றாய்விட்டது.

தருமி: அவன் குணத்துக்கும் அழகுக்கும் ஏற்றபெண்ணாகவும் இருக்கவேண்டும். நாதா! நானும் கூடவரலாமோ?

திரு. சே: எங்கே?

தருமி: நெல்லைக்கு.

திரு. சே: தருமி, இதென்னபேச்சு? சேதுபதிகளின் மனைவிமார்

வழக்கமாய் முகவையம்பதியாமனைக்கு வெளியேவருகிறதேயில்லை. இந்நாட்டின் அலங்கோலத்தினால் நான் இங்கே நீடித்துத்தங்கும் படி நேர்ந்து, உன்பிரிவாற்றாமையால் உன்னையழைத்து வந்திருக்கி றேன்; இந்த யுத்தம் இரண்டொருமாதங்களுக்குள் முடிந்து,—ஒரு வேளையுடனே முடிந்தாலும் முடிந்துவிடலாம்,—நான் திரும்பிவிடு வேன்; இல்லாவிடின் சாஸ்திரியார் குறையும் பாழாக்கிவிடுவார், கோயிலும் சாமியும் தவிர மற்றொன்றுமிராது. இதற்குள் நீ நெல்லை க்கு வருவதேன்? நாளைக்காலையில், நீ முகவையம்பதிசெல்ல, பல்லக் கும் பரிவாரமும் சட்டமிட்டிருக்கிறேன் இன்னும் இரண்டுசாமநே ரம் தான் உன்கூட நான் இப்பொழுது,—

தருமி: நாதா! இதுவரை நான் உங்கள் சொல்மீறி நடந்தவ ளில்லை, எப்பொழுதும் நடக்கவுமாட்டேன்; சிறுவயது, உங்கள்கூட வரவேண்டுமென்று ஆசைப்படவுமில்லை. நீங்களும் சோமுவும் மூன்றுமாதகாலமாய்க் கோளத்துக்குத் தூது சென்றபொழுதோ, எத் தனையோ தடவைகளில் என்னைத் தனியே விட்டுவிட்டு நீங்கள் யுத் தங்களுக்குச் சென்ற காலங்களிலோ, நான்கூட வந்தேனா, வரவிரும் பினேனா? நெடுநாளைக்குப்பின், எத்தனையோ விரதங்களும் தீர்த்த யாத்திரைகளும் ஓமங்களும் தானங்களும் செய்து, என் மலடிப் பட் டத்தை நீக்க ஒரு செல்வ மகன் பிறந்தான்; அவன் பிறந்த அறை யில் நான் செத்துப் பிழைத்தவளென்று நாடெலாம் சொல்லும்படி படாதபாடுபட்டேன்; அந்த சமயத்திலேகூட, என் தேகநிலைமையை யும் பெரிதாக மதியாமே, எவனோ கன்னடத்தான் இந்நாட்டுப் போர் வீரர் சிலரை மூக்கையறுத்து அவமானப் படுத்திவிட்டானென்று, நீங்கள், தெய்வமே துணையாக என்னைப்போட்டுவிட்டு, திண்டுக்கல் சென்று யுத்தஞ்செய்து, கன்னடத்துவீரர் மூக்குக்கள் ஒரு கப்பறை நிறைய அரசருக்குக் காணிக்கையாக அனுப்பினீர்கள்; அப்பொழு தும் உங்கள் வீரப்பிரதாபத்தைக்கேட்டு மகிழ்ந்தேனேயன்றி, என்னை விட்டுப்போன கொடுமையைப் பெரிதாகப் பாராட்டவில்லை. நாட் டையும் புகழையும் அரசரிலும் பதின்மடங்கு அதிகமாக அபிமானித் துத், தம் சொந்த நன்மையைத் துரும்பாய் மதித்தொழுகுபவர் நீங் களென்பதை, நான் இன்னும் அறியாதவளில்லை. இந்தச் சண் டைக்கு நம் சீமைகளை அடைமானஞ்செய்து ஆளும் பண்டமும் சேர்ப்பதாகச் சொன்னீர்கள், நான் ஏதாவது தடைசொன்னேனா? நீங்கள் நெல்லைக்குப் போவதாகச் சொன்னது முதல்,—நான் வெளி யிலே காட்டிக்கொள்ளவில்லை; என்றால் என்றமட்டும் அடக்கிக் கொண்டிருக்கிறேன்,—எனக்கு ஏதோ நெஞ்சம் பதறுகிறது; சோமு வும் உங்களுடன் செல்வதாக உறுதியானபின், என் மனம் படும் பாட்டை நான் எப்படி விண்டு காட்டுவேன்? இதோ, என் வலக்

கண்ணும், தோளும், புருவமும் துடிக்கும் துடிப்பை நீங்களே பாருங்கள் ; என்ன ஆகாத காலமோ, என்னவரவிருக்கிறதோ, கடவுளுக்குத் தெரியும் ; உங்களேயும் சோமுவையும் பிரிந்து ஒருநாளேனும் என்ருல் இச்சமயம் தனித்திருக்கமுடியாது ; மனோவிசாரமே என்னுயிரை மாய்த்துவிடும். என்மேல் அன்புண்டானல், கடுகளவேனும் என்மேல் இரக்கமுண்டானல், இந்த ஒரு பிரார்த்தனைக்கும் இரங்கி, என்னையும்கூடவே அழைத்துச் செல்லுங்கள்.

திரு. சே : தருமி ! என் கண்ணுட்டி ! அபசகுனம்போல் அழாதே ; உன்னையும் கூட்டிக்கொண்டே போகிறேன். என்ன, மறவர் குலத்தில் பிறந்தவளாக நீ தோற்றவில்லையே, உன் கோழைமையைப் பார்த்தால்.

> " கெடுக சிந்தை கடிதிவள் துணிவே :
> மூதின் மகளிர் ஆதல் தகுமே :
> மேனாள் உற்ற செருவிற்கிவள் தன்னை
> யானை எறிந்து களத்தொழிந் தனனே ;
> நெருநல் உற்ற செருவிற்கிவள் கொழுநன்
> பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே ;
> இன்றும், செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
> வேல் கைக்கொடுத்து வெளிது விரித்துடீஇப்,
> பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
> ஒரு மகனல்ல தில்லோள்,
> செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

என்னும் புறப்பாட்டு, உன்போன்ற ஒரு மறத்தியைப் புகழ்வது தானே.

தருமி : நாதா ! உங்களுக்கேனும் சோமுவுக்கேனும் ஏதாவது வந்துவிட்டால், நான் எப்படிச் சகிப்பேனே அறியேன் ; நினைக்கவே என் மனம் திடுக்கிட்டு நடுங்குகிறது. அப்படி யேதாவது நேர்வதாயிருந்தால், என்னை முதலில் உங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள்.

திரு. சே. : நீ இவ்வளவு கோழையென்று நான் தெரிந்து கொள்ளவில்லையே ; சாவென்ன, எல்லாருக்கும் எந்த நிமிஷத்திலும் வரக்கூடியதுதானே.

தருமி : நீங்கள் அருகே இருக்குமட்டும் நான் ஒன்றுக்கும் அஞ்சமாட்டேன்.

திரு. சே. : என்ன சூரத்தனம் ! நான்மட்டும் போதுமோ ? நூறுபடைவீரரேனும் வேண்டாமோ ? போவோம்வா, வெகுநேரமாய்விட்டது ; நீயும் கூடவருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

**தருமி :** எனக்காக அதிக சிரமம் ஒன்றும் வைத்துக்கொள்ள வேண்டாம் ! என்னைப்பற்றிக் கவலையும்வேண்டாம். புறப்பட இரண்டு மூன்று தினம் செல்லுமென்கிறீர்களே ; நாளையே புறப்படுவதேன் ?

**திரு. சே. :** பணங்கிடைக்கத் தாழ்க்குமென்று நினைத்தேன் ; சாஸ்திரியார் பேராசையால், எளிதில் கிடைத்துவிட்டது ; கூடுமானல் நாளையே புறப்படவேண்டும்.

**தருமி :** அவர் பேராசையால் பணங்கிடைத்ததென்றால் விளங்கவில்லையே.

**திரு. சே. :** நம்ம சீமையை அடைமானங்கொண்டு, அவரே தந்துவிட்டார்.

**தருமி :** என்ன, இளவரசரால் நாட்டுக்குவந்த கேட்டுக்கு, நீங்கள் பூர்வசொத்தை அடைமானம் பண்ணுகிறது ; பிரதானியே கடன் கொடுக்கிறதா ?

**திரு. சே. :** உன் ஐந்து விரல்களையும் பார், மனிதருக்குள்ளும் தாரதம்மியம் அப்படித்தான். இராமனுண்டாலென்ன இராவணனுண்டாலென்ன அவருக்கு ? செல்லுமட்டும் மந்திரி, செல்லாவிட்டால் புரோகிதன். நாடு எக்கேடு கெட்டாலென்ன ? அரசுக்கேற்ற அமைச்சு வாய்த்திருக்கிறது. 'போவோம், வா. [போதல்.]

# இரண்டாம் அங்கம்.

(களம்—நெல்லைக்கோட்டையும், கோட்டைப்புறத்தே பாசறையும்.)

## முதற்காட்சி.

களம் :—கோட்டை மதிலின்மேல் ஒரு காவற்கூடம்.] [காலம் : மாலை.

[சண்முகத் தேவனும் நெல்லையப்பத் தேவனும் பேசிக்கொண்டிருந்தல்.]

நெல்லையப்பத்தேவன் : நான் எட்டாயும், இன்னும் என் சேனை ஆறுதாண்டி இக்கரை வரவில்லை ?

சண்மு. : இப்பொழுதே வெள்ளம் மார்புக்குவருகிறது; தாண்டிய பின்பு பெருக்கெடுத்துக் கண்ணிக்குள் சிக்கினதுபோல் அகப்பட்டுக்கொண்டுவிட்டால் எப்படி என்ற பயந்தான்.

நெல்லை : சின்ன மகாராசா என்ன சொல்லியும், தலைவர் இடங்கொடுக்கவில்லையே ; காலையில்வந்த தூதுக்குப் பதில், பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்று, பழமொழியோதி அனுப்பிவிட்டாரே ; என்ன துணிவு இது !

சண்மு : இந்த மிரட்டுக்கெல்லாம் மசிகிறவரா இவர் ? நம்மூர்க் கோவையில், அந்தப் பழமொழியை வைத்தே ஒரு கவிசொல்லியிருக்கிறார். நேற்றுக்கூடப் படித்துக்கொண்டிருந்தேன் ; துறை,

**கிளவி வேட்டல்.**

மனங்காட்டு மாசனை வான்காட்டுக் கோட்டு மதியிதெனத்
தனங்காட்ட நெல்லைத் தடங்காட்டு மாம்பல் தனிமலர்கள்
தினங்காட்டை வேட்டிடச் சேர்ந்தசெவ் வாம்பல் திறந்திலதால்
பணங்காட் டிகலனக் காட்டொலி யஞ்சாப் பழமொழியே.

நெல்லை : 'சுமைதாங்கி,' என்று ஒரு பாட்டு வருமே, அதெப்படி ?

சண்மு : அந்தக் கவியா ? அது வேறு துறை :

**மருங்கணைதல்.**

உமைதாங்கு மேனி நதிதாங்கு வேணி உருத்திரனை
அமைதாங்கு நெல்லைப் பொழில்வரு வீர்சிலம் பார்ப்பரிக்க
இமைதாங் கரிதிடை யாற்றுதென் றே,என் னிருபுயமும்
சுமைதாங்கி யாக இறக்கிடு வீர் நுந் துணைநகிலே.

நெல்லை : இவருக்குக் கவிபாடும் திறம் எப்படி வந்தது ?

சண்மு : சேதுபதிகூடவே நெடுநாளிருந்து பழகி இவரும்

தேறிவிட்டார். 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்று சொல்வதில்லையா ?

நெல்லை : மதுரைச் செய்தி யொன்றும் இன்னும் தெரியவில்லையே.

சண்மு : பன்னிரண்டு காதத்துக்குக் குறைவில்லை ; வழியெல்லாம் காடுமேடும். தலைவர் சென்ற புதன்கிழமை அனுப்பினசெய்தி எட்டி, அங்கிருந்து புறப்பட்டு வரவேண்டும். ஐந்தாறுபேர் வேகமாய்ப் போவதெப்படி, ஒரு தண்டு வழிப்பட்டு வருவதெப்படி ?

நெல்லை : சீட்டுப்புறாவினிடம் எழுத்தனுப்பமாட்டார்களா ?

சண்மு : அதற்கென்றே தலைவர் நாலுபுறாக்களும் அனுப்பினார் ; பதிலனுப்பியிருந்தால், இதற்குமுன்பே செய்திதெரிந்திருக்கலாம்.

நெல்லை : ஒருவேளை சின்னமகாராசா சொன்னது மெய்யாயிருந்தால், யார் வரப்போகிறார்கள் ? சேனாபதி கன்னடத்துக்கும், சேதுபதி சிங்களத்துக்கும் போயிருக்கிறார்களாமே.

சண்மு : அவர்பேச்சு ஒன்றையுமே நம்பலாகாது ; இந்நாடுசெய்த பாவமெல்லாம் உருவெடுத்துவந்த நாசகாலன்போல வந்திருக்கிறார் அவர் ; அவரால் விளைந்த கேடே இது.

நெல்லை : எப்படியிருந்தாலும், இளவரசரில்லையா அவர் ? நாளையே பட்டத்துக்கு வந்தாலும் வரலாம் ; அப்பொழுது நம்ம தலைவரையும் இந்நகரத்தாரையும் என்ன தான் செய்யார் ? கோட்டைவாசலைத் திறப்பதில்லையென்று தலைவர் ஒரேபிடிவாதமாய்ச் சாதித்து விட்டவுடன், கோளத்துத்தளவாய் அவரைக் கேலிபண்ண, எவ்வளவு கிலேசத்தோடும் சினத்தோடும் திரும்பிப்போயிருக்கிறார் அவர் ! எனக்கு அவரைக்கண்டால் பயமாகவே யிருக்கிறது. எப்படி யிருந்தாலும் அரசர் கூடப்பிறந்த தம்பியில்லையா ? ஒருவேளை, அரசரே, தம் தம்பியை இப்படித்தலைவர் ஏளனஞ்செய்து விட்டதற்காக, சினமுறுவாரென்று எண்ணுகிறேன்.

சண்மு : நம்மதலைவர் என்னவந்தாலும் சரியென்று துணிந்து விட்டார். "ஆறிலும் சாவு நூறிலும் சாவு," என்று பழமொழி ஓதுகிறார்,

நெல்லை : கோட்டைவாசலைத்திறந்து தம்மை ஏற்றுக்கொண்டால், நம்மதலைவருக்குச், சித்திராநதிக்குத் தெற்கேயுள்ள சீமைத்தலைமையெல்லாம் கொடுப்பதாக, சின்னமகாராசாவும் சேரமான்தளவாயும் இரகசியமாகத் தூதனுப்பினார்களாமே ?

சண்மு : இராச்சியமே தமக்கு வருவதாயிருந்தாலும் அப்படிப்பட்ட துரோகத்துக்கு அணுவும் இசையமாட்டார் இவர்.

நேல்லே :—எதிரிகள் தண்டு பதினுயிரமிருக்கும், நம்ம ஆட்கள் முந்நூறுக்கு மேலில்லேயே, மதுரையிலிருந்து உதவிவருகிறதாயும் இல்லேயே, என்று ஒருவேளே மலேந்து,—

சண்மு : அதற்கெல்லாம் அஞ்சுகிறவரா ?

" அலகில்வெற்றியும் உரிமையும் இவையென
அவயவத்தினில் எழுதிய அறிகுறி
அவையெனப்பல வடுநிரை யுடையவர் ;
அடிபுறக்கிடில் அமரர்தம் உலகொடிவ்
உலகுகைப்படும் எனினும், அ தொழிபவர் ;
உடல் நமக்கொரு சுமையென முனிபவர் ;
உயிரைவிற்றுறு புகழ்கொள உழல்பவர்,"

என்று சயங்கொண்டார் பாடியிருப்பது, இவரைப்போன்ற சுத்த வீரரைத்தானே.

நேல்லே : யாராவது உதவிக்குவருமுன் எதிரிகள் வந்து கோட்டையைச் சூழ்ந்துகொண்டால், வெளியேயிருந்து பண்டங்கள் வரமுடியாதே, பண்டசாலேயிலும் ஊரிலுமாகவுள்ள தவசமெல்லாம் இரண்டு மூன்றுமாதத்துக்காவது போதுமா ?

சண்மு : நல்ல அறுப்புச்சமயத்தில் வந்துவிட்டார்கள். வெளியே நின்றும் நெல்வண்டிகள் வருவது நின்றுவிட்டால், ஒருமாதம் கடத்துவதே அரிதாய்விடும்.— அதோ தலேவர் வருகிருர்.

[மகாலிங்கஞ் சேர்வையும் ஓர் அடைப்பைக்காரனும் பிரவேசித்தல்].

மகாலி : இங்கேயா இருக்கிறீர்கள் ? மதுரையிலிருந்து சீட்டுப் புருவந்திருக்கிறது : இந்த எழுத்தைப் பார்த்தால், முன்பு ஒருபுரு அனுப்பினதாகத் தெரியவருகிறது.; அது எங்கோதவறியிருக்கிறது ; இந்தப்புருவைச், சேதுபதி, வழியிலிருந்து அனுப்பியிருக்கிருர் ; ஆளும்பண்டமுமாக வருகிருர் ; நாளேயேவந்துவிடுவார் ; இளவரசர் கூறியதெல்லாம் வெறும்புளுகே.

நேல்லே : ஒருவேளே நாம் அதைரியப்படாமே சும்மா எழுதியனுப்பியிருந்தாலோ ?

மகாலி : அவர் கைப்பட எழுதியிருக்கிருரே ; கிழக்கேயுதிக்கிற சூரியன் மேற்கேயுதித்தாலும் அவர் வாயில் பொய்வருமா ?

சண்மு : நாளேயே எப்படி வந்துவிடக்கூடும் ?

மகாலி : தண்டை விரைவாக நடத்துவதில் அவருக்கு நிகர் யார் ? கன்னடத்துப் போருக்குப் போகும்போது, ஒருநாள் ஐங்காத வழிகூடச் சென்ருேம்.

சண்மு : கேரளத்தார் ஆறுதாண்டிக் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளுமுன், எப்படியாவது வந்துவிட்டால் போதும் ; இல்லாவிட்டால், கோட்டைக்குள் வரமுடியாது.

மகாலி : யுத்த வீரனுக்கு முடியாததொன்றில்லை. அதிலும் அவர் என்ன, சாமானியரா ?

நெல்லை : சின்ன மகாராசாவும் நல்ல யுத்தவீரரில்லையா ?

மகாலி : அவர் புத்திதான் பாழானகாமத்தால் செல்லரித்தது போல் மட்கி, அவர் வீரமெல்லாம் பேடிகைவாளாய் விட்டதே. சேனை அக்கரைவந்து நாள் எட்டாகிறது, இன்னும் யோசனையாகத்தானே இருக்கிறது. மந்திரத்தால் மாங்காய் விழுந்துவிடாதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நெல்லை : சேனை பதினாயிரத்துக்குக் குறைவில்லையாமே.

மகாலி : வெறும்புளுகு ; ஒன்றுக்கு இரண்டு சொல்லுவார்கள்.

நெல்லை : அப்படியே இருந்தாலும், நம்ம மூந்நூறுள் எந்த மூலைக்குக் காணும் ?

மகாலி : ஆயிரங் காகத்துக்கு ஒருகல்தானே.

நெல்லை : சேரநாட்டார் என்ன அவ்வளவு பயங்கொள்ளிகளா ?

மகாலி : இரும்பைக்கடிக்கிற குதிரை மனிதனைக்கண்டால் சும்மாவிடுமா என்று அஞ்சுகிறவர்கள் தானே ? எல்லாம் பெண்ணரசு ; ஆண்களுக்கேது வீரம் ? பலாப்பழமும் தேங்காயெண்ணெயுமாக மேனுக்குத்தான் பளபளப்பு ; ஒருமறக்குஞ்சு கேரளத்தார் ஒன்பதுபேரை விரட்டாதா ?

நெல்லை : போர்யானைகள் உண்டாம்.

மகாலி : யானைப்போரெல்லாம் குரங்கு பேனெடுப்பது போலாகும் : மத்தகத்தில் இரண்டம்பு பாய்ந்தால், திரும்பித் தன்பக்கத்தாரையே மிதித்துக்கொண்டு ஓடிவிடும் ; கேரளத்துயானைகளுக்கு மலைகளிலிருந்து மரங்கள் இழுத்து முரட்டுவேலைசெய்யும் பழக்கமுண்டு ; போர்ப்பழக்கமெல்லாம் வெறும்பேருக்குத்தான். அதென்ன அரவம், படைவரத்தொலி போலிருக்கிறது ? சண்முகரே, பரணிலேறிப்பாரும்.

[சண்முகத்தேவன் உயர்ந்ததோர் பரணிலேறிப் பார்த்தல்.]

சண்மு : ஒன்றுந் தெரியவில்லை.

நெல்லை : சேரமான் சேனை வருகிறதாயிருக்குமோ ?

மகாலி : வந்தாலென்ன ? கிழக்கேபாரும்.

சண்மு : சேரமான் சேனை ஆறுதாண்ட வந்திருக்கிறது.

நெல்லை : இனி நாம் தொலைந்தவர்களே.

மகாலி : என்ன பேடித்தனமிது ? கீழேவாரும், சண்முகரே. நூறு வில்லாட்களைத் திரட்டிக்கொண்டு, ஓட்டமாய் ஆற்றுக்கரைக்குப் போய், ஆறுதாண்டவொட்டாமல் மறித்துச், சிறிதுதவக்கப்படுத்தி விட்டு, அகப்பட்டுக்கொள்ளாமல் திரும்பிவந்துவிடும். அதற்குள், இங்கேவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறேன்.

[சண்முகத்தேவன் பரணிலிருந்து இறங்கிவந்து போதல்.]

சிந்துபூந்துறைக் காவலாளிகள் தூங்குகிறார்களோ ?

[கோபாலகனபாடிகளும், சோணாசல ஓதுவாரும், இன்னும் சிலநகரவாசிகளும் ஓடிவருதல்.]

நகரவா : தலைவர் எங்கே ? தலைவர் எங்கே ? கோளத்துப்படை வந்துவிட்டதே !

மகாலி : ஏன் இப்படிப் பதறுகிறீர்கள், சனங்களே ? படை இன்றுதானா வந்தது ? அது வந்து எட்டுநாளாகவில்லையா ? முதலில், புளுகும்புரட்டுமாக மிரட்டிப்பார்த்தார்கள், பலிக்கவில்லை ; இப்பொழுது பயமுறுத்தப் பார்க்கிறார்கள். எவராலும் அசைக்கத்திருப்ப முடியாத கோட்டைக்குள் இருக்கும் உங்களுக்கு என்னபயம் ? பெரியதோர் சேனையோடும பண்டங்களோடும் நாளையே சேதுபதி வந்துவிடுகிறார் ; பின்பு சேரமான் சேனையெல்லாம் சூறாவளிமுன் பூளைப்பூப்போற்பறந்துவிடும் ; அவர்பெயரைக் கேட்டாலே ஓடிவிடுவார்கள். வனிந்தப்பதற்றம் உங்களுக்கு ? "செம்புகாட்டிய கண்ணிணை பாலெனத்தெளிந்தீர்," என்பதற்கோர் உதாரணமாய்க் காணுகிறீர்களே.

கோபால : மஹா ப்ரபோ ! நான் பிராமணன் ; ஆத்திலே ஸம்ஸாரம், புத்ரி, இரண்டு பேருக்கும் ப்ரஸவகாலம் ; இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கிறது ; இந்த ஸமயத்திலே யுத்தம் வந்துவிட்டால்,—பூ ! பூ ! பூ ! [அழுகிறான்.]

மகாலி : வந்துவிட்டாலென்ன ? நீங்கள் மட்டும் சிரஞ்சீவிகளா, அல்லது காடெல்லாம் எலும்பாய் விடுமா ? இவ்வளவு ஞானமில்லாமல், பிராமணன் என்று சொல்லிக்கொள்கிறீரே, வெட்கமில்லையா ? எல்லாருக்கும் சாவு பொதுத்தானே ? ஆனால், மனோதைரியமும் விவேகமும் உள்ளவர்கள், வாழ்நாள் முடிவில் ஒருமுறையே சாகிறார்கள் ; உம்மைப்போன்ற பேடிகள்தான், ஒவ்வொரு அற்பசங்கடத்திலும் மரணபயத்தையும் துன்பத்தையும் அனுபவித்து, வாழ்நாள் முடியுமுன் பலமுறை செத்துச் செத்துப் பிழைக்கிறார்கள்.

சோணா : ஐயா தலைவரே ! மலைநாட்டுத் தண்டுவந்தவுடன் தாங்கள் கொடுத்த கட்டளைப்படி, என்னிடமிருந்த ஏழு கோட்டையும்

பதக்கே நாலுபடி நெல்லையும் கோட்டைப் பண்டசாலையில் ஒப்பித்துவிட்டேன். எனக்கும், என் பெண்சாதிக்கும், நாலு குழந்தைகளுக்குமாக, இன்று நாழியுரி அரிசியே கொடுத்தார்கள் ; எனக்கு அரைவயிறுகூட நிறையவில்லை.

மகாலி : வயிற்றில் வாட்டத்தைக் காணோமே ? நாணேறிட்ட விற்போல் இருக்கிறதே ? அடா, பாவி ! கடவுள் உனக்கு வயிற்றை மட்டுமோ கொடுத்திருக்கிறார் ? இந்தத் தறுவாயில் இதைவந்து சொல்லவந்தாயே ! சோறுபற்றாமல், உன் மானத்தையும் சுட்டுத் தின்றுவிட்டாயா ? உன்னையும் இந்தப் பிராமணனையும் போன்றவர்கள், சேரமானுக்கோ, மற்றெவனுக்கோ, அடிமைகளாகி வயிறுவளர்க்கச் சிறிதும் பின்வாங்கமாட்டார்கள். இப்படியும் ஒரு பிறவியா ? காட்டு விலங்குகளுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் என்ன ! போங்கள் ; கோயிலுக்குச் சென்று, சேதுபதி சேமமாய் சீக்கிரம்வந்துசேருமாறு, நெல்லையப்பரையும் காந்திமதித் தாயையும் வேண்டிக்கொள்ளுங்கள். எனக்கு வேறு வேலையிருக்கிறது. நெல்லையப்பரே ! பாண்மேலேறிக்கொள்ளும் ; இதோ நான் அனுப்பும் வேவுகாரர் மூலமாக, ஆற்றுக் கரையில் நிகழும் விசேஷங்களை, எனக்குத் தெரிவித்துக் கொண்டிரும்.

அடைப் : யசமான் ஆளனுப்பும்வரை, நாய்க்குட்டி இங்கேயே நிற்கட்டுமா ?

மகாலி : அதுவும் நல்லதுதான். அப்படியேசெய் ; இதோ நாலுபேர் அனுப்புகிறேன். [போதல்.]

## இரண்டாங் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே ஒரு படைவீடு.] [காலம் :—காலை.

[தளவாய் கண்ணன் தம்பியும், வம்சாரி மாறனும், சேனையனும் பிரவேசித்தல்.]

தளவாய் : அந்தக் கழுவேறி அர்த்த ராத்திரியில் வந்து கோட்டைக்குள் போய்விட்டானமே.

வம்சா : கோட்டையைச் சூழ்ந்துகொண்டு உதவிவரவொட்டாமல் தடுக்கவேண்டுமென்று, நான் வந்தது முதல் எட்டு நாளாய்ச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன் ; நீங்கள்தான் ஆற்றுக்குப் பயந்தும், நம்பூதிரி ஜோஸியத்தை நம்பிக்கொண்டும், நாளைவரை யாரும் வரமாட்டார்களென்று சும்மா இருந்தீர்கள். இராத்திரி இக்கரை வந்தவுடனே சூழ்ந்துகொண்டிருந்தாலும், சேதுபதியும் சேனையும் கோட்டைக்குள் போயிருக்கமுடியாது ; அவர்களைப் பிடித்துமிருக்கலாம்.

தளவாய் : அஸ்தமனத்துக்குமுன் ஸைநியமெல்லாம் இங்கே வந்திருந்தால், சரியாய்ப் பார்த்துக் கோட்டையைச் சூழ்ந்திருக்கலாம் ; வில்லாட்கள் செய்த இம்சையால் ஆறு தாண்டுவதே பிரயாசமாய்விட்டது ; எதிரிகள் ஸைனியமென்றே நினைத்தேன் நான் ; பத்து நூறுபேருக்கு மேலிராது, செடிகளிலும் மரங்களிலும் மறைந்துகொண்டு என்ன பாடுபடுத்தி விட்டார்கள் ! நம்ம ஸைநியத்தில் முந்நூறு ஆளுக்கு மேலுண்டு சேதம் ; ஆற்றில் போனது எத்தனையோ, கணக்குப் பார்த்தால்தான் தெரியும். நம்பூதிரியும் நிச்சயமாய்ச் சொன்னார்களே ; இதுவரையும் அவர்கள் ஜோஸியம் தப்பினதுண்டோ ? இராத்திரிக் கோட்டையருகேபோனால், இன்னும் ஏதாவது ஆபத்து வரலாகாதே என்றெண்ணி, விடிந்து சூழ்ந்துகொள்ளலாமென்றிருந்தோம் ; இப்படி அர்த்த ராத்திரியில் அவன் வருவனென்று தெரியுமா ? ஒரு முறுக்கான் பொழுதுக்கு முந்தி ஆறு தாண்டியிருந்தாலும், இப்படி வந்திராது.

சேஷை : சேதுபதிகூட எத்தனை ஆளுண்டு ?

வம்சா : ஆயிரம் தலைக்கட்டுக்குக் குறைவில்லையாம் ; குடும்ப சகிதம், இரண்டு மூவாயிரம் பொதி பண்டங்களுடன் வந்திருக்கிறாராம்.

தளவாய் : அவன் மகனும் வந்திருக்கிறானோ ?

வம்சா : மகன், பெண்சாதி, எல்லாரும் கூடவே வந்திருக்கிறார்கள்.

தளவாய் : கழுவேறி வலிய சமர்த்தன் ! இனிமேல் கோட்டையை பலாத்காரமாய்ப் பிடிக்கமுடியுமோ ?

வம்சா : வெகு சிரமப்படும் ; முடியாதென்றே சொல்லலாம்.

சேஷை : பின்னை, காற்று நுழையவும் இடக்கில்லாமல் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு, தாமே ஆகாரத்துக்கு வழியின்றி வெளியே வரும்வரையும், காத்திருக்கவேண்டியதுதான்.

வம்சா : கோட்டைக்குள் உள்ளதும் இப்பொழுது வந்திருப்பதுமாக, மாதம் ஆறுனாலும் தாங்கும் ; பொதிமாடுகள் கூட உள்ளே போய் விட்டன.

தளவாய் : பாண்டிக்காரர் கோமாம்ஸமும் உண்பார்களோ ?

வம்சா : இல்லை ; பறையர் மட்டுந்தான் மாட்டிறைச்சி தின்பார்கள் ; ஆனால், நாட்டுக்கு ஒரு விபத்து வந்து விட்டால், சேதுபதி பழிபாவம் ஒன்றுக்கும் அஞ்சமாட்டார் ; உயிரைத்திரணமாய் நினைப்பர்.

தளவாய் : ஓ, அது யான் அறிவேன் ; கப்பம் கேட்க வந்த

பொழுது, பாண்டியின் பிரதாபத்தைப்பற்றி அவன் பிரஸ்தாபித்ததை நான் கேட்டிருக்கிறேன். ஆயின், தனக்கே நாடு கிட்டுவதாயிருந்தாலோ?

வம்சா : அது எப்படி முடியும்?

சேஷை : சேதுபதி சேனையோடு மாறனுடைய ஆட்கள் சிலர் வந்ததாகச் சொன்னதுண்டே: அவர்கள் எங்கே? மதுரை வர்த்தமானம் விபரமாய் அறியலாம்.

வம்சா : அவர்கள் என்படை வீட்டிலிருக்கிறார்கள்.

தளவாய் : யாரடோ அவ்விடம்?

[இராவுண்ணி நாயர் பிரவேசித்தல்.]

ராவுண்ணி! மாறனுடைய படைவீட்டுக்குப் போய், இராத்திரி மதுரையிலிருந்து வந்தவர்களைக் கூட்டிக்கொண்டு வா.

வம்சா : நானே போய் அழைத்து வருகிறேன்; இராவுண்ணிக்குத்தெரியாது.

தளவாய் : இன்னாரென்று சொல்லியனுப்பினால் போதாதோ?

வம்சா : இல்லை; நானே பொய்வருகிறேன்.

[வம்சாரிமாறன் போதல்.]

தளவாய் : ராவுண்ணி! நீயும் பின்னாலே போய் ஸூக்ஷமம் தெரிந்துகொண்டு வா. அறியுமோ?

இராவு : ஓ!

[இராவுண்ணி நாயர் போதல்.]

தளவாய் : என்ன, சேஷையன், மாறன் இங்ஙனம் பயப்படுகிறது?

சேஷை : மதுரையிலிருந்து ஒரு போகஸ்திரீ வந்திருக்கிறாளாம்; அதுதான்.

தளவாய் : மஹாதூர்த்தன்! கேவலம் ஸ்திரீபிராந்தன்! இவனுக்கு ராஜ்யம் கிட்டினால், ஒரு ரூபவதியான ஸ்திரீக்காக அதை விற்றுவிடவும் செய்வன்.

சேஷை : இவன் தமையன் இதற்கு நேர்விரோதம்: கோவிலென்றும், கோபுரமென்றும் நாட்டையெல்லாம் பாழாக்குகிறான்; ஸேதுபதி கப்பம் கேட்கவந்ததுகூட, கோயில்வேலைக்குப் பணமில்லாமல்தானும்; அதற்குமட்டும் பணமிருந்தால், ராஜ்யம் எப்படிப்போனாலும் அவனுக்கு விசாரமில்லை; ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு கிறுக்கு.

தளவாய்: பாண்டியெல்லாம் பித்தர்களே. கப்பத்தை நீக்கி, நெல்லைக் கோட்டையையும் நமக்கு விட்டுவிட்டால், இந்த ஸேதுபதிக்கே ராஜ்யத்தைப் பிடித்துக்கொடுப்பதாகப் பேசினால், நம்முடன் சேரமாட்டானோ? அவனுக்கென்ன, ஸேதுக்கரைமட்டுந்தானே இப்பொழுது; பாண்டிராஜ்யமே கிடைப்பதாயிருந்தால், இணங்கமாட்டானோ?

சேஷை: வம்சாரி மாறனோ?

தளவாய்: அவனென்ன, வெறும் ஸ்திரீபிராந்தன்; நம்ம மாதவியை ஸம்பந்தம்பண்ணிவைத்துவிட்டால், சொன்னபடியெல்லாம் ஆடுவன்; ஸ்திரீசோரனுக்கு மானமுண்டோ? அவனுக்காகவே மாதவியையும் கூட்டிக்கொண்டுவந்தது.

சேஷை: மாதவிக்கு ஸம்மதம் தானோ?

தளவாய்: என்ன, சேஷையன், இங்ஙனம் கேட்கிறது? நம்முடைய ஆஜ்ஞையோ, அவள் ஸம்மதமோ? எங்ஙனமாயினும், ஏதோர் யுக்திசெய்தாயினும், பாண்டிக்குக் கொடுக்கும் கப்பத்தையும் சாசுவதமாய் நிறுத்தி, இந்தநெல்லைக் கோட்டைமுதல் கன்னியாகுமரி வரையுமுள்ள சீமையையும் நம்ம கைவசமாக்கவேணும். கப்பத்தை நிறுத்தித்தந்தால், இந்தப்பிரதேசத்தை நான் வைத்து ஆளலாமென்று வலிய தம்பிரான் கல்பனையுண்டு; எங்ஙனமாயினும், அப்படிமுடிக்க வேணும்.

சேஷை: இப்பொழுது இரண்டாண்டாகக் கப்பம்கொடுக்கவில்லை; இந்த மூடபக்திமாறனும் ஸ்திரீபிராந்திமாறனும் உள்ளவரையும் கொடுக்கவும் வேண்டாம்; நெல்லைச் சீமையைப்பிடிப்பது கொஞ்சம் பிரயாசம்; இந்த ஸேதுப்பதியுள்ளவரை சிரமந்தான்.

தளவாய்: அதுதான் அவனைத் தந்திரமாய் இணங்கச் செய்யவேணும்; ராஜ்யத்தை அவனுக்கே ஜயித்துத்தருவதாய்ச் சொன்னால் ஒருவேளை ஸம்மதிக்கலாம்; வம்சாரிமாறனைப்பிடித்து அவன்கையிலேயே ஒப்பித்துவிடுவதாகவும் சொல்லுவோம்; எப்படியாவது, என்னயுக்தி செய்தாவது, இந்தக்கோட்டையை முதலில் நம்மகைவசமாக்கிக்கொள்ளவேண்டும்; அப்புறம், ஸேதுபதிஸங்கதியை நான்பார்த்துக்கொள்கிறேன். என்னை ஸபையில் அவன் அவமானப்படுத்தினது, நேற்றுப்போலிருக்கிறது. நம்பூதிரித்தம்பிரான் ஜோஸியத்தை நம்பி, எல்லாம் வியர்த்தமாய்ப்போய்விட்டது. இராத்திரி அந்தக் கழுவேறி இங்ஙனம் வருவதுமட்டும் தெரிந்திருந்தால், இன்றே காரியமெல்லாம் ஸித்தியாயிருக்கும்; அவனும் இதற்குள் அந்தமரத்தில் தொங்கிக்கொண்டிருப்பன். இனிமேல் வேறுயுக்தியெதாவதுதான் செய்யவேண்டும். இந்த மாறன் என்ன செய்கிறான் நோக்குவோம்.

[போதல்.]

## மூன்றாங்காட்சி.

களம் :—கோட்டையில் தலைவர் அரமனை.] [காலம் :—பிற்பகல்.

[திருமலைசேதுபதி, சோமசுந்தரசேதுபதி, மகாலிங்கஞ்சேர்வை, எல்லையப்பர், சண்முகத்தேவன், இவர்கள் பிரவேசித்தல்.]

திரு. சே. நான் வந்தாலென்ன, மகாலிங்கம்? கோட்டைத்தலைவன் நீ தான் ; எல்லாப் பொறுப்பும் உன்னதுதான்.

மகாலி : சமுகம் விசயமானபின், அடியேனுக்கென்னகவலை? இனிப்பயமில்லை.

திரு. சே. : இல்லாவிடினும் நீ இந்தக் கோளத்துப் பூனைகளுக்குப் பயப்படுகிறவனா? சூரன் எப்பொழுதும் சூரனே ; பாண்டிய நாட்டின் திறவுகோல்போன்ற இந்தக்கோட்டையின் தலைமைக்கு, முன் பின் யோசியாமலா உன்னை நியமித்தது? நம்ம சோமுவையும் கூட வைத்துக்கொள் ; அவனுக்கு யுத்தப் பழக்கம் போதாது ; உன்னிலும் மேலான அநுபோகஸ்தரும், யுத்ததந்திரங்களையும் முறைமையையும் அவனுக்குக் கற்பிக்கவல்லவரும் வேறு யாரிருக்கிறார்கள்? கோட்டையின் இராக்காவலை அவன் பொறுப்பாக்கிவிடு ; பகலில் அவன் நன்றாய்த் தூங்கிக்கொள்ளட்டும். நம்முடைய அநுமதியின்றி, யாராயினுமேசரி, கோட்டைக்குள் வரவும்கூடாது ; வெளியேபோகவும்கூடாது. சோமு! இந்தக்கட்டளையை அணுவும் பிசகாமல் நிறைவேற்றுவது உன்கடமை ; அவசரமாயிருந்தால், நடுநிசியாயினும், என்னிடம் தெரிவித்து உத்திரவுகேட்டுக்கொள்ளலாம் ; அநுமதியின்றிமட்டும் யாரும் உட்புகவோ வெளிப்போகவோகூடாது.

சோமசு : அப்படியே செய்கிறேன், ஐயா.

திரு. சே. : மற்றைச் சங்கதிகளைப்பற்றிக் கோட்டைத்தலைவர் உனக்குச் சொல்லுவார். மகாலிங்கம்! நான் காலையில் நியமித்தபடி, காவல் முறை, படியரிசிச் செலவு, முதலியன நடக்கட்டும்.

[நெல்லையப்பத்தேவன் அவசரமாய்ப் பிரவேசித்தல்.]

திரு. சே. : என் இவ்வளவு ஆத்திரம்? சங்கதி யென்ன?

நெல்லை : கோளத்தாரிடமிருந்து ஒரு தூது வந்திருக்கிறது ; கோட்டைவாசற்புறத்தில் காத்திருக்கிறது.

திரு. சே. : இதற்குத் தானா இவ்வளவு பரபரப்பு! எத்தனை பேர்வந்திருக்கிறார்கள்?

நெல்லை : ப்ரபோ! மூன்றுபேர்.

திரு. சே. : கூடப் படையாட்கள் உண்டா?

நெல்லை : இல்லை, ப்ரபோ!

திரு. சே.: மகாலிங்கம், தளவாய் கண்ணன் தம்பி மோசக்காரன்; பழிக்கு அஞ்சான்; கூடச்சேர்ந்திருக்கும் நம்மவரோ, சொல்லவேண்டாம்; படைவீரரைப் பக்கங்களில் ஒளித்துவைத்திருந்து, கதவைத் திறந்தவுடன் திடீரென்று கோட்டையைக் கைக்கொள்ளப் பார்ப்பார்கள்; நாம் கோட்டை மதிலிலும் அவர்கள் கோட்டை அகழுக்கு வெளியிலுமிருந்து இவ்விதமான தூது கேட்கவும் பதிற்சொல்லவும், தக்க ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். இப்பொழுது, நீயே சென்று பரிசோதித்து, தூதரைத் திட்டி வாசல் வழியாக உள்ளேவிட்டு அழைத்துவா.

மகாலி: உத்திரவுப்படி செய்கிறேன்.

[மகாலிங்கம் சேர்வையும் நெல்லையப்பத்தேவனும் போதல்.]

சண்முகம், இந்தக் கோட்டைப் படம் எங்கே?

சண்மு: இதோ இருக்கிறது, ப்ரபோ!

[ஒரு படத்தைக் கொடுத்தல்.]

திரு. சே.: இதென்ன, காடடர்ந்த இந்த மூலையில், ஒரு சிறு வாசல்போலிருக்கிறது? ஈசானிய மூலையில் வாசல் ஏது?

சண்மு: ஒரு பழைய சுரங்கவாசல் அது; கோளத்தார் படைவீட்டுக்கு நேராகவிருக்கிறது.

திரு. சே.: எவ்வளவு பெரிதிருக்கும், அடைப்பென்ன?

சண்மு: ஒரேஆள்தான் நுழையலாம்; காட்டில் மறைபட்டிருக்கிறது; எல்லாருக்கும் தெரியாது; பலமான இருப்புக் கதவுண்டு.

திரு. சே.: காவல் எத்தனை பேர்? காவல் கணக்கில் வரவில்லையே?

சண்மு: அதற்கென்று காவல் ஏற்படவில்லை.

திரு. சே.: முழுமோசம்! இப்படிப்பட்ட ஆபத்துக்காலத்தில், யாரையும் நம்பலாகாது; மகாலிங்கம் என்னிடத்திற் சொல்லவில்லையே.

சண்மு: பிடாரி மூலை வாசல் என்று பெயர்; துஷ்டதேவதைகளின் உபத்திரவம் அதிகம்; பகலிற்கூட அங்கே தனியேபோகச் சனங்கள் அஞ்சுவார்கள்.

திரு. சே.: கண்ணன் தம்பியும் இளவரசரும் பிடாரிக்குப் பயப்படுகிறவர்களல்ல; பிடாரிதான் அவர்களுக்கு நடுங்கவேண்டும். சோமு! நீ இப்பொழுதே சென்று அதைப் பரிசோதித்துப்பார்த்து, கதவை வேண்டுமாயின் இன்னும் பலப்படுத்தித் தாளிட்டு, உன்

முத்திரையும் வைப்பதன்றி, இராப்பகல் இடைவிடாது காக்க ஒரு காவலையும் நியமித்துவிடு ; சண்முகம், நீ கூடப்போ.

சண்மு : சித்தம், ப்ரபோ.

[சோமசுந்தர சேதுபதியும் சண்முகத்தேவனும் போதல்.]

திரு. சே. : அம்மான், என்ன சும்மா இருக்கிறீர்கள் ? சிந்தாமணி ஆராய்ச்சி எவ்வளவில் நிற்கிறது ?

எல்லை : காந்தருவதத்தை மணம் நடக்கிறது : தமிழாராய்ச்சியில் நம்முடைய சோமசுந்தரத்துக்கு முன்போன்ற ஊக்கமில்லை ; முழுமனமும் செல்லவில்லை ; தங்களிடம் தனித்துச் சொல்ல நினைத்திருந்தேன் : காதற்குறிகள் தோன்றியிருக்கின்றன.

திரு. சே. : ஏதாவது அந்தரங்கம் தெரியுமோ ?

எல்லை : ஒரு முறை குறிப்பாய் வினவினேன் : சரியாய் விடைதரவில்லை.

திரு. சே. : யாராயிருக்கக்கூடும் ? வயதுக்குத்தக்க வேட்கையேபோலும். இந்த யுத்த முடிந்தவுடன் அவனுக்கு விவாகம் நடத்தவேண்டும்.

எல்லை : சோழன் மகள் நல்ல அழகி.

திரு. சே. : அரசர் ஒப்பமாட்டார்.

எல்லை : அது மெய்தான் ; ஆனல் கூரிய அறிவுள்ளவள் : நான் சென்றிருந்தபொழுது அவளுக்குப் பத்துப் பன்னிரண்டு வயது தானிருக்கும் ; அப்பொழுதே கவிபாடுவாளென்று சயதரர் சொன்ஞர் ; நான் வேடிக்கையாக, "வையை நதியை மதி." என்பதைக் கடையடியாகவைத்து, ஒரு வெண்பாச் சொல்லவேண்டினேன். சிறிதுநேரம் எண்ணியிருந்து, பின்பு,

> இல்லாதா ரன்றி யெவரே எழிற்பொன்னி
> நல்லாறு விட்டிந்த நானிலத்திற்—பொல்லாத
> பொய்யைப் புகன்றிடுவார் போற்றிப் புகழ்ந்திடுவார்
> வையை நதியை மதி.

என்று கடைமொழிமாற்ருகவும் இருபொருள் படவும் கூறினுள்.

திரு. சே. : வாய்மையும், தேசாபிமானமும் நன்கு துலங்குகின்றன.

[மகாலிங்கஞ் சேர்வை, சேஷையன், இராவுண்ணி நாயர், முருகன், இவர்கள் பிரவேசித்தல்.]

சேஷையரா ? வாருங்கள் சுவாமி ; கும்பிடுகிறேன்.

சேஷை : சர்வமங்கள ஆசீர்வாதம் ! எல்லாரும் க்ஷேமந் தானே ?

திரு. சே.: எல்லாம் பெரியோர் கிருபை.

மகாலி: சமுகத்திலே ஒரு விண்ணப்பம்: இதோ பதுங்கி ஒளிகிருனே, இந்த முருகன், இராசதுரோகி; இவனை, எங்கே, யார் காணினும், பிடித்துச் சிறைப்படுத்தி, அரசருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கட்டளை பிறந்திருக்கிறது.

சேஷை: என்னுடன் வந்தவன் அவன்; தளவாயும் உங்கள் இளவரசரும் இராவுண்ணியையும் அவனையும் என்னுடன் ஸகாயத்துக்கு அனுப்பினார்கள்; தூதென்று நம்பிவந்தோரைச் சிறைப்படுத்தல் தர்மமல்ல.

திரு. சே.: நம்முடைய அந்தஸ்துக்கு இவர்கள் போதுமென்று தளவாய் அனுப்பினரோ?

சேஷை: தாங்கள் அப்படி யெண்ணிக் கோபிக்கலாகாது; நான்தான் தூதாகவந்தவன்; எனக்குத் துணையாக வந்தவர்களே இவர்கள்.

திரு. சே.: ஆனால் அவர்கள் வெளியேபோய் நிற்கட்டும்.

சேஷை: ராவுண்ணி! நீயும் அவனும் வெளியே போயிருங்கள்.

[இராவுண்ணி நாயர் போதல்]

முருகன்: நான் போகமாட்டேன்; கூடவேயிருக்கும்படி சின்னமகாராசா கட்டளை.

சேஷை: என் சொல்லை மீறி நடப்பவனோ நீ?

முருகன்: என் எசமானர் நீங்களல்ல.

திரு. சே.: அவன் சும்மா இருக்கட்டும்; இளவரசர் சந்தேகங்கொண்டு அனுப்பினர்போலும். இங்கே கரவுமில்லை, வஞ்சகமுமில்லை; அவனுமிருந்து நடப்பதைப் போய்ச் சொல்லட்டும்; ஆனால் மத்தியில் தன் ஊத்தை வாயைத்திறந்து ஏதாவது பேசினால், நாவை யறுத்துவிடுவேன்; இனியிங்கே வந்தாலும், கையில் அகப்பட்டாலும், விடுவதுமில்லை. தூதுவந்த விபரத்தைச் சொல்லுங்கள். கப்பம் கொண்டுவந்திருக்கிறீர்களா?

சேஷை: கப்பந்தானா பிரமாதம்; நாட்டையே தங்களுக்குத் தரவந்திருக்கிறேன்; தங்களுடன் அந்தரங்கமாய்ச் சொல்லவேண்டும்.

திரு. சே.: இவர் கோட்டைத் தலைவர்; இவர் எங்கள் ஸம்ஸ்தான வித்வான்; நீங்கள் சொல்லக்கூடியதும், இவர்களுக்குத் தெரியலாகாததுமான அந்தரங்க சமாசாரம் என்னவிருக்கிறது? அவனோ, உங்கள் கூடவந்தவனே. முன்பே சொன்னேனே: இங்கு கள்ளம் கவடு ஒன்றுமில்லை; சொல்லவந்ததை தாராளமாய்ச் சொல்லலாம். கப்பம் கொண்டுவந்திருக்கிறீர்களா, இல்லையா?

சேஷை : தங்களுக்கு நாட்டையே தரவந்திருக்கிறேன்.

திரு. சே. : நீங்கள் சொல்வது புலப்படவில்லையே : சோநாட்டை எனக்குக்கொடுக்க நாட்டுத்தளவாய்க்கு என்ன சுதந்தரம் ? தூது அரசரிடமிருந்தா தளவாயிடமிருந்தா ?

சேஷை : அப்படியில்லை : பாண்டியநாடு இப்பொழுது பல காரணங்களினாலும் சீரழிந்திருப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே ; ராஜனுக்கும் தள்ளாத வயதாய்விட்டது ; இளவரசரோ, தங்களுக்கு நான் சொல்லவேண்டாம் ; வேறு ஸந்ததியுமில்லை ; எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்னம், எங்கள் ராஜ்யம் தளர்ந்திருக்கும்பொழுதுவந்து, அதிஷ்டவசத்தால் ஜெயங்கொண்ட ஒரு பாண்டியனுக்கு, ஆண்டுதோறும் ஐயாயிரம்பொன்னும் ஒரு யானையும் கொடுப்பதாக வாக்குக்கொடுத்தது தவறக்கூடாதென்று, அதையொரு பெரிதாக மதியாமல், இதுவரையும் கொடுத்து வந்ததேயொழிய, எங்கள் அரசர் கீழ்ப்பட்டவரென்றாவது, கப்பமென்றாவது நினைத்துக்கொடுத்துவரவில்லை ; வேறுவிதமாக இப்பொழுது சுதந்தரம் பாராட்டிக்கேட்கவே, அதை முற்றிலுமே நிறுத்திவிட்டோம் ; அப்படி நிறுத்தியதை ஒப்புக்கொண்டு, நெல்லைக்கோட்டையையும் சீமையையும் எங்களுக்கு விட்டுவிட்டால், பாண்டியநாட்டில் சேஷமானபாகத்துக்குத், தங்களையே ராஜனாக்கிப் பட்டாபிஷேகமும் செய்விக்க, தளவாய் சித்தமாயிருக்கிறார்.

முருகன் : இந்த நெல்லைச் சீமை, எங்கள் சின்னமகாராசாவுக்கு.

திரு. சே. : அடாபதரே ! நான் சொன்னதை மறந்துவிட்டாயா ? இனி உன் ஊத்தைவாயைத் திறந்தால், இராஜராஜேஸ்வரியாணை, உன் நாவைக்கொய்துவிடுவேன்.

சேஷை : நீ பேசாதே, நான்தான் சொல்கிறேனே : பாண்டியின் தென்பாதியை, எங்கள் அரசருக்குக் கப்பம் செலுத்தி, வம்சாரி மாறனே ஆண்டுவருவார்.

மகாலி : குதிரை தூக்கிப்போட்டதுமன்றிக் குழியும்பறிக்கிறது !

திரு. சே. : இப்பொழுதுள்ள எங்கள் அரசரோ ?

சேஷை : அவருக்கென்ன, மஹாபக்திமான் ; திருப்பணி வேலையே சதாவிசாரம் ; அதற்குத்தக்கபடி ஏற்பாடுசெய்துவிடுகிறது.

திரு. சே. : எங்கள் இளவரசருக்கு இது சம்மதந்தானா ?

சேஷை : அவர் முதலில் சம்மதிக்கவில்லை ; ராஜ்யம் முழுமையும் தம் கைவசப்படுத்தினால் மட்டும் கப்பம் தருவதாகச்சொன்

ஞர் ; தளவாய் வேண்டியபடி புத்திசொல்லி, தம் தங்கையையும் விவாகம் செய்துகொடுப்பதாகச் சொன்னபின், ஒப்புக்கொண்டார்.

திரு. சே. : ஆகவே, உங்கள் தளவாய் தங்கையைப், பாண்டிய நாட்டிற் பெரும்பகுதிக்கும் சேரமானுக்குக் கீழ்ப்பட்டு வாழ்வதற்கும் ஈடாக மதித்தார்போலும்! நல்லது! தூதுவந்த விபரம் இவ்வளவுதானோ, இன்னும் உண்டோ?

சேனை. : இதே முக்கிய விஷயம் ; தங்கள் மனோபீஷ்டம் போல் நிபந்தனைகளைதாவது மாற்றவேண்டுமென்றாலும் செய்யலாம்.

திரு. சே. : நீங்கள் பிராமணராயிருப்பதுமன்றி, தூதராகவும் வந்திருக்கிறீர்கள் : அதனால் இதைப்பொறுத்தோம் ; வேறு யாராயினும் இவ்விதம் பேசியிருப்பின், இதற்குமுன் வாளுக்கிரையாகியிருப்பது நிச்சயம். உங்கள் தளவாயிடமும் அரசரிடமும் போய்ச் சொல்லுங்கள் : இதுகாறும் பாக்கியுள்ள கப்பத்தொகையையும், நூறு பொன் அபராதமும், அக்கிரமமாக இவ்வாறு நாட்டின்மேல் திடீரென்று படையெடுத்து வந்ததற்காகப் பதினாயிரம் பொன் நஷ்டியும் உடனே செலுத்துவதுடன், இன்னும் மூன்று நாளைக்குள் இந்நாட்டெல்லையைக்கடந்து வெளியேறவேண்டியது ; இல்லாவிடின், திரும்பி உங்கள் நாட்டைச் சென்று மிதிப்பது, யுத்தத்தில் நேரும் அதிஷ்டவசமாகும். இளவரசரொருவர் இப்படியாகிவிடினும், இத்தனை தலைமுறைகளாகக் கப்பம் வாங்கிவந்த வீரம் இன்னும் நாட்டில் மாண்டு போகவில்லை. வயோதிகரான அரசர், பரலோக சாம்பிராச்சியத்தை நாடிக்கொண்டிருப்பினும், நாட்டின் க்ஷேமத்தையும் கீர்த்தியையும் காப்பாற்றுதற்குரிய வீரர், ஆயிரக்கணக்காக அவர் உத்திரவை யெதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

சேனை. : இதுதானோ தங்கள் முடிவான பதில்?

திரு. சே : இதுதான். நமக்குள் உள்ள பழைய அந்நியோந்நியத்தை நினைந்து, அதற்கொருகேடுவாராமே, திரும்பிவிடுங்கள்.

சேனை : தாங்கள் என்னசொன்னபோதிலும், இப்பொழுது நாடிருக்கும் சீரை என்னிலும் தாங்களே நன்கறிவீர்கள் ; எங்கள் படை மேற்சென்றால், எப்படியும், நூற்றில் பத்திருபது பேராயினும், இளவரசருக்காக எங்களைச் சேருவது நிச்சயம் ; உங்கள் ஸேனாபதியும் ஸைநியமும் சோழதேசத்துக்குப் போய்விட்டார்கள் ; தாங்கள் மகாசூரரே, தேசாபிமானியே ; ஆனால் ஒருவரால்மட்டும் என்னமுடியும்? பாண்டியெல்லாம் சீக்கிரம் எங்கள் கைவசப்படுவதில் ஸந்தேகமேயில்லை ; ஆனால் யுத்தத்தால் தேசம் பாழாய்விடும், குடிகளும் இந்த க்ஷாமகாலத்தில் மிகவருந்துவார்கள் ; இதையெல்லாம் யோசித்துப்பார்த்து, தங்களுக்கும், தங்கள் ஸந்ததியாருக்கும், நாட்டுக்கும்,

எல்லாருக்குமே இலாபகரமானதொன்றை, தேடியடைந்த லக்ஷ்மியை திரஸ்கரிப்பதுபோலத், தள்ளாதேயுங்கள்.

திரு. சே. : தூதராகிவந்து அமைச்சராகி விட்டீர்களோ? சேரனுக்கும் வம்சாரிமாறனுக்கும் கீழ்ப்பட்டு வாழ்தலினும், பாண்டிய நாடெல்லாம் கடல்கொண்டாலும் எரியுண்டாலும் நலமே; உயிர் வாழ்க்கையைத் தன்மானத்திலும் சுதந்தரத்திலும் பெரிதாக மதிப்பார் இங்கில்லை. என் பதிலை முடிவாய்க் கொள்ளுங்கள்; இனித் தூதும் வரவேண்டாம், அப்படிக்கின்றி வரநேரினும், இந்தப் பதர் இங்கு வரவேண்டாம்; இவன் உங்களுடன் வருவது உங்கள் அந்தஸ்துக்கே குறைவு, மகாலிங்கம்! இவர்களை மரியாதையுடன் அழைத்துச்சென்று அனுப்பிவிட்டுவா.

சேஷை. : ப்ரபோ! ஆசீர்வாதம்; போய்வருகிறேன்.

[சேஷையனும், மகாலிங்கஞ் சேர்வையும், முருகனும் போதல்.]

எல்லை : 'சிலையாளுந் திருக்கரத்துத் தென்னவனைத் தெரிசிக்கத் திங்களொன்றோர்
மலையாளவயவேந்தன் வந்துநின்ற வாசல்வித்து வான்யான் கண்டாய்,'

என்று புலவரளித்த விடையை மறந்துவிட்டனரோ?

திரு. சே. : அவர்கள்மேற் குற்றமில்லை; நாமே நம்பெருமையையும் தொல்புகழையும் மறந்துவிட்டோம். உழுகிறவன் இளக்காரத்தைக்கண்டு எருது மைத்துனங் கொண்டாடுகிறது. சீ! வம்சாரி இவ்வளவு மோசமா! [போதல்.]

## நான்காங் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே ஒரு படை வீடு.] [காலம் :—மாலை.

[தளவாய் கண்ணன் தம்பியும் வம்சாரிமாறனும் பிரவேசித்தல்.]

வம்சாரிமாறன் : நான்தான் முன்னமே சொன்னேனே: இதற்கெல்லாம் மசிகிறவரா சேதுபதி? அவரொருவர் இல்லாவிடின், நாடு என் கைவந்து வருஷம் பத்தாயிராதா?

தளவாய் : ராஜனுக்குக்கூடத் தேசவிஷயத்தில் இத்தனை சிரத்தையில்லையே.

வம்சா : அவரா? சிவப்பழமாக ஒருத்தன் வேஷம்போட்டு வந்து விநயமாய்க்கேட்டால், ஒருவேளை நாட்டையே கொடுத்துவிடுவர்; ப்ரதானியோ, உங்களுக்குத் தெரிந்ததுதானே, பணமென்றால் போதும்; எல்லாம் இவர்தான் 'நாடு,' 'நாடு,' என்று பிராணனை விடுகிறது.

தளவாய் : பின்னென்ன யோசனை? கோட்டையை முற்றிப் பிடிப்பதென்றால் மாதம் ஆறானாலும் அசாத்தியம், அதுவரையும் ஸைநியத்துக்கும் நமக்கும் செலவுக்கு நடப்பதும் கஷ்டம்; இதை விட்டு மதுரைமேற் செல்வோமென்றால், புறம்பேவந்து வளைந்து கொண்டால் மோசம்.

வம்சா : தங்கள் சகோதரிக்கும் சேதுபதி மகனுக்கும் ஏதோ பழக்கமுண்டென்று கேள்வியாகிறதே?

தளவாய் : அதெங்ஙனம் மாறன் அறிந்தது? ஸேதுபதி கப்பம் கேட்கவந்திருந்த ஸமயம், பத்மநாபஸ்வாமி கோயிலில் ஆதியில் ஸந்திப்புண்டாகிப், பிற்பாடும் கொஞ்சம் பழக்கம் ஆயிருக்கிறது. எனக்கே அப்புறம் தான்தெரியும்.

வம்சா : அந்த மூலமாய் அவர்மகனைத் தந்திரமாய் நம்ம கைவசப்படுத்திக்கொண்டால், ஒருவேளை காரியம் பலிக்கலாம் : முதலில் மாதவிக்கு விசுவாச முண்டாகும்படிசெய்து, அவனை இரகசியமாயிங்கே நம்மபடைவீடுகளுக்குள் வரவழைக்கவேண்டும்; இங்கே சிறையாக்கிக்கொண்டு, பின்பு சேதுபதிக்கு இதேவிதமாய்த் தூதனுப்பினாலும், வேறெப்படிச் செய்தாலும், இவ்வளவு முறுக்கிராது. ஒருவேளை அவர் இணங்காவிட்டாலும், அவர் பெண்சாதி விடமாட்டாள். அவர்களுக்கு ஒரே மகன்; அவன் மேல்தான் உயிரெல்லாம்.

தளவாய் : மாதவி சொல்லியனுப்பினால் அவன் வருவானோ?

வம்சா : இளங்கன்று பயமறியாது; அன்றியும் காமவசப்பட்டவனுக்குக் காதலியின் ஆணைக்கு மிஞ்சின கவலையேது, புத்தியேது? இராவுண்ணியைக் கேளுங்கள்: அவன் வகை ஆள், மாதவியைப்பற்றி இன்று விசாரித்தானாம். மாதவிமட்டும் எழுதியனுப்பினால் அவன் வருவது நிச்சயம்; அதில் சந்தேகமே வேண்டாம்.

தளவாய் : அங்ஙனமாயின், இது நல்ல யுக்திதான். அவன் மகன் நம்ம கையில் சிக்கியிருக்கவும், அந்தக் கழுவேறி இணங்காவிட்டால், அவன் மகனைக் கொன்று களைவேன்.

வம்சா. : ஒரே மகனைச் சாகக்கொடுத்துவிட்டு, அவர் நாட்டை யாருக்காகக் காப்பாற்றப் போகிறார்?

தளவாய் : அதே! ஆனால் இந்த விஷயம் சேஷையன் அறியப்படாது.

வம்சா. : நமக்குள்ளிருக்கட்டும்; வேறொருவருக்குமே தெரியவேண்டாம். மாதவிக்குமட்டும் நல்ல வண்ணம் நம்பிக்கையுண்டாகும்படி போதிக்கவேண்டும்.

தளவாய் ; ஓ ! அது நானறிவேன். ஒன்றுந்தரம் யுக்தி இது. நான் போய்வருகிறேன், மாறன் ! மனசிலிருக்கட்டும்.

[தளவாய் கண்ணன் தம்பி போதல்.]

வம்சா : மாதவிக்குமட்டும் சந்தேகம் வந்துவிடக்கூடாது.

(தனி) எப்படி முடிந்தாலும் இதனால் நமக்கு லாபமே: மாதவி எழுத்தனுப்பினால், அவன் வாராதொழியான் ; அவன் மட்டும் கையிற் சிக்கிவிடவேண்டும் : பின்பு சேதுபதி ஒப்புக்கொண்டால், நெல்லைச் சீமையும் மாதவியின் சம்பந்தமும் கிடைக்கும் ; அவர் அப்பொழுதும் சம்மதியாவிட்டால், இந்த மூர்க்கனுக்கு அவர்பேரிலிருக்கும் சினத்துக்கும் பகைமைக்கும், இவனால் அவனைக் கொலைசெய்வித்தல் வெகு சுலபம் ; நாம் சொல்லாமலே முடிந்துவிடும் ; அவன் தொலைந்தால், இளவரசுப்பட்டத்துக்குமட்டுமன்றி, மாதவியின் காதலுக்கும் ஏற்பட்டிருக்கும் இடையூறு நீங்கிவிடும். மாதவிக்கு நம்பிக்கை வந்து, அவள் அவனுக்கெழுதும்படியான ஏற்பாடு செய்யவேண்டும். அதாரங்கே ? முருகா !

[நாகப்பன் சேர்வை பிரவேசித்தல்.]

நாகப். : முருகன் எங்கேயோ வெளியே போயிருக்கிறான்.

வம்சா. : செம்பகம் எங்கே ? வந்துவிட்டாளா ?

நாகப். : வருகிற சமயந்தான்.

வம்சா. : சேதுபதி மகன்மேல் கிறுக்கு பலமாமோ ?

நாகப். : கங்குகரை யில்லையாம் : மகாராசாவைப்பற்றி இவள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாளாம், ஒன்றும் ஏறவில்லையாம் ; எப்பொழுதும் சேதுபதி மகன் மேல்தான் நினைவாம் ; அவரைப்பற்றியே பேச்சாம் ; இவள் ஏதாவது புதிதாக ஒரு கீர்த்தனை வீணையில் வாசித்துக் காட்டினால், உடனே, அவர் பேச்சு வந்துவிடுகிறதாம்.

வம்சா. : ஏன், நாகப்பா, இவளை நம்பலாமா ? ஒருவேளை அவள் நமக்குக் கிடைத்துவிட்டால் தன்பாடு மோசமாய்விடுமென்று, நம்மைப் பொய்யும் புளுகும் சொல்லி, ஏமாற்றுவதாயிருந்தாலோ ?

நாகப். : ஆத்தாடி ! கறந்த பாலும் சரி அவளும் சரி ; அதற்குத்தான், இந்தக் காரியம் முடிந்தவுடன், மாடவீதியிலே நாலடுக்கு மச்சுவீடும் நாலாயிரம் பொன்னும் கொடுப்பதாக மகாராசா வாக்குப் பிறந்துவிட்டதே. யாரையாவது மகாராசா கலியாணம் பண்ணிக்கொண்டு, உடம்பு கெட்டுப்போகாமே வாழவேண்டுமென்பதே, அவள் கவலை ; இதைக்கேட்டது முதல், எவ்வளவோ சந்தோசம் ; எப்படியாவது இதை முடித்துவிடுகிறேனென்று என்னோடும் முருகனோடும் பந்தயம் போட்டிருக்கிறாள்.

வம்சா. : நானும் அப்படி யிருப்பாளென்று நம்பியே அவளைத் தருவித்தேன். இதை முடித்துத் தந்தால் அவளுக்கும் உனக்குப் தக்கபடி சன்மானம் செய்வேன். ‘சேதுபதி மகன் சுத்த விடன் ஊரெல்லாம் வைப்பாட்டிகள்,’ என்று சொல்லச்சொல்.

நாகப். : நாய்க்குட்டி அப்படியே சொல்லிவைத்திருக்கிறேன் ; எப்பொழுதும் இவ்விடத்து ஊழியன்தானே.

வம்சா. : ஆனால் இப்பொழுது அப்படி யொன்றும் சொல்ல வேண்டாம் ; நான் பிற்பாடு சொல்லுகிறேன்.

நாகப். : புத்தி ! மகாராசா உத்திரவுபோல நடக்கச் செய்கிறேன்.

வம்சா. : சரி, போ ; அவள் வந்தவுடன் இங்கே வரச்சொல்.

[போதல்.]

# மூன்றும் அங்கம்.

[களம். : நெல்லைக்கோட்டையும், கோட்டைப்புறத்தே பாசறையும்.]

## முதற் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே ஒரு படை வீடு.] [காலம் :—மாலை.

[மாதவியும் நாராயணியும் பேசிக்கொண்டிருத்தல்.]

மாதவி. : இந்தப் பாண்டி ஸ்திரீ வெகு சாதுரியக்காரி ; வெகு சம்பிரதாயமாய்ப் பேசுகிறாள்.

நாரா. : எத்தனை நகைகள்தான் பூட்டிக்கொண்டிருக்கிறாள் ! உச்சிமுதல் உள்ளங்கால் வரையும் ஸொர்ணமும் மாணிக்கமுமே ; தேகம்தான் நோவாதோ ?

மாதவி : வீணையும் நல்லவண்ணம் வாசிக்கிறாள் : அவள் பேசும்பொழுது கவனித்தாயோ நீ ? முகமும் கைகளும் எப்படியெப்படியெல்லாம் அபிநயம் ! ஒரு க்ஷணமாவது கண்கள் ஒரே படியாயில்லை ; சிமிட்டும், மிரட்டும், உருட்டும்,—ஆச்சரியம் !

நாரா. : இந்த மாறனிடத்தில் வந்திருக்கிறாளென்று ராவுண்ணி நாயர் சொன்னான் ; மாறனை எத்தனை தூஷணை தூஷிக்கிறாள் இவள் !

மாதவி : அதுவும் ஒரு சம்பிரதாயமே. அவன் சுத்த கள்ளன் ! தூர்த்தன் !

நாரா. : ஸேதுபதி மகனைப்பற்றி ஏதோ சொன்னாளே, அதென்ன ? நான் பஞ்சமத் தந்தி வாங்கிவரப் போய்விட்டேன்.

மாதவி : அவரும் வந்திருக்கிறாராம். நாராயணி ! இவ்வளவு ஸமீபத்தில் இரண்டுபேருமிருந்தும், அவரை நான் காணுவிட்டால், என்னைப்போல் தௌர்ப்பாக்கியவதி யுண்டோ ?

நாரா. : ஆதியில், தம்பிரான்கூட வரவேணுமென்று கல்பனையானபொழுது, இந்த மாறன் தொந்தரைக்குப் பயந்து, அம்மை பாண்டிக்கு வரமாட்டேனென்று சொல்லவில்லையோ ? இப்படி வாராதிருந்தால், அவருக்கு இவ்வளவு ஸமீபத்தில் வந்திருக்கமுடியுமோ ? எல்லாம் தெய்வ ஸங்கல்பமே : இத்தனை ஸமீபத்தில், எதிர்பாராத வண்ணம், கொண்டுவந்துவிட்ட தெய்வம், இன்னும் குறையும் கூட்டி வைக்காதா ?

மாதவி : பத்மநாபனுடைய கிருபை வேணும் ; வேறு ஸகாயம் நமக்கேது ? ஒரு ஸங்கதி இன்று நானறிந்தேன் ; அது மனஸில் வலிய ஸங்கடம் உண்டாக்குகிறது.

நாரா. : என்ன, அம்மே? என்ன ஸங்கதி?

மாதவி : இந்த தாஸிக்கும் அவர்மேல் நோக்கமுண்டு.

நாரா. : அது எங்ஙனம் அம்மை அறிந்தது? அவள் சொ ளோ?

மாதவி : சொல்லவேணுமோ? பேச்சிலிருந்தே தெரியாதோ இவளுக்கு அவர்மேல் ஆசையுண்டென்பது நிச்சயம்; ஆனால், அ அதிசயமல்ல: அவரைக்கண்ட ஸ்திரீ எவள்தான் ஆசைகொள் மாட்டாள்? அவருக்கும் இவள்மேல் நோக்கமிருக்குமோ என்னு ஆசங்கைதான் மனதைச் சஞ்சலப்படுத்துகிறது.

நாரா. : பேச்சிலே இதுதெரிந்தது, அதுதெரியவில்லையோ?

மாதவி : அவள் பிரஸ்தாபத்திலிருந்து, அவருக்கு அவ தெரியுமோ என்பதே ஸந்தேகமாயிருக்கிறது. என் மனதறிய அ அப்படிப்பட்டவரில்லை; அவளும்கூட, தாஸியாயிருப்பினும், அ சௌரியத்தையும், பெருந்தன்மையையும, சீலத்தையும் புகழ்கிற எனக்கு அவளை விபரமாய்க்கேட்க லஜ்ஜையாயிருந்தது; அனந்த னம் வந்து அவர் திரும்பிப் பாண்டிக்குப்போனதுமுதல், வீணை பியசிப்பதிலும், சித்திரமெழுதுவதிலும், ஸம்ஸ்கிருதம் வாசிட் லுமே காலத்தைக் கழித்துவருகிறாராம்; அவர் புத்திக் கூர்மைக் மனோதர்மத்துக்கும் இதற்குள் ஒவ்வொன்றிலும் எவ்வளவு யிருக்கிறாரோ? நினைக்க, நினைக்க, அவரைக்காணவேணுமெ ஆசை எனக்கு அதிகரிக்கிறது; என்று காண்பேனோ?

நாரா : பகவான் கிருபையினால் சீக்கிரம் கிட்டும்; அதோ, ளியும் அப்படியே சொல்கிறது.

மாதவி : இவ்வளவு நாகரீகமும், ராங்கியும், வாக்குசாதுர் மும், வீணைவாசிக்கும் திறமும் உள்ள இந்த ஸ்திரீயை, அவர் ஒ ஸமயம் கண்டு பழகியிருந்தால்,—நாராயணி! நீயும் அவரை நன் அறிவாயே: உனக்கெப்படித் தோன்றுகிறது?

நாரா : பாண்டிக்காரர் ஸங்கதி நமக்கென்ன தெரியும்? இந் மாறனையும், இந்ததாஸியையும் பார்த்தால், பாண்டியெல்லாம் முழு மோசமாயிருக்குமென்று நினைக்கவேண்டிவருகிறது. புருஷரையே நம்பலாகாது.

மாதவி : எல்லாப் புருஷருமே அப்படியிருப்பார்களா? இந்த மாறனும் புருஷன், அவரும் புருஷர் என்று சொல்லலாமோ? அவா ஒருபொழுதும் அப்படியிருக்கவேமாட்டார். பணத்தையே பெரிதா கமதித்து நடக்கும் இந்த வேசையும்கூட, அவரைப்பற்றி எவ்வளவு மரியாதையாகப் பேசுகிறாள்! அவளுக்கே அவரிடத்தில் மனப்பூர்வ

மான ஆசை உண்டாயிருக்கிறதே. அவரை எப்பொழுது நான் திரும்பவும் காணுவேன்? இராவுண்ணியும் கோட்டைக்குட்போயிருந்தானுமே : வர்த்தமானம் ஏதாவது தெரியுமோ ?

நாரா : அவனை நான் கண்டேன் ; ஆனால் பேசஸந்தர்ப்பப்படவில்லை. கண்ஜாடைகாட்டினன் ; ஏதோ ஸமாசாரம் உண்டுபோலத் தோன்றியது. கையொழிந்தவுடன் அவனேவருவன்.

மாதவி : நீ போய் அவனை அழைத்துவா.

[நாராயணி போதல்.]

(தனி) அவர் என்னை மறந்தோ, அல்லது வேறுவிதமாகவோ, ஒரு ஸமயம் இருந்தால், நான் எப்படி ஸகிப்பேன் ? அவராக என்னை திரஸ்கரிக்கும்வரை, என் சபதப்படி, நான் அன்னியதா நினைக்கவே மாட்டேன் ; அப்பொழுதும் கூட, என் ஆசைமட்டும் மாறாது. ஒரு ஸமயம், யுத்தத்தில் ஜேஷ்டன் ஜெயமடைந்து, இந்த மாறனை பர்த்தாவாக வரிக்கும்படி நிர்ப்பந்தப் படுத்தினால், என் பிராணனைவிட்டுவிடுவது நிச்சயம்.

[நாராயணியும் குறத்திவள்ளியும் பிரவேசித்தல்.]

நாரா : அம்மே! இவள் ஒரு குறத்தி ; நல்லவண்ணம் குறிசொல்வளாம் ; வரப்போகிறதையெல்லாம் சொல்லுவளாம்.

மாதவி : நம்ம நம்பூதிரித்தம்பிரான் ஜோஸியம் மாதிரியிருக்குமோ ?

நாரா : ஏதோ, சோதித்தறியலாம்.

மாதவி : அடி குறத்தி ! உன்பேரென்ன ?

வள்ளி : அம்மே ! வள்ளி என்று கூப்பிடுவார்கள்.

மாதவி : ஓ ! அஸல் பேர் ! நான் மனஸில் இப்பொழுது நினைத்திருக்கிறது என்ன ? அதெப்படிமுடியும் ? சொல்லு, கேட்போம்.

வள்ளி : அம்மே ! அந்தத்தங்கக்கையைக் கொஞ்சம் நீட்டுங்கள், பார்க்கட்டும்.

[மாதவி கையை நீட்டுகிறள்.]

மாதவி : மனஸில் நினைத்திருப்பதைக் கைரேகை காட்டுமோ ?

வள்ளி : ஐயா, தொந்திக்கணபதியே என் குறிக்குத் தோன்றிடுவாய் !

கந்தா வடிவேலா என்குறியைக் காத்தருள்வாய் !
மாது சரசுவதியே வந்தெனக்கு நீ யருள்வாய் !
ஏதும் பிசகாமே என்குறியைக் காத்திடுவீர்

இந்தச், சீமாட்டி நெஞ்சத்தில் செப்புகுறை ஒன்றுண்டு:
இந்தக், கோமாட்டி யுள்ளத்தில் கூறுகுறை ஒன்றுண்டு:
நாடுநகரமில்லை; நாட்டார் குறையுமில்லை;
வீடுவிளைவுமில்லை; வியாதியொன்றுதானுமில்லை;
பருவத்துக்கேற்க ஒரு பாண்டியன்மேல் நாட்டமுண்டு;
உருவத்துக்கேற்க ஒரு உத்தமன்மேல் தேட்டமுண்டு:
அவன், நாடி அணைகுவனோ, நாடா தொழிவானோ?
அவன், தேடி அணைகுவனோ, சிந்தை பிறிதாகுவனோ?
ஓயாக் கவலையிதா ஊணுறக்கம் கொள்வதில்லை;
மாயாக் கவலையிதா மாதிவளும் வாடுகிறாள்;
அம்மா, வாணிசரஸ்வதியே மங்கையர்க்கு நீ யிரங்கி,
அம்மா, கோணிக்குழறுமே குறியதனைக்கூறிடுவாய்!
வேண்டாம் ஒருவருஷம்; வேண்டாம் ஒருமாசம்;
வேண்டாம் ஒருபக்கம்; வேண்டாம் ஒருவாரம்;
வட்டமிட்டு வானதனில் வந்த கருடனைப்பார்;
திட்டமுடன் இன்றே நீ சேர்குவையுன்னுதனையே;
ஆனாலும் ஆருடத்தால் மற்றொன்றறைகுவன்கேள்;
தேனும்மொழியாளே சீக்கிரமோர் தத்துவரும்;
நாடு பதைபதைக்க, நாட்டார் நடுநடுங்க,
கேடு கிளைத்துவரும், கேட்டார் கிடுகிடென,
அம்மா, என்னென்று சொல்வேன் நான், ஏதென்றெடுத்துரைப்பேன்?

[தளவாய் கண்ணன் தம்பி பிரவேசித்தல்.]

தளவாய்: இதென்ன கோஷமிது? இவள் யார்?

மாதவி: ஜேஷ்டனா? நான் யாரோ என்று திடுக்கிட்டுவிட்டேன். இவள் குறி சொல்லுகிற குறத்தியாம்; நாராயணி அழைத்துவந்தாள்; ஏதோ பாடிக்கொண்டிருக்கிறாள்.

தளவாய்: உனக்கு ஸந்தோஷமான ஒரு ஸமாசாரம் சொல்ல வேண்டியிருக்கிறது; தனித்துச் சொல்லவேண்டும்; இவர்களைப் போகச்சொல்.

மாதவி: நாராயணி! இவளை வெளியே கூட்டிக்கொண்டுபோ; குறைப்பாட்டும் அப்புறம் கேட்டுக்கொள்ளலாம்.

[நாராயணியும் குறத்தி வள்ளியும் போதல்.]

எனக்கு ஸந்தோஷமான ஸமாசாரம் என்ன?

தளவாய்: எதாயிருக்கலாம்? நீயே சொல், கேட்போம்.

மாதவி: எனக்கொன்றும் தோன்றவில்லையே.

**தளவாய் :** உனக்குத்தெரிந்த பேர், உன்னைப்பற்றி விசாரிக்கக் கூடியபேர், யாராவது இந்தக் கோட்டைக்குள் இருக்கிறார்களா? அதோ, உன் முகக்குறிகளே உன் மனதைக் காட்டுகின்றன ; என்ன? பதிலில்லை?

**மாதவி :** என்ன விசேஷம்?

**தளவாய் :** இதுவரையும் இந்த மாறன் பேச்சை நம்பி நான் மதிமோசம் போனேன் ; இப்பொழுதுதான் யதார்த்தம் தெரிந்தது : இவன் மஹாதூர்த்தன் ; இவனால் ஒன்றுமாகாது ; இவன் ஸகாயத்தால் ஒரு பலனுமில்லை ; இவனுக்குன்னைக் கொடுப்பதினும், கிணற்றில் தள்ளிவிடலாம். ஸேதுபதி ஸத்திய ஸந்தனும் ; மகாவீரனும் ; அவன் தயவிருந்தால், பாண்டியில் முடியாததொன்றில்லை ; அவன் மகனும் நல்ல யோக்கியனும் ; உன்னைப்பற்றி, ராவுண்ணியை, அவன் ஸ்நேகிதன் ஆவலுடன் விசாரித்தானும் ; அவன் மூலமாய் ஸேதுபதியின் இணக்கத்தை ஸம்பாதித்துக்கொண்டால், கப்பத்தையும் நிறுத்திவிடலாம் ; இன்னும் வேண்டியதெல்லாம் பெறலாம் ; அவனுக்கே ராஜ்ய பட்டமும் வரப்போகிறதாம் ; இந்த மாறனுக்கு ஸகாயம், பாண்டியில் ஒரு மனுஷன்கூடவில்லை : இவனுக்குப் பட்டமும் கிடைக்கப்போகிறதில்லை. ஆகவே, நீ ஸேதுபதி மகனை ஸம்பந்தஞ் செய்துகொண்டால், பாண்டியதேசத்துக்கு அம்மச்சியாகிவிடுவாய். இப்பொழுதுதான் பாண்டியதேச வர்த்தமானமெல்லாம் எனக்கு நல்லவண்ணம் விபரமாய்த் தெரிந்தது. என்ன சொல்கிறாய்?

**மாதவி :** நான் என்னசொல்ல? ஜேஷ்டன் ஆஜ்ஞை எப்படியோ,—

**தளவாய் :** நீ வலியகள்ளன்! நேற்று, முந்தினநாளெல்லாம், மாறனைக்கல்யாணம் செய்துகொள்ளச் சொன்னபோது, ஜேஷ்டன் ஆஜ்ஞைப்படி நடக்கப்படாதோ? உன் மனஸ¬ப்படி ஜேஷ்டன் ஆஜ்ஞையானால் ஸம்மதமாக்கும்.

**மாதவி :** மாறனுடைய ஐயோக்கியதையை அறியாமல் செய்த ஆஜ்ஞையது. நான் எப்பொழுதுமே சொல்லவில்லையா? ஸேதுபதி நல்ல ஸத்தியவான் ; சீலர்.

**தளவாய் :** அவன்மகனோ? என்ன தலையைக்கவிழ்ந்து கொள்ளுகிறாய்? சரி, அதிருக்கட்டும் : இனிமேல் நடக்கவேண்டியதைப்பற்றி யோசிப்போம் : மாறனை ஓடிவிடாமல் பத்திரமாய்க் காக்கும்படி ஏற்பாடுசெய்துவிட்டேன் ; ஸேதுபதி மகனை வரவழைத்து, அவன் மூலமாய் ஸமாசாரம் சொல்லியனுப்பி, ஏற்பாடு செய்யவேண்டும்.

**மாதவி :** அதற்கு நானென்ன செய்யவேணும்?

தளவாய் : நீ வரச்சொல்லி எழுத்தனுப்பவேண்டும்; ஆனால்தான் முடியும்.

மாதவி : நானோ? ஜேஷ்டன் ஆளனுப்பினாலோ?

தளவாய் : படையெடுத்து வந்திருக்கும் எதிரியை யாரேனும் நம்புவார்களோ? வந்தபின், யதார்த்தத்தை விபரமாய்ச்சொல்லி, நம்பிக்கைவரச்செய்யவேண்டும்.

மாதவி : நானெழுதினால் எதிரிகள் படைவீட்டுக்குள் வருவரோ? ஸேதுபதி ஸம்மதிப்பரோ?

தளவாய் : மனவிருந்தால், வரும்படி யெழுத உனக்கு நன்றாய்த் தெரியும்; ஸேதுபதிக்குத் தெரிந்தால் வரமுடியாது; முதலில் தெரியாமலேவந்து, ஸமாசாரங்களைத் தெரிந்துகொண்டு போய்ச்சொல்லி, நம்பிக்கை பிறக்கவேண்டும். பரஸ்பரம் விசுவாசம் உண்டாகிவிட்டால், அப்புறம் மனஸுபோலும் ஸௌகரியம்போலும் செய்துகொள்ளலாம்.

மாதவி : நான் வேணுமானால் எழுதுகிறேன்; ஜேஷ்டனும் விபரமாய் ஒரு எழுத்து அனுப்பினால் நலமாயிருக்கும்.

தளவாய் : அது கூடவே கூடாது; ஸந்தேகத்துக்குத்தான் ஆஸ்பதமாகும்; நீ யெழுதுவதுகூட எனக்குத்தெரிந்ததாகவே யிருக்கக் கூடாது. உனக்குப்பார்க்க ஆசையாயிருப்பதாயும், இரண்டுகக்ஷிக்காரருக்கும் அநுகூலமான சிலமுக்கிய ஸங்கதிகள் நேரில்பேசவேண்டுமென்றும், ஒருவருமே அறியாமல் இரகசியமாய் வந்துவிட்டுப்போய் விடலாமென்றும் பொதுப்பட எழுதவேண்டும்; பிறபாடு எல்லா விபரமும் நேரில் சொல்லிக்கொள்ளலாம். இப்பொழுது நீ எழுதித் தந்தால் இராக்காவல் சுற்றிப்பார்க்க அவன் வரும்பொழுது, அவனிடம் சேர்ப்பித்துவிடுகிறேன்; உடனே இன்றிரவே வந்து ஸங்கதிகளைத்தெரிந்து கொண்டுபோகலாம்.

மாதவி : இன்றிரவா?

தளவாய் : ஏன் தாமஸிக்கவேண்டும்? சுபசீக்கிரமென்று வசனமில்லையோ? தவிரவும், தாமஸமானால், மாறன் ஏதாவது குறும்பு பண்ணக்கூடும். இப்பொழுதே எழுதுவதில் என்னதடை?

மாதவி : தடையொன்றுமில்லை. ஒருவேளை அவர் என்வார்த்தையை விசுவசித்துவந்தபின்பு, ஜேஷ்டனுக்கு மனஸுமாறிவிட்டால்,—

தளவாய் : ஹோ! நான் என்ன பித்தனோ?

மாதவி : அப்படி இராத்திரி நம்மபடை வீட்டுக்குள் வருவதால் அவருக்கு ஒருவிதமான ஆபத்தும் வராதே?

தளவாய் : என்ன, மாதவி; நம்ம படைவீட்டுக்குள் நம்மை

யறியாமலா ஒன்று நடக்கும்? உன் ஜேஷ்டன் அவ்வளவு இளிச்ச வாயனோ?

மாதவி: அப்படியில்லை, மாறனும் அவன் ஆள்களும் இருக்கிறார்களே, அவர்கள் அறிந்து எதாவது விஷமம் செய்தால்,—

தளவாய்: நீ எழுதுவதும், அவன் வந்துபோவதும், நம்மையும் ராவுண்ணியையும் தவிர யாருக்குமே தெரியவேண்டாம்; மாறன் சிறையிலிருக்கிறான். ஸேதுபதியிடமிருந்து பதில் கிடைத்து ஒரு விதமாய் முடிவாகிறவரையில், இரகசியமாயிருப்பதே நலம்; ஒரு ஆபத்தும்வராது; நீ பயப்படவே வேண்டாம்; பத்மநாபனுணை, ஒன்றும் நேரிடாமலிருப்பதற்கு நான் பாத்தியதைப்படுகிறேன்.

மாதவி: சரி; ராவுண்ணியை வரச்சொன்னால் நான் எழுதியனுப்புகிறேன்.

தளவாய்: பொதுப்பட இருக்கவேண்டும்; முக்கியமாய் உங்கள் பரஸ்பர அந்தரங்க அன்னியோன்னியத்தைப் பொறுத்ததாகவே யிருக்கட்டும்; எனக்குத் தெரிந்ததாகவே வேண்டாம்; இராத்திரி நடுநிசிக்குமேல் வரும்படிக்கும், அழைத்துவரக், கோட்டைவாசல் பக்கம் ராவுண்ணியை அனுப்புவதாயும் பெயர்கண்டெழுது. நாராயணிக்குக் கூட இந்தஸங்கதி தெரியவேண்டாம். சீக்கிரம் எழுது; இதோராவுண்ணியை அனுப்புகிறேன்.

[தளவாய் கண்ணன் தம்பி போதல்.]

மாதவி: சரி. (தனி) அதிர்ஷ்டம் வரும்பொழுது மோட்டைத் தொளைத்துக்கொண்டு வருமென்று சொல்வார்கள்; ஆனால் இப்படிப் பட்ட அதிர்ஷ்டம், எனக்கே வருமென்று, நான் நினைக்கவேயில்லை. இன்றே அவரைச் சேருவேனென்று குறத்தி குறிசொன்னதும், உடனே ஜேஷ்டன் வந்து இங்ஙனம் சொன்னதும், என்ன ஆச்சரியம்! ஆனால், ஏதோ சீக்கிரம் ஒரு பெரிய தத்துவருமென்றும் சொன்னாள்; அவளை யழைத்து அதை விபரமாய்க் கேட்கவேண்டும். பின்பு என்ன வந்தாலும் வரட்டும்: இன்று என்னைப்போல் பாக்கியசாலியார்?

[நாராயணி பிரவேசித்தல்.]

நாராயணி! வா; அந்தக் குறத்தியெங்கே?

நாரா: அவள் கொஞ்சம் காத்திருந்துவிட்டு, நாளைவருவதாகச் சொல்லிப் போய்விட்டாள்.

மாதவி: அவள் குறிசொன்னவாய்க்குப் பொன்போடலாம்; ஆனால் உன்னிடத்திற்கூடச் சொல்லக்கூடாது.

நாரா: ஸந்தோஷ ஸமாசாரமென்றீர்; வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, ஒருநாளுமில்லாததொரு முகமலர்ச்சியுடன் தம்பி

ரான் போகிறார்; அம்மைக்கும் தன்னையறியாமல் ஆனந்தம் பொங்கு கிறதே: நானும் கேட்டு ஸந்தோஷித்தாலாகாதோ?

மாதவி: நீ அறியக்கூடாததில்லை; அறியாததில்லை. ஆனால் அவர் சொல்லக்கூடாதென்று சொல்லியிருக்கிறார். இராத்திரி தானே உனக்கும் தெரியவரும்.

நாரா: அம்மையினுடைய காதலர் இங்கே வரப்போகிறாரோ?

மாதவி: உனக்கெப்படித் தெரிந்தது?

நாரா: அம்மை முகத்தைப்பார்த்தாலே தெரியுமே; அப்படித் தான் எதோ சத்தம் கேட்டது.

மாதவி: அப்படித்தான். ஆனால் நீ ஒருவரிடமும் சொல்லக் கூடாது; ஆணைவைத்திருக்கிறேன்; ஜேஷ்டனுக்குத் தெரிந்தால் கோபிப்பர்; ஆனால் உனக்கு நான் சொல்லித்தெரியவில்லையென்று, நீயே ஒப்புக்கொள்வாய். அந்த எழுத்துப் பெட்டியை எடு இங்கே; சீக்கிரம் எழுதவேண்டும்.

[எழுத்துப்பெட்டியொன்றை எடுத்துவந்து கொடுக்கிறள்.]

நாரா: நம்ம படைவீட்டிலிருக்கும்பொழுது யாராவதுகண்டு கொண்டாலோ?

மாதவி: ஜேஷ்டன் ஸம்மதித்து வரும்பொழுது, கண்டுகொண் டால் தானென்ன? நடுநிசிக்குமேல் யாருக்குத்தெரியும்?

நாரா: தம்பிரான் ஒன்றும் கபடமாக கல்பனையாகவில்லையே? எல்லாம் யதார்த்தமாய்த்தானே சொல்லியிருக்கிறார்?

மாதவி: பத்மநாபஸ்வாமிமேல் ஸத்தியம் பண்ணித்தந்தார்.

நாரா: முன்பு தோவாளைக்கோட்டை மண்ணுடியாரைப்பிடிக் கும்பொழுதும், அங்ஙனம் தம்பிரான் செய்ததுண்டு; ஆனால் அம்மை யிடத்திலேயே அங்ஙனம் செய்வரோ?

மாதவி: சீ! பேச்சில் களங்கமொன்றுமில்லை. தவிரவும், இத னால் அவர் காரியமும் உத்தேசமும் சித்தியாகும் வழியையே தேடுகி றார். சற்றுப் பேசாதிரு: இதையெழுதி முடிக்கிறேன்.

[எழுதுகிறள்].

அந்த மெழுகையெடு, முத்திரையிடட்டும். நாணி! என் ஸந்தோ ஷத்தை என்னென்று சொல்வேன்! அடக்கமுடியாமல் பொங்குகிறது.

நாரா: என் அம்மைமுகமே காட்டுகிறதே. எல்லாம் சுபசீக்கிர மாய், மனோபீஷ்டப்படி நிறைவேறவேண்டும், பத்மநாபஸ்வாமி கிரு பையால்.

[போதல்.]

## இரண்டாங் காட்சி.

களம் : கோட்டைமதிலின்மேல் ஒரு காவற்கூடம்.]

[காலம் : முன்னிரவு.

[சோமசுந்தரசேதுபதியும் கறுப்பணபிள்ளையும் பிரவேசித்தல்.]

கறுப் : இளவரசருக்குச் சிறிதும் இடங்கொடுக்கவில்லையென்பது நிச்சயம் ; தங்கள் ஞாபகமும் பேச்சும் அடிக்கடியுண்டாம்.

சோமசு : அவள்கூடச் சேடிவந்திருக்கிறதுயார், கேட்டாயா ?

கறுப் : கேட்டேன் ; ஏதோ ஒருபேர் விசித்திரமாயிருந்தது, சொன்னார் ; நம்மபக்கத்தில் பெண்பிள்ளைகளுக்குச் சாதாரணமாய் வழங்குகிறபேரில்லை.

சோமசு : நாராயணியா ?

கறுப் : ஆ ! அந்தப்பெயர்தான்.

சோமசு : எழுத்தொன்றும் தரவில்லையா ?

கறுப் : அதைப்பற்றித்தான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் சொன்னது சரியாய் எனக்குத்தெரியுமுன், தூதுவந்த மற்றிருவரும் திரும்பிவந்து அழைத்தார்கள் ; அவர்களுடன் போய்விட்டார். அவர் தமிழ் விசித்திரமாயிருக்கிறது.

சோமசு : இராவுண்ணி தமிழ் எப்பொழுதும் வேடிக்கையே.

[நெல்லையப்பத்தேவன் பிரவேசித்தல்.]

என்ன விசேஷம் ?

நெல்லை : ப்ரபோ ! கோட்டைவாசல் மேலுள்ள காவற்கூடத்தருகே, மதிலின்மேல், நானும் சண்முகத்தேவரும் உலாவிக்கொண்டிருந்தோம் ; முதலில் கோட்டைக்குவெளியில் யாரோபேசுவதுபோற் குரல்கேட்டது ; உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, ஒருசிறு எரிபந்தத்தின் முனையிலுள்ள அம்பொன்று, திடீரென்று எங்கள்முன் மதிலின்மேல் வந்துவிழுந்தது ; அதையெடுத்துப்பார்க்க, அம்பின் அடிப்புறத்தில் இந்தக்கடிதம் கட்டியிருந்தது ; தங்கள் விலாசம் கண்டிருப்பதால், தங்களுக்குக் கொடுத்துவரும்படி சண்முகத்தேவர் அனுப்பினார் ; இன்னும் ஏதாவது விசேஷம் நடக்கிறதாவென்று அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

[கடிதத்தைப் பிரித்துத் தனக்குள் வாசித்தல்.]

சோமசு : சரி ; நீர் போம் ; விசேஷமொன்றுமில்லை ; ஆனால் இதைப் பிறர் அறியவேண்டாம் ; அவருக்கும் அப்படியே நான் சொன்னதாகச் சொல்லும்.

நெல்லை : சொல்கிறேன், ப்ரபோ.

[நெல்லையப்பத்தேவன் போதல்.]

சோமசு : மஹாரகசிய சங்கதியொன்று ; வெளியே தெரியவே கூடாது ; உன்னை நம்பலாமா, கறுப்பா ?

கறுப் : சிறுபிராயத்தில் எசமானுக்குச் சிலம்பம் பழக்கிக் கொடுக்க ஏற்பட்டது முதல், என்னை அறிவீர்களே : நான் அப்படிப் பட்டவனல்ல ; உயிர் போவதாயிருந்தாலும், தங்களுக்கு துரோகம் நினைக்கமாட்டேன்.

சோமசு : அவளிடமிருந்து இந்தக் கடிதம் வந்திருக்கிறது : இன்றிரவு நடுநிசிக்குமேல், என்னை அவள் படைவீட்டுக்கு வரச் சொல்லி எழுதியிருக்கிறாள். என்னைப் பார்ப்பதுமன்றி, இருதிறத் தார்க்கும் அநுகூலமான சில சங்கதிகள் பேசவேண்டுமாம்.

கறுப் : எசமான் போகவேகூடாது ; முழுமோசம் வந்துவிடும்.

சோமசு : ஏனப்படிச் சொல்கிறாய் ? அவளா என்னை மோசஞ் செய்வாள் ?

கறுப் : வேறு யாராவது மோசக்கருத்தாய் எழுதியனுப்பியிருந் தாலோ ?

சோமசு : அவள் கையெழுத்து எனக்குத் தெரியாதா என்ன ? அந்தச் சந்தேகமேயில்லை.

கறுப் : தன்னையறியாமல், யாரும் வெளியே போகவோ வரவோ கூடாதென்று பெரிய எசமான் உத்திரவாயிருக்கிறதே.

சோமசு : அதுதான் யோசிக்கிறேன். ஆனாலுமென்ன, இரு திறத்தார் நன்மைக்காகவும் தானே வரச்சொல்லி எழுதியிருக்கிறாள் ? பின்பு சங்கதியை விபரமாய்ச் சொல்லிவிடுகிறது.

கறுப் : பெரிய எசமான் யுத்த முறைகளும், கண்டிப்பும், தங் களுக்கு அவ்வளவு தெரியாது : இம்மி பிசகினாலும் கண்ணைப்பிடுங்கி விடுவார்கள் ; ஈவு இரக்கம் என்பது, இந்தச் சங்கதியில் மட்டும் கிடையவே கிடையாது.

சோமசு : அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். எப் படிப்போய்வருகிறது, யுக்தி சொல்லு பார்ப்போம், ஒருவருக்கும் தெரியக்கூடாது. பிடாரி மூலை வாசல் உனக்குத் தெரியுமா ? அங் கிருந்து கோட்டைவாசற்பக்கம் போக வழிதெரியுமா ?

கறுப் : அடியேனுக்குப் பெண்ணெடுத்தது இந்த ஊரில்தானே ; இந்தக் கோட்டைக்காவலிலே நாலுவருஷம் இருந்தேன் ; எனக்குத் தெரியாத வழியா இங்கே.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

சோமசு : சரிபோவோம் வா ; அகழியைத் தாண்டுவதற்கும் எதாவது ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும் ; மேலே தொங்கிக்கொண்டிருந்த மரக்கிளைகளைக்கூட வெட்டிவிட்டேன். இந்தச் சங்கதியில் சண்முகத்தேவனை நம்பலாமா ?

கறுப் : நான் உறுதி சொல்லமாட்டேன் ; தலைவர்க்குவேண்டியவர்.

சோமசு : நான் பார்த்துக்கொள்கிறேன். நீ போய் ஒரு வடக் கயிறும் இருப்புத் தொறட்டியும் சம்பாதித்துக்கொண்டு, பிடாரி மூலை வாசலுக்குத் தென்புறமுள்ள பிள்ளையார் கோயிலுக்கு, இன்னும் இரண்டுநாழிகைப்பொழுதில்வந்து சேர் ; நான் அங்கே வருகிறேன். சங்கதி பதனம் ; மூச்சுவிடக்கூடாது யாரிடத்திலும்.

கறுப் : எசமான் உத்திரவுப்படி செய்கிறேன் ; எனக்குமட்டும் பயமாகவேயிருக்கிறது ; சரியாகத் தோன்றவில்லை.

சோமசு : ஒன்றும் பயப்படாதே, போ.

[கறுப்பண பிள்ளை போதல் ]

(தனி) இன்னும் ஒரு ஜாமப் பொழுதுக்குள் என் மாதவியைக் காணுவேன் ! ஆகா ! என்ன பாக்கியம் ! என் தந்தைக்குத் தெரிந்தால், சம்மதிக்கமாட்டாரென்பது நிச்சயம் ; அவர் கண்டிப்பான கட்டளையை மீறியும் போகவேண்டியிருக்கிறது. ஆனாலென்ன ? காதல் விஷயத்தில் பெரியோர்களுக்கு எப்பொழுதுமே கருணை கிடையாது. "என்மேல் ஆசையுண்டானால், என் காதலை விசுவசிப்பது மெய்யானால், இன்றிரவு தப்பாமல் வரவேண்டும். நம்ம காதல் அதி சீக்கிரம் சபலமாகும்படி இன்றே ஏற்பாடு செய்துவிடலாம்," என்று தன்மூர்க்கனான தமையனுக்குப் பயப்படாமல் துணிந்து அவள் எழுதியிருப்பதைக் கண்டும், எப்படிப் போகாமலிருப்பேன் ? அன்றியும், இருதிறத்தார்க்கும் அநுகூலமான முக்கிய விஷயங்கள் என்னும் எழுதியிருக்கிறாள். தந்தையாரைப் பின்பு சமாதானப்படுத்திவிடலாம். மாதவியை அறியாதவனானதால், இவன் மோசமாயிருக்குமென்று பயப்படுகிறான். அவளே மோசம் பண்ணுவதாயிருந்தால், இந்த உயிர் ஒரு பொருட்டா ? என் மாதவியா மோசம் பண்ணுகிறவள் ! [போதல்.]

## மூன்றாங் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே ஒருபடைவீடு.] [காலம்:—முன்னிரவு.

[நாகப்பன் சேர்வையும், செம்பகமும் பேசிக்கொண்டிருந்தல்.]

செம்ப : யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதுபோல நானும் செய்வேனா ? தேவடியாளாய்விட்டால்,

ஸ்திரீ ஜாதிக்குள்ள ரோஷமும் போய்விடுமா? மதுரையிலிருந்து வினைகெட்டு இந்தக் காட்டுக்குவந்து, இவருக்கு மற்றொருத்தியை இணக்கிவிடாமல் ஏதுக்குத்தானிருக்கிறேன்? நன்றாயிருக்கிறது! பளா!

நாகப்: எல்லாம் தன்னைவிடத் தந்திரசாலி இல்லையென்று, தனக்குள்ளே மனப்பால் குடித்துக்கொள்கிறதுதான். கோளத்தாள் வலையிலே இவர் சிக்கிவிட்டால், அப்புறம் நாமெல்லாம் கிள்ளுக்கீரை தான்; நாகப்பனையும் செம்பகத்தையும் ஏன் தேடப்போகிறார் இவர்? ராவுண்ணியும் பகல்பட்டினியும் தானுபதிகளாய் விடுவார்கள்.

செம்ப: ஸேதுபதி மகனைப்பற்றி ஒன்றும் தூஷிக்கவேண்டாம் என்று என்னைக் கூப்பிட்டுச் சொன்னாரே, அதென்ன? திடீரென்று இப்படி மாறுவானேன்?

நாகப்: அவரும் தளவாயும் சாயங்காலம் கசுகசெனப் பேசிக் கொண்டிருந்தார்கள்; ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தேன்: சில சில வார்த்தைகள்தான் காதில் விழுந்தது: சேதுபதி மகனைத் தந்திரமாய் வரவழைத்துச் சிறைப்படுத்தப் போகிறார்கள் போலிருக்கிறது; தள வாய் யாரையோ "கொன்று களைவேன்," என்றும் சொன்னான்.

செம்ப: ஆ! எப்படி? சேதுபதி மகனைப் பிடித்துக் கொல்லப் போகிறார்களா?

நாகப்: அப்படித்தான் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்; நம்மவர் குரல்தான் அதிகமாய்க்கேட்டது; தளவாய் "ஒன்றுந்தாம் யுக்தி; மனசிலிருக்கட்டும்," என்று சொல்லிக்கொண்டே போனான்.

செம்ப: நீங்களேன் நான் திரும்பிவந்தவுடனே சொல்லவில்லை?

நாகப்: நீ தான் வந்தவுடனே அவரிடத்திலே போய்விட்டாயே; அப்புறம் முருகனும் கூடவிருந்தான். ஏன்? அதிலே உனக்கென்ன இவ்வளவு ஆத்திரம்?

செம்ப: ஒன்றுமில்லை, சொல்லவில்லையே என்று சும்மாதான் கேட்டேன். சமையலாச்சுதா பாருங்கள், சாப்பிடலாம்; பசியா யிருக்கிறது.

நாகப்: போனவிடத்திலே இன்றைக்கென்ன விசேஷம்?

செம்ப: எல்லாம் சாப்பிடுகிறபோது சொல்லுகிறேன்; சமைய லாச்சுதா பாருங்கள்; இதையெல்லாம் கழற்றிவைத்துவிட்டு வருகி றேன்.

[நாகப்பன் சேர்வை போதல்.]

MAHAMAHOPADHYAYA

[நகைகளைக் கழற்றி வைத்தல்.]

திடீரென்று இடிவிழுந்தாற்போல, இதென்ன ஆபத்து ! உடனே மாதவியிடம்போய்ச் சொல்லுவோமென்றாலும், அவளை இனிக்காலமே தான் பார்க்கக்கூடும். அதனாலென்ன, பாதகமில்லை ; இன்றிராத்திரியேயா இவர்கள் துர்யுக்தி நிறைவேறிவிடும் ? அவரை இவர்கள் எப்படிப்பிடிக்கப் போகிறார்கள் ? அவரைக்கொல்வதனால் தளவாய்க்கு என்னலாபம் ? இந்தப்பாழாவானுக்குத் தான் காரணமுண்டு, அவனுக்கென்ன ? இவன் எப்படியெல்லாம் என்னைச்சதிக்கப்போகிறான் ? ஏதோ ஒருவகையில் யோக்கியமாய் நாடகமாடி, நூறு இருநூறு சம்பாதித்து, மரியாதையாய்ப் பிழைத்துவந்தவளை, இக்கோலம் கண்டு, பொய்யும்புரட்டுஞ்சொல்லி ஏமாற்றி, பிழைப்பையும் கெடுத்து, மானத்தைக்காப்பாற்றிவந்த புருஷனையும் கொலைசெய்வித்து, வெட்கம் கெட்ட வேசையாக்கிச் சந்தியில் இழுத்து வைத்துவிட்டான் ; அப்படியும்பிழைக்கவொட்டாமே, இங்கே அழைத்துவந்து வேறொருத்தியைக் கூட்டிக்கொடுக்கச் சொல்லுகிறான் ; இப்பொழுதோ, ஒருநாளுமே எனக்கு அவர் கிடையாமற்போனாலும், தூரத்திலிருந்தாவது நான் கண்குளிரப்பார்த்துக் களித்துவரும், என் ஆசைக்காதலரை, இந்தப் பாதகன் கொலைசெய்யப் பார்க்கிறான். போனபிறப்பில் இந்தப்பாவிக்கு, ஜன்மப்பகையாளியாக நான் மூண்டிருந்தேன்போலும். எப்படியானாலும் சரி : இவன் மட்டும் அவருக்கு ஏதாவது கெடுதிசெய்யட்டும், என்கையாலேயே இவன் உயிரையும் வாங்கி, என் உயிரையும் மாய்த்துக்கொள்கிறேன். நான் சாதியில் மறத்தியென்பது நிசமானால், நான் வீரபாண்டியத்தேவர் மகளானால், இந்தச் சபதத்தை நிறைவேற்றுகிறேன். சாகத்துணிந்தவர்க்கு சமுத்திரம் முழங்கால் தானே ? ஒருகை பார்க்கிறேன்.

[போதல்.]

## நான்காங் காட்சி.

களம் : கோட்டைப்புறத்தே ஒருபடை வீடு.) [காலம் : நள்ளிரவு.

[மாதவியும் நாராயணியும் பிரவேசித்தல்.]

நாரா : ஆதியில் அவரை பத்மநாபஸ்வாமி கோவிலில் பார்த்த தினமும், இதேமாதிரி ' நேரியல் ' தான் அம்மை உடுத்திருந்தது.

மாதவி : இந்தக்கைக்கொலுசின் திருக்கை நன்றாய்த்திருக்கிவிடு. பாண்டிஸ்திரீகள் எப்படித்தான் அவ்வளவு நகைகள் ஸதாபோட்டுக் கொண்டிருக்கிறார்களோ ?

நாரா : எல்லாம் வழக்கந்தான் ; அம்மையும் பாண்டியிலிருந்து

வழக்கமாய்விட்டால், 'விநோதமாய்த் தோன்றுது. அதிகம் நகை கூடாதென்று அவரே சொல்வதுண்டே.

மாதவி: பார்த்து ஆறுமாசத்துக்கு மேலாகிறது; இடையிலே எழுத்துப்போக்குவரத்துக் கூடக்கிடையாது. இப்பொழுது என்ன மாயிருக்கிறாரோ? அந்தத்தாஸிசொன்னாள்: வருகிறவழியில் அடிக்கடி கவனித்தாளாம், முகத்தில் ஸந்தோஷமே யில்லையாம்; கொஞ்சம் தேகம் மெலிந்துகூட இருக்கிறாராம்.

நாரா: எல்லாம் அம்மைமேலுள்ள ஆசைதான்.

மாதவி: நிஜமாகவே அப்படியிருந்தால் நான்பாக்கியசாலி தான்.

நாரா: ஆனால், அதை ஸந்தேகிக்க இடமுண்டோ?

மாதவி: அப்படி யொன்றுமில்லை; அவர் அப்படி மாறப்பட்டவருமில்லை; எல்லாம் இப்பொழுது தெரிந்துவிடும். வெளியே எதோ அடிச்சத்தம் கேட்டாற்போலிருந்ததே.

நாரா: ஒன்றுமில்லை; அம்மைக்குத்தான் என்ன ஆத்திரம், என்ன ஆசை!

மாதவி: உன்னை யொருநாளும் மறக்கவேமாட்டேன்; உன் உதவியில்லாவிட்டால், அவரைக்கண்டு பழகியிருக்கவே முடியாதே; நீயும் ராவுண்ணியும் தான் எனக்கு முக்கிய ஆப்தர்கள்; அவன்கூட, உன் மூலமாய்த்தான்.

நாரா: அம்மைக்கு அடியோங்கள் என்ன செய்தால் தான் பெரிது! அம்மைவார்க்கிற கஞ்சியே அடியோங்கள் பிழைக்கிறது. ராவுண்ணியைக் கோபத்தில் தம்பிரான் குத்திக்கொல்லாமல், அம்மைதானே இரண்டுதடவை உயிரைக்காப்பாற்றித் தந்தது. அம்மை தீர்க்காயுஸாய் ஸந்தோஷமாயிருந்தால், அடியோங்கள் பாக்கியமே.

மாதவி: ராவுண்ணி பத்துமணிக்கே போய்விட்டானில்லையா?

நாரா: ஆம்; வருகிறதாயிருந்தால் வரநேரமாய்விட்டது; மணி பன்னிரண்டரைக்கு மேலாகிறது. அம்மை தலைசாய்த்துக்கிடக்கவேயில்லையே. இந்த மஞ்சத்தில் சற்று சிரமபரிகாரஞ் செய்துகொண்டால், அடிச்சத்தம கேட்டவுடன் நான் எழுப்பிவிடுகிறேன்.

மாதவி: நன்றாய்ச் சொன்னாய்! இப்பொழுது தூக்கமும் வருமா? ஆறுமாஸமாச்சுது பார்த்து, ஒருநிமிஷம் ஒரு யுகமாய் வளருகிறது, தூங்கச்சொல்கிறாயே நீ. வெளியேபோய், கோட்டைவாசல் பக்கமாக எதாவது வெளிச்சம் வருகிறது தெரிகிறதா, பார்த்துவா.

நாரா: யாரும் அறியாமல் இரகசியமாய்ப் படைவீட்டுக்குள்

வருகிறபொழுது, வெளிச்சமும் கொண்டுவருவார்களோ ? ஒருவேளை வரவில்லையோ என்னவோ ?

மாதவி : நான் எழுதியிருக்கிறதற்கு அவர் வராமலிருக்கமாட்டார் ; ஆனால் காவல் எப்படியோ, அவர் தந்தைக்குத்தெரிந்து விட்டதோ என்னவோ ? அதோ அடிச்சத்தம் !

[வெளியே இருந்து இராவுண்ணிநாயர், "நாராயணி," "நாராயணி," என்று கூப்பிடுதல்.]

நாரா : வந்து விட்டார்கள் ; அதோ ராவுண்ணிநாயர் கூப்பிடுகிறான்.

[போதல்.]

மாதவி : (தனி) மனமே, சற்றுப் பொறுத்துக்கொள்.

[சோமசுந்தர சேதுபதி பிரவேசித்தல்.]

சோமசு : மாதவி ! என் கண்ணாட்டி !

மாதவி : ப்ரபோ ! தங்கள் உடம்பு மெலிந்திருக்கிறதே.

சோமசு : என்னுடம்பா ? உன்கடிதம் கிடைத்ததுமுதல், ஒரு பூரிப்புப் பூரித்தன்றோ இருக்கிறது. இப்பொழுதேனும் என் காதல் நிஜம்தானா ? உன்மேல் நம்பிக்கையுள்ளவன்தானா ?

மாதவி : க்ஷமித்துக்கொள்ளவேணும் ; நான் அப்படி யெழுதினதில் மனஸ்தாப முண்டோ ?

சோமசு : உன் காதலை வெளிக்காட்டும் மொழிகளிலும், உன்னைப்பார்ப்பதிலும், ஸந்தோஷமுண்டாகுமோ, மனஸ்தாபமுண்டாகுமோ, எனக்கு ? நீ யிவ்வளவு துணிந்து, உன் ஜேஷ்டர் படைவீட்டுக்குள்ளேயே என்னை வரும்படி வேண்டியதே, உன் காதலை ருசுப்படுத்துகிறதே. நானே பாக்கியசாலி.

மாதவி : அவருக்கும் தெரியும்.

சோமசு : யாருக்கு ? என்னதெரியும் ?

மாதவி : ஏனிப்படிப் பதறுகிறீர்கள் ? என் ஜேஷ்டர் சொல்லித்தான் நானெழுதினேன் ; அவரும் ஸம்மதித்துவிட்டார்.

சோமசு : ஐயோ ! தெய்வமே ! இதென்ன மதிமோசம் ! என் மனம் தத்தளிக்கிறதே ! உன்னையும் என்னையும் ஒருமிக்க மோசஞ்செய்ய, உன் ஜேஷ்டனும் வம்சாரிமாறனும் செய்திருக்கும் உபாயமே இது.

மாதவி : அப்படியொன்றும் தாங்கள் ஸந்தேகிக்கவேண்டாம் : என் ஜேஷ்டன் எனக்கு பத்மநாபஸ்வாமிமேல் ஸத்தியம் செய்துகொடுத்திருக்கிறார் ; மாறனுடைய புரட்டுக்களெல்லாம் அவ

ருக்குத் தெரிந்துவிட்டது; அவனை மெய்காவலில் வைத்திருக்கிறாராம்; நம்முடைய ஸம்பந்தத்துக்கு இணங்கிவிட்டார்; தங்கள் மூலமாய்த் தங்கள் அச்சனுக்குச் சில ஸங்கதிகள் அறிவித்து, ஸமாதானமாய்ப் போகவேண்டுமென்றே, தங்களை இப்படி வரும்படி எழுதச் சொன்னார்; அவரே இப்பொழுது வந்து தங்களிடம் ஸங்கதிகளைச் சொல்வார்.

சோமசு: ஐயோ! இதென்ன பேதைமை, மாதவி! உன் ஜேஷ்டனுக்கும் என் தந்தைக்கும், அனந்தசயனத்தில் ராஜஸபையிலே சபதம்கூறிப் பிரிந்தது முதல், தீராப்பகை யாயிற்றே; ஸமாதானமேது ஸமாதானம்? உன்னை யிப்படி ஏமாற்றி என்னைக் கைவசப்படுத்திக் கொண்டால், ஒருவேளை கோட்டையைக் கவர்ந்துவிடலாமென்று செய்திருக்கும் உபாயமே இது. என் தந்தையோ, தம்மகன் காதற் பொருட்டுக் கோட்டையை விடுபவர்?

மாதவி: இல்லை, ப்ரபோ, என் பேச்சை நம்புங்கள்; என் ஜேஷ்டனுக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஒன்றும் கிடைக்கவே கிடையாது. தங்கள் மூலமாய் தங்கள் அச்சனுடைய நன்மதிப்பை ஸம்பாதித்து, ஸமாதானமாய்க் காரியங்களை முடித்துக்கொள்ளவேண்டுமென்பதே அவர் உத்தேசம். எனக்கு ஸத்தியம் செய்துகொடுத்திருக்கிறார்.

சோமசு: உன் ஜேஷ்டனைப்பற்றி உனக்கு நான் சொல்லவேண்டுமா, மாதவி! இராஜ்ய விஷயங்களில் ஸத்தியத்தைப் பெரிதாக நினைத்து யார் நடக்கிறார்கள்? நான் அறிந்தவரை, என் தந்தையாரைத் தவிர ஒருவருமேயில்லை. என் மனம் ஏதோ பதறுகிறது; என்ன ஆபத்தோ வரபபோகிறது.

மாதவி: ஒன்றும் வராது; தங்களுக்கு எதாவது வருவதாயிருந்தால், என் உயிரைக்கொடுத்து நான் காக்கிறேன்; இதனால்வரும் ஆபத்துக்கு நான் பாத்தியதைப் படுகிறேன்.

சோமசு: ஐயோ! என் கண்ணாட்டி! உன்னால் என்னமுடியும்? நீ யொரு பேதை; வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கப்பட்டவள்; இந்த விஷயங்களில ஸ்திரீஜாதியால் என்னமுடியும்.

மாதவி: அப்படி நினையாதேயுங்கள்; எங்கள் ராஜ்யமே பெண் ராஜ்யம்; பாண்டி ஸ்திரீகளைப்போலல்ல நாங்கள். எங்களுக்குள்,—

சோமசு: அதென்ன அரவம்?

[தளவாய் கண்ணன் தம்பியும் வம்சாரிமாறனும் பிரவேசித்தல்.]

தளவாய்: அதாரடா சோரன், அர்த்தராத்திரியில் ஸ்திரீஜாதிகள் இருக்கும் அந்தப்புரத்தில்வந்து பேசிக்கொண்டிருக்கிறது?

சோமசு : ஐயோ! தெய்வமே! நான் நினைத்ததுபோலாய்விட்டதே! பார்த்தாயா, மாதவி!

மாதவி : ஜேஷ்டன், என்ன இப்படிப் பேசுகிறது? இதுவும் ஒரு வேடிக்கையோ? என்னையும் அவரையும் பயமுறுத்தவோ? ஜேஷ்டன் வரச்சொல்லியே அவர் வந்தது? இங்ஙனம் அவமானப் படுத்தலாமோ?

தளவாய் ; காமப்பேய் பிடித்து வெட்கமும் புத்தியும் கெட்டவனுக்கு, அவமானமும் ஒரு கேடா?

சோமசு : என்னைக் கபடமாய் ஏமாற்றிக் கெடுக்கச்செய்த உபாயமோ இது? இந்த நிமிஷமே என்னைத் திரும்பிக் கோட்டைக்குப் போகவிடாவிட்டால், மாசற்ற வீரமும் கீர்த்தியுமுள்ள என் தந்தையார் கோபத்துக்குள்ளாவீர்கள். இப்படிப்பட்ட துரோகம் கண்டதேயில்லை. இதென்ன யோக்கியதை?

தளவாய் : வலிய யோக்கியன் இவன்! நடுநிசியில் சோரனைப் போல் ஒளித்துவந்து, தன் இளவரசருக்கென்று நிச்சயித்து வைத்திருக்கும் கன்னிகையைக் கற்பழிக்கப் பார்க்கிறவன்! வலிய யோக்கியன்!

சோமசு : யோக்கியதை இன்னதென்றறிபவன் நீயோ, அல்லது உன்கூடவந்திருக்கும் மகாதூர்த்தனான சண்டாளனோ! காதல் வசப்பட்டு, உன் சகோதரியையும் நீ யிப்படி ஏமாற்றி யிருப்பா யென்பதை நினையாமல், அவள் எழுத்தை நம்பி மதிமோசம் போய்வந்துவிட்டதால், இவ்வாபத்து விளைந்துவிட்டது. போர்முகத்தில் ஆயுத பாணியாயன்றி, மற்றெங்கும் இந்தப் பாதகன் முகத்தில் விழித்தாலும் பாவமே.

வம்சா : இவ்வளவுதானா பேசத்தெரியும்? இன்னும் ஒன்றும் தோன்றவில்லையா? என் யோக்கியதை யிருக்கட்டும் : உன்யோக்கியதை இதோ சாயம் வெளுக்கிறதே ; நான் காமப்பித்தனோ, நீ காமப் பித்தனோ?

மாதவி : ஜேஷ்டன் எனக்கு பத்மநாபஸ்வாமிமேல் ஸத்தியஞ்செய்து தரவில்லையோ? மாறன் வார்த்தையைக்கேட்டு, ஜேஷ்டனும் துரோகஞ்செய்யுமோ? ஜேஷ்டன் சொற்படியே நான் விசுவசித்து எழுதனுப்பினது? இப்போழ்து,—

தளவாய் : இப்போழ்து, மாறனுடைய யுக்தியினாலும், உன்னுடைய பேதைமையினாலும் ஸேதுபதியின் ஒரேமகன் என்கையில் சிக்கிவிட்டதால், நெல்லைக்கோட்டைத் திறவுகோலும், கப்பம் கேட்கிறதில்லையென்ற உறுதிச்சீட்டும் உடனே வந்தாலன்றி, இவன் உயிரோடு திரும்பிப்போக விடுகிறதில்லை ; நீயும், என் ஆஜ்ஞைப்படி மா

றனை ஸம்பந்தம் பண்ணிக்கொள்ள ஸித்தமாயிரு; என்னை ராஜஸபை யில் அவமானம் பண்ணின அந்தக்கழுவேறியின் மகனை யடையல மென்று சொப்பனத்திலும் நினையாதே. யாரங்கே?

[படைவீரர் சிலர் ஆயுதபாணிகளாய்ப் பிரவேசித்தல்.]

இந்த நிசாசர ஸ்திரீ சோரனைப் பின்கட்டுமாருய்க்கட்டிச் சிறை ப்படுத்துங்கள்.

மாதவி: என்னைக் கொன்றுவிட்டு அப்படிச்செய்யலாம்.

[சோமசுந்தர சேதுபதியைச் சேர்த்துக் கட்டிக் கொள்ளுகிறுள்.]

தளவாய்: சீ! வெட்கம் கெட்ட வேசையோ நீ.

[அவள் கூந்தலைப்பிடித்திழுத்துத் தள்ளுகிறுன். படைவீரர் சோமசுந்தர சேதுபதியைப் பின்கட்டுமாருகக்கட்டி யிழுத்துக்கொண்டுபோதல்; யாவரும் போதல்.]

## நான்காம் அங்கம்.

(களம் : நெல்லைக்கோட்டையும், கோட்டைப்புறத்தே பாசறையும்.)

### முதற்காட்சி.

களம் :—கோட்டையில் தலைவர் அரமனை.] [காலம் :—வைகறை.

[திருமலை சேதுபதியும் தருமி நாச்சியாரும் பேசிக்கொண்டிருத்தல்.]

தருமி : இப்படி உறக்கமின்றி விழித்திருந்தால், நம்மசோமுவுக்கு உடம்புக்காகுமா? வேறு ஆளில்லாவிட்டால் தான் தீராது ; தலைவர், தளவீரர் எல்லாரும் இருக்கிறார்களே.

திரு. சே. : இதுவரையுந்தான் உன்மனதுபோல வளர்த்துவந்தாய். இனிமேலாகிலும், அவன் ஆண்மைக்கும அந்தஸ்துக்கும் தக்கபடி, போர்முறைகளிலும் அரசியல் நடபடிகளிலும் அவன்பயின்று தேறவேண்டாமா? பெண்ணானால் உன்னிஷ்டப்படியே வளர்க்கலாம் ; ஏன் ஆணைப்பெற்றாய்?

தருமி : அதற்காக ஒரே தீர்வையாகப்போட்டுக் கொல்லுகிறதா? சிறிது சிறிதாகவாவது பழக்கவேண்டும்.

திரு. சே. : அவன் எதாவது சொன்னானோ உன்னிடம்?

தருமி : நானாகத்தான் சொல்கிறேன். அவனைக் காண்பதே அரிதாகி விட்டதே.

திரு. சே. : தருமி! நான் சொல்வதைக்கேள் : இதற்கெல்லாம் நீ கவலைப்படாதே. எனக்கும் மகன்தானே? உனக்குள்ள அருமை எனக்கில்லையோ? அல்லது, எனக்கு வேறொரு ஆசைமகன் இருக்கிறானோ? அவன் தேகசௌக்கியத்தை நான் கவனித்துக் கொள்கிறேன. உடலுழைப்பினால் யாரேனும் உலகத்தில் செத்ததுண்டோ?

தருமி : ஆனால், செத்தால்தான ஒன்றா? நாட்டுக்கெதாவது வந்துவிட்டால், உங்களுக்குத் தாயும் வேண்டாம், பிள்ளையும் வேண்டாம் ; அவர்களிருப்பதையே மறந்து விடுவீர்கள். உங்கள் உடம்பைப் பார்த்துக்கொளள நான் வந்திருக்கிறேனே ; நீங்கள் அவனைப்பார்த்துக் கொள்ளப் போகிறீர்களாக்கும. பளா!

திரு. சே. : எல்லாம் சௌபாக்கியவதி தருமிநாச்சியாரவர்கள் தானே என்னைக் குழந்தைப்பருவமுதல் இப்பொழுது அறுபத்திரண்டு வயதுவரையும் பேணிவளர்த்துக் கண்பார்த்து வந்தது ; அந்தப் புண்ணியத்துக்காகத்தானே ' தருமி ' என்னும் பட்டமும் வந்திருக்கிறது.

தருமி : பட்டமோ பட்டமில்லையோ, உங்கள் அரமனைக்குள் நான் அடியெடுத்து வைத்ததுமுதல், என்னாலேன்றமட்டும், எனக்குத்

தெரிந்தவரையும், என்கடமையைச் செலுத்திக்கொண்டுதான் வந்திருக்கிறேன்; உங்கள் மனமே அறியும்.

திரு. சே. இத்தனைகோபமும் ரோஷமுமா? ஏது, அம்மாளைப் பரிகாசங்கூடச் செய்யப்படாதுபோலிருக்கிறதே. 'என்மனசறியும்,' என்று ஒரு வார்த்தை சொன்னையே, அது மெய்தான்: தருமியில்லாவிட்டால் என்பாடு கொஞ்சம் மோசமாய்த்தான் இருந்திருக்கும். இந்தப் பணியாரத்தில் சருக்கரையதிகம்: தருமி பேச்சைப்போலில்லாமல், திகட்டுகிறது.

தருமி: இத்தனை வயசாகியும், கேலியும் குறும்பும் அகந்தையும் போகவில்லையே இன்னும்.

திரு. சே.: என்னைப் பார்த்தால் கிழவனைப்போலவாதோன்றுகிறது உன்கண்ணுக்கு? சரி, சரி. இனி விழிப்பாயிருக்கவேண்டும். சோமு எங்கே, இன்னும் வரவில்லையா?

தருமி: இன்னும் வரவில்லை. இராத்திரிச் சாப்பிட்டபின் நான் பார்க்கவில்லை. தூதுச் சங்கதிகளெல்லாம் மகாலிங்கம் சொன்னான்: ஆள் பார்த்துப் பார்த்து உங்களிடம் வந்து சொல்லவந்தார்களே, இப்படிப்பட்டபேச்சை!

திரு. சே.: தன்மனங்கொண்டு பிறர்மனம் அளப்பதே மனிதசுபாவம்; சேர்ந்திருக்கும் இருவருமோ வடிகட்டின துரோகிகள்; பழிபாவங்களுக்குச் சிறிதும் அஞ்சாதவர்கள்; அவர்கள் சூழ்ச்சி வேறு எப்படியிருக்கும்?

[பணியாள் ஒருத்தி பிரவேசித்தல்.]

பணியாள்: கோட்டைத் தலைவர் வந்திருக்கிறார்; ஏதோ தூது வந்திருக்கிறதாம்.

திரு. சே.: இதோ வந்துவிட்டேன் என்று சொல்லு.

[பணியாள் போதல்.]

தருமி! நான்போய்வருகிறேன். சோமுவைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்.

தருமி: அவனைக்கண்டால் வரச்சொல்லுங்கள். காலையில் ஒன்றும் சாப்பிடவில்லை இன்னும். [போதல்.]

## இரண்டாங்காட்சி.

**களம்:—கோட்டைவாசல்மேல் ஒரு காவற்கூடம்.] [காலம்:—காலை.**

[சண்முகத்தேவனும் நெல்லையப்பத்தேவனும் நிற்றல்; திருமலைசேதுபதியும், மகாலிங்கஞ்சேர்வையும், எல்லையப்பரும் பிரவேசித்தல்; கீழேகொத்தளத்தில் பரமேசுவரப்பணிக்கர் நிற்றல்.]

திரு. சே.: இன்னும் என்னதூது? ஓகோ! அந்த இரண்டு

பாதகர்களும் அதோ மரத்தடியில் வந்திருக்கிறார்களோ! பொழுது விடியவும் இன்று இவர்கள் முகத்திலா விழிக்கநேர்ந்தது? தூது விபரமென்ன?

பரமே: ஸ்ரீபத்மநாபதாஸ வஞ்சிபால விஷ்ணுவர்ம குலசேகர கிரீடாதிபதி மஹாராஜாதிராஜமார்த்தாண்ட சேரமான் வலியதம்பிரான் அவர்கள் தளவாய் மூத்தவிடத்துக்கண்ணன் தம்பித் தம்பிரானுடைய கல்பனைப்படி, கோட்டையை விடுகிறீர்களா இல்லையா என்று, தீர்ச்சியாயுள்ள உத்தரம் கேட்கவந்தேன்.

மகாலி: இதற்குத்தானா இவ்வளவு ஆரவாரம்!

திரு சே.: உம்பிரானுக்குப் போய்ச்சொல்: இங்கே ராஜதுரோகிகள் ஒருவருமில்லை; நாட்டுக்காக இருந்த ஒருவனும், இனம் இனத்தோடே என்பதற்கிணங்க, உம்பிரானையே சேர்ந்துவிட்டான்; நேற்றுக்கூறியபடி, கப்பத்தையும், அபராதத்தையும், நஷ்டியையும் உடனேயிறுத்துத், தானும் தண்டும் வெளியேறாவிட்டால், தகனபூமியையன்றி ஜனனபூமியைத்திரும்பிக் காணப்போகிறதில்லை.

பரமே: ப்ரபோ! தங்கள் மகனையும் கலந்துகொண்டு விடை தரும்படி தம்பிரான் கல்பனை.

திரு. சே.: ஏன், இதில் அவனுக்கென்ன சம்பந்தம்? அவன் எங்கே காணவில்லை? மகாலிங்கம், சோமு எங்கே? அரமனைக்கும் வரவில்லை, இங்கேயுமில்லையே.

மகாலி: நேற்றிரவு பார்த்ததுதான்; விடிந்தபின் நான் காணவில்லை. சண்முகரே, நீர்கண்டீரோ? எங்கேபோயிருப்பார்?

சண்மு: ப்ரபோ! வெளியிடக்கூடாதென்று அவர்கள் உத்திரவு செய்திருக்கினும், இனிச்சொல்லவேண்டியதே: நேற்றிரவு, இரண்டாஞ்சாமத்துவக்கத்தில், நானும் நெல்லையப்பரும் இங்கே உலாவிக்கொண்டிருந்தபொழுது, கொத்தளத்தில் பேச்சுக் குரல் கேட்டது; உடனே, ஒரு கொள்ளிவாயம்பு எங்கள் முன்புவந்து விழுந்தது; அம்பின் அடிப்புறத்தில், தங்கள் குமாரர் விலாசமெழுதி, ஒரு முத்திரையிட்ட கடிதம் கட்டியிருந்தது; கொள்ளியின் வெப்பினால் மெழுகு இளகி, முத்திரை இனந்தெரியவில்லை; விலாசம் தெளிவாயிருந்தமையால், அந்தக்கடிதத்தை அவர்களுக்கு அனுப்பினேன்; அவர்களும் கறுப்பணபிள்ளையும் தெற்குமூலைக்காவற்கூடத்திற் பேசிக்கொண்டிருந்தபொழுது, நெல்லையப்பர் கடிதத்தைக்கொண்டுபோய்க் கொடுத்தாராம்; வாங்கி வாசித்துப்பார்த்துவிட்டு, 'ஒன்றும் விசேஷமில்லை; ஆனால் இதைவெளியிற் சொல்லவேண்டாம்,' என்று உத்திரவுசெய்து அனுப்பிவிட்டார்களாம்; அவர்களும்தலைவரும் உத்திரவு

கொடுத்திருந்தபடி., நாங்கள் இங்கேயே இருந்தோம்; அவர்கள் இங்கே வரவுமில்லை, நாங்கள் அப்புறம் பார்க்கவுமில்லை.

திரு. சே.: என்ன, மகாலிங்கம், வெளியே நின்றும் கடிதம் வருகிறதென்ன, வெளியிற் சொல்லக்கூடாத இரகசியமென்ன? வளர்த்தகடாவே மார்பிற் பாயப்பார்க்கிறதோ?

மகாலி: அப்படியொன்றும் பிசகாயிருக்கவேயிராது; தீர விசாரிக்கவேண்டும்; சண்முகரே! நீரேபோய் அவர் எங்கேயென்று பாரும்; களைத்துப்போய் ஒருவேளை எங்கேனும் உறங்குவதாயிருக்கலாம்.

பரமே: ப்ரபோ! வீண் அலைச்சல்வேண்டாம். தங்கள் மகன், நேற்று நடுநிசியில், எங்கள் பாசறைக்குள் தம்பிரான் அந்தப்புரத்தில் சோரன்போல வந்து நுழைந்து, உங்கள் இளவரசருக்குக் கலியாணஞ்செய்துகொடுக்க நிச்சயித்து வைத்திருக்கும் தம்பிரான் கனிஷ்டபுத்திரியோடு ஸம்பாஷித்துக்கொண்டிருந்ததைக், கையும் களவுமாகத் தம்பிரானே பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடித்ததனால், இப்பொழுது அவர் சிறையிலிருக்கிறார். தூதுக்கு இப்பொழுது தங்கள் பதிலென்னவென்று கேட்கும்படி தம்பிரான் கல்பனை.

திரு. சே.: நான் அறிந்தவரை, என்மகன் அப்படிப்பட்ட செய்கைக்குரியவனல்லன்; தளவாயும் அவர்கூட்டாளியுமாகச் சேர்ந்து, அவனை எவ்விதமோ ஏமாற்றிச் செய்தமோசமாகவே இருக்கவேண்டும் இது. அதெவ்வாறிருப்பினும், அதற்கும் தூதுவிஷயத்துக்கும் சம்பந்தமேயில்லை; என்குடியடங்க உங்கள் பாசறையில் சிறைப்பட்டிருப்பினும், நேற்றுச்சொன்ன பதிலொழிய வேறில்லை; இதை உங்கள் தளவாய் உறுதியாய் வைத்துக்கொள்ளட்டும். பின்பு, இதையும் போய்ச்சொல்: நீ சொல்கிறபடி என்மகன் தவறிழைத்திருந்தால், அவனை என்ன தண்டனைக்குள்ளாக்கினும் ஆக்கட்டும், அவன் என்மகனல்ல; அப்படிக்கின்றி, அவனைவஞ்சித்துச் சிறைப்படுத்தி, அவனுக்கேதேனும் தீங்கிழைத்தால், உங்கள் நாட்டையெல்லாம் பாழாக்கி, எருக்கும் குருக்கும் கலந்து விதைத்தாலன்றி, என் வாளை உறையிலிடேன். இதையும் உறுதியாய்க்கொள்ளட்டும்.

பரமே: ப்ரபோ! தம்பிரான் கல்பனையை அறிந்துவருகிறேன்.

[போதல்.]

திரு. சே.: இத்தனைபேரிருந்தும் மோசம்போய்விட்டதே, மகாலிங்கம். இவர்கள் பின்புபார்க்கவில்லையென்றால், அவன் எவ்வாறு வெளியேபோனான்? அந்தக்கறுப்பணன் எங்கே?

மகாலி: ஒருவருக்கும் ஒன்றுமே தெரியவில்லை; நான் என்ன சொல்லட்டும்? குடிமோசம்போய்விட்டதே. அவர்கள் இருவரும்

படுபாதகர்கள் ; அவர்கள்செய்த மோசமே இது ; இவராகப்போயிருக்க வேமாட்டார்.

திரு. சே. : அவர்கள் மோசம்செய்தால், இவனுக்குப் புத்தி யில்லையா ? பச்சைக்குழந்தையா ஏமாற்றிவிட ?

எல்லை : காதற்குறிகள் தோன்றுகின்றன என்று நான் கூறினேனே.

மகாலி.: என்ன கடிதமோ ? யார் எழுதினதோ ?

[கோபாலகனபாடிகள் பிரவேசித்தல்.]

யார் நீர் ? இங்கெங்கே வந்தீர் ? வீட்டிலே பிரசவகாலமென்று முறையிடவந்த பிராமணரில்லையா நீர் ?

கோபால : ஆமாம், ப்ரபோ, நான்தான். என்பேர் கோபால கனபாடிகள் ; பிராமணோர்த்த கனபாடிகள் என்றும் சொல்வார்கள்.

திரு. சே. : இங்கேன் வந்தீர் ? திதி வீடா இது ?

கோபால : இல்லை ; கிரகத்திலே, என்ஸம்ஸாரம், இது ஆறுவது ப்ரஸவம்,—இல்லை, முன்னால் ஒன்று தவறிவிட்டது,—ஏழாவது ப்ரஸவம். நேற்றிராத்திரித்தான், வெகு சிரமத்தின்பேரில், பிழைத்தது மறு ஜன்மம், துலா லக்நத்தில், ஒரு ஸ்திரீ ப்ரஜை பிறந்தது ; ஆனால் அது கர்மானுஸாரத்தினால், ஜீவனோடின்றி, முண்டமாய்ப் பிறந்தது,—

திரு. சே. : இங்கே நீர் வந்த விஷயமென்ன ?

கோபால : அது தானே சொல்லவருகிறேன் : அதை அடக்கம் பண்ணுவதற்காக, நானும் என்மாமியாரும், ஒருமுறைக்கு எனக்கு அத்தையுங்கூட அவள், நானும் அவளுமாகப் பிடாரிமூலைவாசல் பக்கமாக, அருணோதய ஸமயத்தில், அதையெடுத்துக்கொண்டு போனோம் ; அங்கே ஒரு காவல்காரன் இருந்தான் ; அவன் பேர், என்னவோ சொன்னானே ? என்னவோ சொன்னானே ? ஆமாம், அவன் பெயர் சோட்டுப்புலித்தேவனாம் ; அவன் தலைவரிடம் சொல்லச்சொன்னான்.

மகாலி : என்ன சொல்லச் சொன்னான் ?

கோபால : அது தானே சொல்லவருகிறேன் : அதை அடக்கம் பண்ணிவிட்டுத் திரும்பும்பொழுது,—

திரு. சே. : காவற்காரன் என்ன சொல்லச் சொன்னான் ?

கோபால : அதுதானே சொல்லவருகிறேன் : ஸேதுபதிவந்திருக்கிறாராமே, அவருடைய குமாரராம், அவரும் மதுரையான் ஒருவனுமாக,—இந்த ஸமாசாரம் என் மாமியாருக்குக்கூடத் தெரியாது ; அவள்முன்னாலே அழுதுகொண்டுபோய்விட்டாள் ;—

மகாலி: சங்கதியைச் சொல்லும்.

கோபால: அது தானே சொல்லவருகிறேன்: என்ன சொன்னேன்? நீங்கள் அவசரப்படுகிறதிலே மறந்துபோய்விட்டது.

திரு. சே.: 'சேதுபதியின் மகனும், மதுரையான் ஒருவனுமாக,'—

கோபால: ஆ, அதுதான்! அதுதான் சொல்லவந்தேன்: ஸேதுபதியின் குமாரரும் மதுரையான் ஒருவனுமாக, நேற்றிராத்திரி, நடுநிசியிருக்குமாம்,—அப்பொழுதுதான் ஆத்திலே விரஸோதயஸமயம்,—அந்தவாசல்வழியே போனார்களாம்; கோட்டைக்குவெளியே அகழைத்தாண்டிப்போனார்களாம்; சீக்கிரம் திரும்பிவருவதாகச் சொல்லிவிட்டுப்போனார்களாம்; போனபேர் திரும்பி வருகிறவரை, அவனை அங்கிருந்து அசையக்கூடாதென்று சொல்லிவிட்டுப்போனார்களாம்; இன்னும் வரவில்லையாம்; அதுதான் அவன் என்னைச் சொல்லச் சொல்லிக்கெஞ்சினான்; தலைவரிடம் சொல்லச் சொன்னான்; அவன் அதைவிட்டுவந்தால், தலைபோய்விடுமாம்; அவன் முதலில் என்னை "சாமி!" என்று கூப்பிட்டவுடன், ஏதோ துஷ்டதேவதையென்று நான் திடுக்கிட்டுவிட்டேன்.

திரு. சே.: அந்த வாசற்கதவு திறந்திருக்கிறதா, அடைத்திருக்கிறதா?

கோபால: கபாடபந்தனம் பலமாய்ப் போட்டிருக்கிறது.

திரு. சே.: சரி, நீர் போம்.

கோபால: தலைவரே, எனக்கு உத்திரவுதானே? நான் போகட்டுமா?

மகாலி: போய்வாரும்.

கோபால: இவர்கள் யார், தெரியவில்லையே?

மகாலி: போமென்றால் போகமாட்டீரா? உம்மவேலையைப் பாரும்போம்; அப்புறம் விசாரித்துக் கொள்ளலாம்.

கோபால: அடே அப்பா! இதற்கு இவ்வளவு கோபமா? இதுதான் கலியுகத்திலே உபகாரம் பண்ணினால் கிடைக்கிறபலன்.

திரு. சே.: ஏன், ஐயா, போகச் சொன்னால் யுகதருமம் பேசிக்கொண்டிருக்கிறீர்?

கோபால: ஐயா, போய்விடுகிறேன். [போதல்.]

திரு. சே.: அவன் சென்றவழி தெரிந்துவிட்டது. அந்தக் காவற்காரனை அழைத்துவரச்சொல். அவன் யார்? சரியான ஆளாகக் காணுகிறது.

மகாலி : ஆம், சோட்டுப்புலி நல்ல நம்பிக்கைக் குரியவன்தான்; வல்லநாட்டான், நெல்லையப்பரே, அவனை யழைத்துவரச்சொல்லும்.

திரு. சே. : காவலுக்கு இங்கிருந்தே பதில் ஆள் அனுப்பவேண்டும்.

[நெல்லையப்பத்தேவன் போதல்.]

மகாலி : உடனே திரும்புவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தால், அவர்கள் செய்தமோசம்தானிது ; ஐயமேயில்லை.

[பரமேசுவரப்பணிக்கர் கீழே திரும்பி வருதல்.]

திரு. சே. : என்ன செய்தி ?

பரமே : ப்ரபோ ! இங்கே சொன்னதைத் தம்பிரானிடத்தில் அறிவித்தேன் ; தம்பிரானுடைய திருமனஸை தங்களுக்கு அறிவிக்கும்படி கல்பனையாயிருக்கிறது ; இதே தீர்ச்சியான கல்பனை : இன்னும் மூன்று திவஸத்துக்குள், அதாவது சுக்ரவாரம் ஸூரியோதயத்துக்கு முன்பு, இந்தக் கோட்டைத் தாழ்க்கோலும் ; இனிமேல் கப்பம் தரவேண்டாம் என்று உறுதிச்சீட்டும் ; உங்கள் இளவரசர் வம்சாரிமாறனுக்கு, அவர்பாகத்துக்கு, நெல்லைச் சீமையை ராஜரிடம் சொல்லி வாங்கிக்கொடுப்பதாக தங்கள் ஸத்தியமான வாக்குத்தத்தமும் ; தம்பிரானுடைய திருமுன்பைக் கிட்டாவிடின், தங்கள் மகனை, இந்தயுத்தத்துக்குக் களப்பலியாகக் கொன்றுகளைந்து, யுத்தமும் மேல் நடத்தப்படும். (கொடுங்கோளூர் பகவதிமேல் ஆணையிட்டு) இது ஸத்தியம் ! ஸத்தியம் ! ஸத்தியம் !

[பரமேசுவரப்பணிக்கர் போதல்.]

எல்லாரும் : ஐயோ ! இதென்ன அநியாயம் !

திரு. சே. : நம்ம தண்டு மொத்தம் எழுநூறு தலைக்கட்டா ?

மகாலி : ஆம், ப்ரபோ, எழுநூற்றிருபத்திரண்டு பேர்.

திரு. சே. : கோளத்துச்சேனை ஆறுயிரத்துக்குக் குறைவில்லையென்று சொன்னாயோ ?

மகாலி : அவர்கள் பதினாயிரமென்று சொல்கிறார்கள் ; என் மதிப்பில் ஏழாயிரத்துக்கு மேலிராது.

திரு. சே. : வேறுவழியில்லை ; விதிபோல் நடக்கிறது. இனிமேல் கோட்டைக்காவலை நீயே பதனமாய்ப் பார்த்துக்கொள் ; யாரையுமே நம்பாதே ; எதானாலும், எவ்வளவு அற்ப சங்கதியாயிருந்தாலும், நம்மிடம் தெரியப்படுத்தி உத்திரவுவாங்கிக்கொள்ளவேண்டியது. நான் அரமனைக்குப்போகிறேன்.

மகாலி : சமுகம் இவ்வாறு உத்திரவானால் எப்படி ? அவர்களோ கொலைபாதகர்கள் ; பழிபாவம் என்று அஞ்சவேமாட்டார்

கள்; சொன்னபடி செய்தாலும் செய்துவிடுவார்கள். எப்படியாவது சமாதானம்பேசிப்பார்க்கவோ, அல்லது வேண்டிய பணத்தைக் கொடுத்துச் சிறைமீட்கவோ, ஏற்பாடுசெய்யவேண்டாமா? சமுகம் நினைத்தபடி, அவர்களை எதிர்த்துப் போராடமுடியாதுதான்; கோட்டைக்கு வெளியேபோனால், நம்மசேனை முழுதும் மடிந்து, கோட்டையும் அவர்கள் வசமாய்விடுவது திண்ணம். வேறுவிதமாக ஏற்பாடுசெய்யாமலிருக்கலாமா?

எல்லே: கட்டளையானால், நானே தூதுசென்று, எவ்வாறாயினும் ஒருவிதமாக முடித்துக்கொண்டு வருகிறேன். பிள்ளையானபிள்ளையா! இத்தகைய அநீதம், இதுகாறும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே.

திரு. சே.: தளவாய் கண்ணன் தம்பியை உங்களுக்குத் தெரியுமா?

மகாலி: வெறும் மூர்க்கன், படுபாதகன், என்றுகேள்வி; நேரில் தெரியாது?

எல்லே: யானும் அப்படியேதான்கேள்வி; எனக்குந்தெரியாது.

திரு. சே.: அவனை அறிந்திருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள். நான் அவனை நன்கு அறிவேன். நம்ம நாட்டில் வம்சாரி மாறன் எப்படியோ, அப்படியே அவன் கோளத்தில்; ஆனால் இவனைப்போல் காமப்பேய் பிடித்தவனில்லை; இவனிலும் பதின்மடங்கு வஞ்சகமும், கொடுமையும், பேரவாவும் உடையவன்; இவனைப் பெண்மூலமாய்த் திருப்பிவிடலாம், அவனை அசைக்கவே முடியாது. சேரமான் நல்ல சீலன்; நெஞ்சிளக்கமும் கண்ணோட்டமுமுள்ளவன்; ஆனால் தளவாய் கண்ணன் தம்பியிடத்தில் அவனுக்கே பயமுண்டு; அதன்பொருட்டே அவனை அடிக்கடி வெளியே அனுப்பிவிடுவதும். எனக்கும் தளவாய்க்கும் சேரமானது சபையில் நடந்த வாக்குவாதத்தால், எங்களுக்குள் தீராப்பகை; அவன் சொல்வதற்கெல்லாம் நான் இப்பொழுது இணங்கினாலும், அப்பகை நீங்காது; நான் இணங்கமாட்டேனென்பதும் அவனுக்குத் தெரியும். இங்ஙனமிருக்கத், தன் க்ஷாத்திரத்தை ஒருவாறு தீர்த்துக்கொள்ளும் சமயம்வாய்த்தபோது, அவனைவிடுபவன்? போர்முகத்தில் பட்டிருந்தால், துக்கம் ஒருபுறம் நிற்க, நான் சந்தோஷத்தையே அடைந்திருப்பேன். கேவலம் ஒரு பெண்ணின் காதலுக்காகத், தன் அந்தஸ்தையும் என் கட்டளையையும் ஒருங்கு மறந்துபோய், அந்தப்பாதகர்கள் கையிற் சிக்கி, இவ்வாறு இழிவான மரணத்தை அடையப்போகிறானே என்றுதான், என் மனம் வருந்துகிறது. அவன் விதியிருந்தவாறுபோலும். நான் போய் வருகிறேன்.

மகாலி : அடியேன் ஒரு விண்ணப்பம் : இந்த உடலை அரமனைச் சோறு தின்று வளர்ந்ததுதான் ; தலைமுறை தலைமுறையாக அரமனை ஊழியமே எங்கள் சீவனம். இப்பொழுது உதவாத உயிர் இருந்துதான் என்ன பயன்? சமுகம் மட்டும் சும்மாவிருந்தால், கோட்டைக்காவலுக்குப் பத்துநூறுபேரை விட்டுவிட்டு, மிகுதிப் பேரும் நானுமாகப்போய் ஒருகை பார்த்துவருகிறோம் : ஒன்று, அவரை எப்படியாவது மீட்டிக்கொண்டுவந்துவிடுகிறது ; அல்லது, எங்களால் ஏன்றமட்டும் பார்த்துவிட்டு மடிகிறது. இந்தத் தறுவாயில் உதவமாட்டாமல், இனிச்சந்நிதானத்தில் எப்படி முகம் காட்டுகிறது ?

திரு. சே. : மகாலிங்கம், இதை நான் ஒருநாளுமே மறவேன். ஆனால், உன்பேச்சு, உன் நன்றியையும் சீலத்தையும் வீரத்தையும் காட்டுகிறதேயன்றி வேறில்லை. சாவதுதானா பெரிது? அதுமட்டும் தானா வீரம்? சிறிய துன்பங்களையும் பொறுக்கமுடியாமல், சிலர் தற்கொலை செய்துகொள்ளவில்லையா? தங்கள் கணவர்மேல் மெய்யன்பில்லாத சில பிராமணப் பெண்களும்கூட, ஊர்வாய்க்குப்பயந்து, உடன் கட்டை யேறிவிடுகிறார்களே. சாகத்துணிந்துவிட்டவன்தானா வீரன்? ஆறு ஏழு ஆயிரம் சேனைக்குமத்தியில் உங்களால் என்ன முடியும்? அவன் சிறையிருக்கும் இடமாவது தெரியுமா? உங்களைக்கண்டதுமே தளவாய் அவனைக்கொன்றுவிடமாட்டானா? சாகப்பயந்தா நான் இங்கு விதியைநொந்துகொண்டிருக்கிறேன்? எந்தச் சமயத்தில் எது தகுதியோ, எது கடமையோ, அதை ஆராய்ந்தறிந்து கைப்பிடித்து, மானம் அவமானம், இலாபம் நஷ்டம், என்பதை மதியாது, தன் மனம் பொய்யாது நடப்பவனே சுத்தவீரன். இந்நாட்டின்திறவுகோல்போன்ற இக்கோட்டையைப் பாதுகாப்பதே இப்பொழுது நமதுகடமை. நம்மையே அடைக்கலம் புகுந்து நம்பிவாழும் குடிகளை, வம்சாரியின் காமத்துக்கும் தளவாயின் கொள்ளைக்கும் கொடுமைக்கும் உள்ளாக்காமல், காப்பது கடனா, தன்னயமே கருதும் மக்கட்பதடியைப்போல என் மகனைக் காப்பாற்றுவது கடனா? ஐயப்பாட்டிற்குச் சிறிதுமே இடமில்லையே.

எல்லை : ப்ரபோ! அவரைக் காப்பாற்றாவிட்டால், நாடும் அரசுமே நாதனற்றுப் போவதாயிருக்கின்றதே.

திரு. சே. : அம்மான்! நீங்களே இவ்வண்ணம் மதிமயங்கிப் பேசுகிறீர்களே! குடிகளைவைத்து அரசனா, அரசனுக்காகக் குடிகளோ? குடிகளினது நன்மையையும் க்ஷேமத்தையும் பல வழியானும் தேடிப்பெருக்கி, அவர்களை எவ்வித இடுக்கணும் அணுகாமே, விழிப்போடும் தளராத கவலையோடும் பாதுகாப்பதனால் உண்டாகும் பாத்தியதையைத்தவிர, அவர்களை யாளும் சுதந்தரம் அரசனுக்கேது? குடிக

ளின் முக்கிய காவற்காரனே அரசன் ; குடிகள் அழிந்தபின் அரசேது, ஆதிக்கமேது ? ஓநாய்களுக்கு இரையாகத் தன் ஆடுகளைவிட்டுவிட்டுத் தப்பியோடும் இடையனுக்கும், அப்படிப்பட்ட அரசனுக்கும் வேற்றுமையென்ன ?

எல்லை : ப்ரபோ ! கல்விக்களஞ்சியம்போன்ற தங்களிடம் என்னசொல்லப்போகிறேன்? ஆயினும், அரசருக்குப்பின், பட்டத்துக்கு அவரைத்தவிர வேறு தக்கவர் ஒருவருமே,—

திரு. சே. : நீங்களும் நானும் சிருஷ்டித்துக் காக்கும் உலகமோ இது ? நமக்கேன் அவ்வித கவலை ? உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் இன்றைக்கடமையைவிட்டுவிட்டுப், பின்வருவதைப் பெரிதாகநினைப்பது, எத்துணையோர் அறிவின்மை ! அவன் போர்முகத்தில் இறந்திருப்பின் என்சேய்வோம்? நாட்டையும் குடிகளையும் கெடுத்து, அவனுயிரை நாம் காப்பாற்றியும், அவன் நாளையே நோயாலோ மற்றோர் ஏதுவாலோ இறக்கின் என் செய்வோம்? திரிகாலஞ்ஞானிகளில்லாத சாதாரண மாந்தர், கடவுளின்மேல் பாரத்தைப்போட்டுவிட்டுத், தத்தம் கடமைகளைப், பின்விளைவை எண்ணாது செய்துமுடிப்பதன்றி, வேறு என் செய்யலாகும்? வீணிற் பேச்சைப் பெருக்குவதேன் ? என் உயிர் உள்ளவரை, இந்தக்கோட்டையை எதிரிகளுக்கு விடப்போகிறதுமில்லை ; சோழநாட்டு யுத்தம் முடிந்து சேனாபதியும் தண்டும் நம்முதவிக்கு வரும்வரை, ஒரு ஆளையேனும் அவசியமின்றி செலவழிக்க நான் சம்மதிக்கவும் மாட்டேன்.

மகாலி : அதற்குள் அந்தக் கொலைகாரர்கள் சபதப்படி செய்துவிடுவார்களே !

திரு. சே. : அதற்கு நாமென்ன செய்யலாம் ? இதுதான் விதியென்கிறது. என் கட்டளையையும் மீறி, நம்பிக்கைத் துரோகமாக நடந்து, அவனாகத் தேடிக்கொண்டதே இது ? வீணில் என்னைத் தொந்தரை செய்யவேண்டாம் ; காவல் விஷயத்தில் கவலையாயிரு.

[திருமலை சேதுபதி போதல்.]

மகாலி : இனி யென்ன செய்கிறது ?

சண்மு : தலைவர் சொன்னபடி ஒரு கை பார்க்கலாமென்று தோன்றுகிறது எனக்கும் ; திடீரென்றுபோய் மேல்விழுந்து கலக்கினால், ஒருவேளை காரியம் செயமாகலாம்.

நேல்லை : நம்மைக்கண்டு, அவர்களைக் கொன்றுவிட்டாலோ ? நாம் போவதால் அவர்கள் சீக்கிரம் மடியவே நேரும் ? அவ்வளவு பெரிய சேனைக்கு மத்தியில் நம்மால் என்ன முடியும் ?

எல்லை : ' உலகினில் வாழும் ஒவ்வொரு வனுமே
இன்றையோ பின்றையோ பொன்றுதல் திண்ணம் ;
அங்ஙனம் இருக்க எங்ஙனம் எவனும்
தன்னுடை முன்னோர் மன்புகழ்க் காகவும்,
தான்பணி கடவுளர் தளிகட் காகவும்,
தன்னைப் பெற்ற அன்னைக் காகவும்,
அன்பால் அணைத்து மென்பால் ஊட்டித்
தன்மக வோம்பும் நன்மனைக் காகவும்,
பார்த்திபற் கிளைய தூர்த்தப் பாதகன்
காமச் சூறையால் கன்னியர் கற்பெனும்
அறத்தீ அவியா தளித்தற் காகவும்,
பெரும்படை யென்று பேதியா நெஞ்சொடும்
விரும்பிப் பகைவரை வேல்கொடு தாக்கித்
துரும்பென இகழ்ந்துதன் ஆவி துறத்தலின்
அரும்புகழ்ச் சாவினை அடைகுத லாமே.'
என்றே மேலோர் இயம்புவ துன்னி
இன்றே இவ்வினை இயற்றுதல் கடனே.

சண்மு : அனேகமாய் முடியுமென்றே எண்ணுகிறேன்.

மகாலி : முடியுமோ, முடியாதோ, இனி அவர் நம்மைப்போக விடார் ; அவர் சுபாவம் எனக்குத்தெரியும். இனி நாச்சியாரைக் கொண்டு சொல்லிப் பார்க்கவேண்டும் ; வெகுவாய் அதுவும் பயன் படாது. மதுரையிலிருந்து வந்திருக்கும் சிட்டுப்புறுவின் மூலமாய் அரசருக்கு எழுத்தனுப்பி, அங்கிருந்து கட்டளைவந்தால், ஒருவேளை இணங்கலாம் ; இதுவும் அவருக்குத் தெரியக்கூடாது ; நாச்சியார் உத்திரவின்மேற் செய்யவேண்டும்.

சண்மு : அங்கிருந்து வெள்ளிக்கிழமைக்குமுன் பதில் எப்படி வரும் ?

மகாலி : நாம் அனுப்பிய புறுக்களில் இரண்டு மதுரையிலிருக் கின்றன ; ஆகவே, இன்று ஓலையனுப்பினால், வியாழக்கிழமையே பதில் வந்துவிடும். விரைவிற்போய் ஏற்பாடு செய்யவேண்டும்.

[போதல்.]

## மூன்றுங்காட்சி.

களம் :—கோட்டையில் தலைவர் அரமனை.] [காலம் :—பிற்பகல்.

[திருமலை சேதுபதியும் தருமிநாச்சியாரும் பேசிக்கொண்டிருத்தல்.]

திரு. சே. : இப்படிச் சும்மா அழாதே, தருமீ.

தருமி : ஐயோ, நாதா, நான் என்னசெய்வேன் ? என்னால்

பொறுக்க முடியவில்லையே ; எப்படி அடக்கிப் பார்த்தாலும் அடக்க முடியவில்லையே. நான் மலடியாகவே இருந்துவிட்டாலும் ஒன்று மில்லை. கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து, இப்படிப் பலிகொடுக்கவோ நான் கோயில் கோயிலாகத் தவம்கிடந்து, பத்துமாதம் சுமந்து பிள்ளை பெற்றேன்! ஐயோ! என் பெற்ற வயிறு பகீர்பகீரென்று மண்டியெரிகிறதே! அறையில் குற்றுயிராய்க் கிடந்தபொழுதே என் வாணாள் ஒழிந்திருந்தால், இதையெல்லாம் இருந்து பார்க்கவேண்டாமே! ஐயோ தெய்வமே! இராஜராஜேஸ்வரித்தாயே! நீயே கதியென்று நம்பியிருந்தவளுக்கு இந்த விதியோ விதித்தாய்? இந்தப் பாழான போருக்குப் புறப்படும்பொழுதே என் மனசு ஒருபடியாயிருந்தது ; அதற்காகவே உங்களுடன் முரண்டி நானும் வந்தேனே. ஐயோ! நாதா! உங்களுக்குமட்டும் இரக்கமில்லையா? இந்த மூன்று நாளாக நான்படும் துயரத்தைக் கண்டிருந்தும், உங்கள் மனமட்டும் இளகவில்லையா? ஒரே மகனையும் நாளைப் பறிகொடுத்துவிட்டு, இந்தப் பாழான கோட்டையையும் நாட்டையும் யாருக்காகக் காப்பாற்றப்போகிறீர்கள்? கடைசியில் அந்தக் கொலைகாரச் சண்டாளன் வம்சாரியையே சேரப்போகிறது. அவனுக்கா இந்தப் பாடுபடுகிறீர்கள்? மகனாமகனா! ஐயோ! சோமு! உன்னை நானினி எப்பொழுதடா காணப்போகிறேன்? ‘அம்மே’ என்று கூப்பிட்டுக்கொண்டு இனி நீ வருவதையும் காண்பேனா? ஐயோ! நினைக்க, நினைக்க, என் ஈரற்குலையைப் பிடுங்குகிறதே, நான் என்னசெய்வேன், தெய்வமே!

திரு. சே: தருமி! தருமி! இப்படி நீ பிரலாபிக்கலாமா? உனக்குமட்டும்தானா மகன்? எனக்கு மகனில்லையா? விதிவசத்துக்கு நாமென்ன செய்யலாம்? அவன் தலையிலெழுத்து இப்படிக்கொண்டுவந்துவிட்டுவிட்டது. இந்தக் காதலைப்பற்றி யாருக்காவது சமுசயமாவதுண்டா? ஒருவருக்குமே ஒன்றும் தெரியாதே. காதலேயிருந்தாலும் தான் என்ன? என்கட்டளையையும் மீறிக்கொண்டு, இப்படியும் ஒருவன் மதிமோசம் போவானா?

தருமி: அந்தமலையாளப் பாதகத்தியிட்ட மருத்தீடே இது. அவள் மருத்தீட்டிலே மயங்கி இப்படியாய்விட்டது. நீங்கள் கேரளத்துக்குத் தூதுபோகும்பொழுதும் நான் சொன்னேன், அவன் என்னுடன் ஊரிலிருக்கட்டு மென்றேன் ; பலவூர்களும் கண்டுபழகி அநுபோகமுண்டாக வேண்டுமென்று, நீங்கள் தான் கூட்டிக்கொண்டுபோனீர்கள். அந்தக்கொலைகாரி மருந்திட்டு மயக்கிவிட்டாள். திரும்பிவந்ததுமுதலே அவன் முன்பு போலில்லை. இப்பொழுதும் வேண்டாமென்று சொன்னேன் ; அரசருமே சொன்னாரென்று நீங்களே சொன்னீர்கள் ; கடைசியில் உங்கள் முரண்டேபலித்தது.

திரு. சே: ஆயின், இப்படி வருமென்று யாருக்காவது தெரியுமா? போர்முகத்தில் இறந்திருந்தால் என்ன செய்வோம்? அப்படியே நினைத்துக்கொள்கிறது. ஊணுறக்கமின்றி நீ யிப்படி ஓயாது துயரப்படுவதால் ஏதாவது குணமுண்டோ? விதியை விலக்க யாரால் முடியும்?

தருமி: விதியென்னவிதி, நாதா, நீங்களாக விதிக்கும் விதியே இது? நீங்கள் நினைத்தால் இந்தக்ஷணமே அவனை மீட்டிவிடலாமே. வேண்டுமானால் இந்தப்பாழான கோட்டையைத் திரும்பவும் பிடித்து, ஒட்டிக்கிரட்டி கப்பமும் வாங்க வீரமில்லாதவர்களா நீங்கள்? மகனே, மனைவியே என்று அணுவளவேனும் பச்சாத்தாபம் இருந்தால், இப்படிச் செய்வீர்களா? இந்த நகரத்தில் யாரேனும் ஒருவராவது நீங்கள் செய்வது சரியென்று சொல்கிறார்களா? கூடப்பிறந்து எப்பொழுதுமேயுள்ள மனமுரண்டினாலேயே இப்படிச் செய்கிறீர்கள். உங்கள் நெஞ்சைமட்டும் வேதா கல்லினாற் செய்துவிட்டான். இப்படிப்பட்டவர்களுக்குப் பெண்டு எதற்கு, பிள்ளை எதற்கு?

திரு. சே: நீ இப்படிப்பேசுவதுதான் என்மனத்தைப் புண்படுத்துகிறது. எவனுக்காவது தன் ஒரேமகனைக் கொலைகாணவேண்டும் என்றும் ஒரு மனமுரண்டிருக்குமா? எவ்வளவோ வேண்டிய நியாயங்களை யெல்லாம் எடுத்து உனக்குச் சொல்லியாய் விட்டது, உன் செவியில் ஏறுகிறதில்லை. இனி என்ன செய்யலாம்? அவனால் விளைந்த துயரத்தோடு, உன்னால் வருவதையும் அனுபவித்துக் கொள்ளவேண்டியது தான்.

தருமி: இன்னும் இரண்டொருநாளைக்குப் பொறுத்துக் கொள்ளும்படியாவது, அந்தச்சண்டாளர்களுக்குத் தூதனுப்பக்கூடாதா? இதனால் உங்கள் கடமைதவறிப் போகாதே?

திரு. சே: அப்படிச் செய்வதால் யாருக்கு என்ன பயன்? நம்முடைய மானத்தைவிட்டு, வீணாக அவர்களிடம்போய் ஒன்றைக் கேட்பதேன்? துயரத்தை நீடிக்கச்செய்வதால் பிரயோசனமுண்டோ?

தருமி: முந்தாநாள், உங்கள் அநுமதியின்மேல், சேனாபதியையும் சேனையையும் சீக்கிரம் உதவிக்கு அனுப்பும்படி அரசருக்குச் சீட்டுப்புறாவின் மூலமாய் ஓலையனுப்பினபொழுது, இதையும்பற்றி எழுதும்படி நான் செய்திருக்கிறேன்; அதுதான், அரசர் மறுகட்டளை வருகிறவரையுமாவது இதை நிறுத்திவைக்க வேண்டுகிறேன்.

திரு. சே: இதைப்பற்றி எழுதக்கூடாதென்று நான்தான் கண்டிப்பான உத்திரவு செய்திருந்தேனே; என்று முதல் நீ இராச்சிய விஷயங்களில் தலையிட்டு, என்கட்டளையைமீறி ஒன்று செய்யத்துணிந்தது? அந்தமகாலிங்கமும் என் உத்திரவை மதியாமல் உன்சொற்படி

யெழுதினுஜ? மகன் ஒருவன் காமப்பேய்பிடித்து உத்திரவைமீறி, நம்பிக்கைத்துரோகமாக நடக்கப்போய், வீட்டிற்பெண்டு மூத்து, இராணுவத்திலும் வரையறையின்றி அவரவர் இஷ்டம்போல் செய்கிறதென்று ஏற்பட்டு விட்டதோ?

தருமி: மகாலிங்கத்தின்மேல் நீங்கள் கோபங்கொள்ள வேண்டாம்; நானே உத்தரவாதி; என்னை சிரசாக்கினை வேண்டினும் செய்துவிடுங்கள்; அப்படிச்செய்துவிட்டால், பலவிதத்தினும் நலமாயிருக்கும். என்முறைமீட்டிற்கிரங்கி ஒருதூதனுப்பி, இதைமட்டும் நிறுத்திவையுங்கள்; இன்றே நாளையோ பதில்வந்துவிடும்.

[பணியாள் ஒருத்தி பிரவேசித்தல்.]

பணியாள்: அவசர சங்கதியாம், தலைவர் வந்திருக்கிறார்.

திரு. சே: வரச்சொல்.

[பணியாள் போதல்.]

எழுந்திருந்து உட்காரு, தருமீ! தலையைக்கட்டிக்கொள்; கண்ணீரைத் துடைத்துக்கொள். விதிவசத்துக்கு நாமென்ன செய்யலாம்?

[மகாலிங்கஞ் சேர்வை பிரவேசித்தல்.]

என்ன, மகாலிங்கம், நீயுமா இப்படித் தலைப்பட்டுவிட்டாய்? உனக்குமா புத்தியில்லாமற் போய்விட்டது? இந்தச் சங்கதியைப் பற்றி, என் உத்திரவைமீறி, அரசருக்கு நீ எப்படி யெழுதினை? என்ன, பதிலில்லை?

மகாலி: என்ன தண்டனை விதித்தாலும் உள்ளாகிறேன்.

தருமி: நான்தான் சொன்னேனே, அதற்கு நானே உத்தரவாதி. கையில் அதென்ன ஓலை, மகாலிங்கம்? சிவலிங்க முத்திரை மாதிரியிருக்கிறதே.

மகாலி: இப்பொழுதுதான் மதுரையிலிருந்து திருமுகத்துடன் புறுவந்தது.

[ஓலையைத் திருமலை சேதுபதி கையில் கொடுத்தல்.]

திரு. சே.: இதோ பிரசாதம் இருக்கிறது.

[ஓலையை மனத்துள் வாசித்தல்.]

தருமி: சொக்கலிங்கமூர்த்தி! உன் பிரசாத விசேஷத்தால் எல்லாம் க்ஷேமமாய் முடியட்டும்.

திரு. சே.: நீயே வாசி.

[ஓலையை மகாலிங்கஞ் சேர்வை கையில் கொடுத்தல்.]

இரைந்துவாசி, நாச்சியாரும் கேட்கட்டும்.

மகாலி: [வாசித்தல்.] "சொக்கரடித்துரை தொண்டு துலங்குக! மஹாராஜ மான்யராஜஸ்ரீ மஹாகனம்பொருந்திய விஜயரகுநாத திருமலை ஸேதுபதி யவர்களுக்கு, ஸர்வமங்களமும் உண்டாவதாக ஆசீர்வாதம். உபயகுசலோபரி. தங்கள் உத்திரவின்படி நெல்லைக் கோட்டைத்தலைவர் அனுப்பிய ஓலை இப்பொழுதே கிடைத்தது. சொக்கரடித்துரைக்கு விஷயங்களைப் பரிஷ்காரமாய்த் தெரியப்படுத்தினேன். ஸேனாபதி ஸங்கதி யொன்றும் தெரியவில்லை; ஸமீபத்தில் அவர் ஸஹாயத்தை எதிர் பார்க்க இடமில்லை; இங்கிருந்து வேறு ஸஹாயம் அனுப்ப மார்க்க மில்லையென்பது, தங்களுக்கே தெரியும். தங்கள் குமாரர் விரோதிகள் கையில் அகப்பட்டு விட்டதைக்கேட்டு, இங்கு ஸகலருக்கும் வியஸனமே. எப்படியாவது அவரை மீட்க உபாயம் செய்யவேண்டுவது அவசியமே. கேரளத்தார் தத்ஸமயம் நம்மவிரோதிகளாயிருந்தாலும், அக்கிரமமாக ஒன்றும் செய்யார்களென்று நம்புகிறோம். இளவரசரும் கேரளத்து ஸைநியமும் வடக்கே வராமல் தடுப்பதற்கென்றே தாங்கள் யுத்தஸந்நதமாய்ப் போனீர்கள். தேசாபிமானமும், யுத்தவீரமும், ராஜபக்தியும், மதியூகமும் சேர்ந்து அவதரித்தது போன்ற தங்களுக்கு, நான் என்ன எழுதப் போகிறேன்? தங்கள் குமாரரை மீட்பதில், இதுவரையும் தரவேண்டிய கப்பத்தையும், இனிமேல் கப்பம் வாங்கும் சுதந்தரத்தையும் இழக்கும்படி ஸம்பவித்தாலும் பிரமாதமில்லை. சொக்கரடித்துரை ஆஜ்ஞைப் பிரகாரம் சொக்குமாணிக்கத்தின் விபூதிப் பிரஸாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

வேணும் அநேக கோடி ஆசீர்வாதம்.

ப்ரதானி சாம்பசிவ சாஸ்திரியார்."

திரு. சே.: கப்பத்தில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு கைக்கு வந்தாய்விட்டது, இன்னும் கிடைக்கும்; ஆதலின், கப்பத்தை இழந்துவிடலாம். வம்சாரிபட்டத்துக்கு வந்துவிடின், தம்மகளும் இதுகாறும் கொள்ளையடித்த சொத்தும், எல்லாம் போய்விடும்; ஆதலின், அவனை மேலிடாமல் அடக்கவேண்டும். அந்தோ! பாவம்? அரசுக்கேற்ற அமைச்சு இங்ஙனம் அமைவதரிது!

தருமி: சோமுவை மீட்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எழுதியிருக்கிறதே.

திரு. சே: என்மகனைச் சிறைமீட்க, இவரைக் கேட்கவேண்டுமா? அல்லது, இவ்விதமான இக்கட்டில், இவர் புத்திமதியை எதிர் பார்ப்பவனோ யான்?

மகாலி: அவர்கள் தான் மாவுக்கும் ஆசை கூழுக்கும் ஆசையாக எழுதியிருக்கிறார்களே. தளவாய்க்குக் கோட்டையை விட்டுவிட்

டால், பின்பு எதிரிகள் மேலிடாமல், வேறுதவியின்றி நாம் தடுத்து விட முடியுமா? அரசர் இப்படியெழுதும்படி உத்திரவு செய்திருக்க வே மாட்டார்.

திரு. சே: மதிமயங்கி அரசரே கோட்டையை விட்டுவிடச் சொன்னாலும், விடலாமா என்ன? அதனால் தானே நான் இதைப் பற்றி எழுதவேண்டாம் என்றேன். குடிகளை வம்சாரிகையிலும் தள வாய்கையிலும் காட்டிக்கொடுப்பதினும், நாமேகொன்று விடலாம்.

தருமி: கப்பத்தை விட்டுக் கொடுத்துவிட்டால் இணங்கமாட் டானா? அப்படித் தூதனுப்பிப் பாருங்கள்.

திரு. சே: நாட்டின் புகழை மங்கச்செய்யவோ நான் படையெ டுத்துவந்தது? நெடுநாளாக வாங்கிவரும் கப்பத்தை இழந்து விடு கிறதா?

மகாலி: சிறைப்பட்டாரைப் பணங்கொடுத்து மீட்குதல் யுத்த முறைதானே, இழிவில்லையே? கன்னடத்துப்போரில் சேனாபதியை அவ்வாறு மீட்கவில்லையா? கப்பத்தை யிழப்பதும் பணங்கொடுப்பது போலத்தானே? அதிலென்ன அவமானம்?

தருமி: நாட்டுக்கு அதனாலுண்டாகும் நஷ்டத்துக்குப்பதிலாக, என் நகைகளையும் எனக்குக் கொடுத்த சீதனச்சொத்தையும் தந்துவிடு கிறேன். இவ்வளவேனும் எனக்காக இரங்கக்கூடாதா? அரசர்கட் டளை தானேஇது.

திரு. சே: சிறைபட்டாரைப் பொருள்கொடுத்து மீட்டல் இழி வன்று. என் கட்டளையை மீறிச்சென்று, அதன்பொருட்டே யுத்த முறைப்படி அவன் மரணதண்டனைக்குள்ளாகியிருப்பினும், நீ படும் துயரத்துக்காக, அந்தக்குற்றத்தையும்பொறுத்து, என் சமஸ்தானத்தை யே விற்றுக்கொடுத்துச் சிறைமீட்கச்சொன்னாலும், எனக்குச் சம்மத மே; அது பெரிதல்ல. ஆயின், கப்பத்தையிழப்பது அப்படியன்று; அதனால் நாட்டின் புகழ் மாசுறும்; ஆண்டுதோறும் ஒருபொற்காசே னும் கப்பம் என்று பேருக்குத்தந்தாலும் போதும்; அதிகம்வேண் டாம். எனக்கு இதுவும் சம்மதமே. ஆனால், தளவாயின் பேரா சையையும், வஞ்சகத்தையும், என்மேலுள்ள பகைமையையும், உட் கருத்தையும் நன்கு அறியாது நீங்கள் பேசுகிறீர்கள். இதெல்லாம் வீணே.

மகாலி: ப்ரபோ! நாச்சியார் உத்திரவுபோல, கப்பம் வேண் டாமென்று சொல்லிப்பார்ப்போம்; ஒருவேளை இணங்கினாலாகாதா.

திரு. சே.: வீணுக்கு நம்மைத் தாழ்த்திக் கொள்வதேயாகும்.

தருமி: எனக்காக அப்படி ஒருவார்த்தை சொல்லி யனுப்புங்

கள் ; தங்களைப்போலப் புகழையும் தேசாபிமானத்தையும் பெரிதாக மதிப்பவர்களா அந்தக்கொலைகாரப் பாதகர்கள் ? ஒருவேளை இணங்கி விடுவார்கள். பணமென்றால் பிணமும் வாயைப்பிளக்கும் என்பார் களே.

மகாலி : ப்ரபோ ! நான் தங்கள் காலில் விழுந்து பிரார்த்திக் கிறேன் ; எனக்கு அப்படிச்சொல்லியனுப்ப விடைகொடுங்கள் ; நாச்சியார் மனசுக்காவது ஒருவித சமாதானமாகும் ; அதற்காகவேனும், விடைகொடுங்கள்.

தருமி : முப்பத்தைந்து வருஷகாலமாகத் தங்கள் சொற்படியே நடந்து, சுகதுக்கங்களையெல்லாம் தங்களுடன் பகிர்ந்து அனுபவித்து வரவில்லையா ? சிறைப்பட்டாரைப் பணங்கொடுத்து மீட்பதில் இழி வில்லையென்று தாங்களே ஒப்புக்கொள்கிறீர்களே ; கப்பம்வேண்டா மென்று அரசர் திருமுகமும் வந்திருக்கிறதே ; எனக்காக இவ்வளவே னும் இரங்கமாட்டீர்களா ?

திரு. சே. : சரி, உங்களிஷ்டம்போல் சொல்லியனுப்புங்கள். ஆனால் இது வீணே ; தானே தெரியவரும் உங்களுக்கு.

[போதல்.]

## நான்காங்காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே ஒருபடைவீடு.] [காலம் :—மாலை.

[மாதவியும் நாராயணியும் பிரவேசித்தல்.]

நாராயணி :—அம்மை இங்ஙனம் ஜலபானங்கூடப்பண்ணாமலிரு ந்தால் எப்படி ? இதனால் குணமுண்டோ ? மூன்று நாளாகிறதே.

மாதவி : என்னிடத்தில் ஒன்றும் பேசாதே.

நாரா : அம்மை மனசறிந்து செய்தபிழையோ இது ? தம்பிரான் இங்ஙனம் மோசஞ்செய்யுமென்று அம்மை அறியுமோ ? அந்த மாற னுடைய துர்புத்தியே இது.

மாதவி : என் எழுத்தை விசுவசித்தே அவர் வந்தார். ஜேஷ்ட னுடைய ஸ்வபாவத்தை நல்லவண்ணம் அறிந்திருந்தும், நீ தடுத்துச் சொல்லியும், நான் இங்ஙனம் செய்தேனே ! அவர் பிராணனுக்குமாத் திரம் ஹானிவரின், அந்தக்ஷணமே என் பிராணனையும் நான்விடுவேன் ; இது ஸத்தியம். என்னால் அவரை ரக்ஷிக்கமுடியாவிட்டாலும் இது முடியும்.

நாரா : தம்பிரான் அப்படிச் செய்யமாட்டார். அவர்களைப் பய முறுத்தவே இதெல்லாம்.

மாதவி : மேனக்கத்துவாமனன் நம்பியாரை இவ்வண்ணம்

துரோகித்துச் சிறையாக்கிச் சித்திரவதை செய்யவில்லையோ? கோழி சேரிமனவிக்கிரமன் மண்ணுடியாரை, தன்னுடைய இல்லத்துக்கு விருந்துக்கு அழைத்து, ஊணில் விஷமிட்டுக் கொல்லவில்லையோ? இதையெல்லாம் அறிந்திருந்தும், நான் பாவி, மதிமோசம்போய், பூனை வாயிலே கிளியைப்பிடித்துக் கொடுப்பதுபோல, என்காதலரைக் காட்டிக்கொடுத்துவிட்டேன்! என்னைப்போலும் பாதகிமார் யாரேனும் உண்டோ?

நாரா: சேஷையன் தம்பிரானும், இங்ஙனம் செய்யலாகாதென்று தடுத்தாராம்; வலியவீட்டு மண்ணுடியாரும், வெங்காட்டு நம்பியாரும், இது வலியதோர் அபவாதம், தேசமே க்ஷீணித்துவிடும், என்கிறார்களாம்; சைநியத்தில் ஒருவருக்குமே ஸம்மதமில்லையாம்; எல்லாம் குழப்பமாயிருக்காம்; ராவுண்ணிநாயர் சொன்னான்.

மாதவி: அந்தப்பாவியும் கூடச்சேர்ந்துதானே இங்ஙனம் மோசம் பண்ணினான்.

நாரா: யாரு, ராவுண்ணி நாயரோ? என்ன தம்பிராட்டி மறித்து மறித்து இங்ஙனம் ஸம்சயிக்கிறது? அவனுக்கு ஸொப்பனத்திலேனும் இங்ஙனம் நடக்குமென்பது தெரியுமோ? இந்த மூன்றுதிவஸமாக அவனும் ஊண்கழித்ததுண்டோ? அம்மையினும் தம்பிரான் அவனுக்கு அதிகமோ? இப்போழ்தும், அம்மை என்ன கல்பனையாயினும், தன் ஜீவன் போகவரினும், பின் வாங்குவனோ?

மாதவி: ஆனால் அவனுக்கிது தெரியவே தெரியாதா?

நாரா: என் அம்மை ஆணை, அவன் அறியான், அவன் அறிந்திருப்பின், என்னோடு சொல்லாமலும் இருப்பனோ? நான் அவன் முகத்தையும் திரும்பி நோக்குவேனோ?

மாதவி: அவனை அழைத்துவா இவ்விடம்; விபரமாய்க் கேட்போம்.

நாரா: இதோ கூட்டிக்கொண்டுவருகிறேன். [போதல்].

மாதவி: (தனி) அந்தோ! பத்மநாபா! குழந்தைப்பிராயமுதல் உன்னையே விசுவசித்து ஸேவித்துவந்த எனக்கு, இந்த கதியோதருவாய்? இந்த அபவாதத்துக்கோ நான் உள்ளாகவேண்டும்? என் ஜேஷ்டனாக வந்திருக்கும் அந்த மஹாபாதகன், இன்னும் ஒருதரம் அவரை நான் நோக்கவாவது ஸம்மதிப்பனோ? ஒரு ஸமயம், நானும் இதற்கு உடந்தையென்றே அவர் நினைக்கின், என்னைப்பற்றி என்ன எண்ணங் கொண்டிருப்பார்! அவரைக் கொல்லுவதாயின், அதற்குமுன்பே என் பிராணனையும் துறந்து, அந்த ஸமாசாரம் அவர் செவியில் விழும்படி செய்யவேணும்; அங்ஙனமானால்தான் ஸந்தேகத்துக்கு இடமிராது. அந்தோ! என் ஆசையெல்லாம், நான் எண்ணியிருந்த எண்ணங்க

ளெல்லாம் ஒக்க, இங்ஙனமோ பாழாவது ! ஸ்வாமி ! உமக்கு இரக்க மில்லையோ ? இங்ஙனம் லோகத்தில் அநீதமும் அக்கிரமமும் தழைத் தோங்கிடின், ஸ்வாமியேது, சாஸ்தாவேது ?

[இராவுண்ணிநாயரும் நாராயணியும் பிரவேசித்தல்.]

ராவுண்ணி ! இங்ஙனம் நடக்குமென்று நீ அறிகில்லையோ ? ஸத் தியமாகச் சொல்.

இராவு : அல்பமேனும் நான் ஆதியில் ஸம்சயித்திருக்கின், இங் ஙனம் நடக்குமோ ? தம்பிராட்டி இரண்டு தடவை என் உயிரை ரக்ஷிக்க வில்லையோ ? நாராயணியும் நானும் இன்றுகுடிப்பதும் தம்பிராட்டி கஞ்சியில்லையோ ? தம்பிராட்டி மாத்திரம் கல்பனையானால், தம்பிரானை யே இந்தக்ஷணம் குத்திக்களையவேணுமென்கினும், நான் செய்யமாட்டே னோ ? பத்மநாபன் ஆணை, நான் ஒன்றும் அறியேன்.

மாதவி : சேஷையன் தம்பிரான் என்ன சொன்னார், ஜேஷ்டன் என்ன சொன்னார் ?

இராவு : சேஷையன் தம்பிரான் வெகுநேரம் தடுத்து மன்றாடி னார் ; " நான் கொடுங்கோளூர் பகவதிமேல் பிரதிஜ்ஞை செய்திருக்கி றேன் ; யார் என்ன சொல்லினும் மாறிடேன்," என்று தம்பிரான் ஒரே தீர்ச்சியாய்ச் சொல்லிவிட்டார். வலிய தம்பிரானுக்கு எழுத் தனுப்பி, கல்பனை வந்ததின் பின்பு, இங்ஙனம் செய்யலாமென்று சே ஷையன் தம்பிரான் சொன்னார் ; அதற்கும் ஸம்மதிக்கவில்லை. கடை சியில், 'இங்ஙனம் ஒரு அபவாதம் நடக்க ஸம்மதிக்கமாட்டேன் ; ஸைநியங்களோடு சொல்லி நிறுத்திவிடுகிறேன்,' என்று, அதிகம் ஆக் கிரகத்தோடும் சேஷையன் தம்பிரான் சொன்னார். அப்பொழுது, தம் பிரான், பரமேசுவரப் பணிக்கரைவிளித்து, 'நாளைமத்தியானம் வரை இந்த சேஷையன் சிறைச்சாலையில் இருக்கட்டும்,' என்று கல்பனை கொ டுத்தார். அங்ஙனமே ஆகிவிட்டது.

மாதவி : சேஷையன் தம்பிரானையோ ?

இராவு : அதே ; ஸைநியமெல்லாம் குழப்பமே ; தம்பிராட்டி இங்ஙனம் ஊணுறக்கமின்றி, துக்கித்துக்கொண்டிருப்பது ஸகலருக் கும் தெரியும். மண்ணடியாரும் நம்பியாருமாகயோசித்துக்கொண் டிருக்கிறார்கள். நான் போய், தம்பிராட்டி கல்பனைப்படி, அழைத் துக்கொண்டுவந்தவர் உயிர்போவதாயிருக்கின், என் உயிரையே முத லில் விடுவேன்.

மாதவி : அந்தச் சண்டாளன் மாறனோ ?

இராவு : அவனுடைய துர்யுக்தியே இது. தம்பிரானை ஸதா தூண்டிக்கொண்டே இருக்கிறான்.

மாதவி : மஹாபாதகன் ! அவனையும் ஸம்பந்தங்கழிக்கச்சொன்னாரே ! என் ஜேஷ்டனே இங்ஙனம் எனக்குத் துரோகம் செய்தால், வேறுயாரிருக்கிறார்கள் ?

இராவு : ஸகலருக்கும் பத்மநாபன் ஸஹாயம் உண்டில்லையோ ? தம்பிராட்டி ஒன்றும் பயப்படவேண்டாம்.

மாதவி : அவர் எப்படி இருக்கிறார்.

இராவு : ஸேதுபதி மகனோ ? நான் அவர் சிறைவீட்டுப் பக்கம் போகக்கூடாது, அவருடன் பேசக்கூடாதென்று தம்பிரானுடைய கல்பனை. ஆனால் எல்லாரும் சொல்லி ஆச்சரியப்படுகிறார்கள் : தீரன் என்னும் பெயர் அவருக்கே தகுமாம் ; முகத்தில் பயமோ, வாட்டமோ, ஒன்றுமில்லையாம் ; தம்கூடவந்தவனை ஒன்றுஞ் செய்யாமல் விட்டுவிடவேண்டுமென்று மாத்திரம் பிரார்த்தித்தாராம் ; தமக்காக ஒன்றும் கேட்டுக்கொள்ளவில்லையாம் ; கோட்டையை விட்டுக்கொடுத்துத் தம்மை மீட்கும்படி, தம்பிரானும் மாறனும், அவரைக்கொண்டு ஸேதுபதிக்கு எழுத்தனுப்பச் சொன்னார்களாம் ; எழுத்தை யாரும் நோக்காமல் அனுப்புவதாயிருந்தால், தாம் எழுதுவதாக ஸம்மதித்தாராம் ; அங்ஙனமே, தம்பிரான் பிரமாணஞ்செய்து வாக்குக்கொடுத்த பின்பு, அவர் ஒரு எழுத்து எழுதித் தம்முத்திரையும் வைத்து, இப்பொழுதுதான் மண்ணுடியார் கொண்டுபோயிருக்கிறார்.

மாதவி : ஸேதுபதி ஸம்மதிப்பரோ ?

இராவு : கோட்டையிலிருந்து, நாலுநாழிகைக்குமுன்பு, முதலில் ஒரு தூதுவந்தது : கப்பமே வேண்டாம் ; மேலாகப் பதினையாயிரம் பொன்னும் தரலாம் ; அவரை விட்டுவிடவேணும், என்றுவந்தது. தம்பிரான் ஒப்பவில்லை. அதன்பின்புதான், சேவையன் தம்பிரானைச் சிறையிலாக்கியதும், மண்ணுடியார் எழுத்துக்கொண்டு போயிருக்கிறதும்.

மாதவி : பெற்ற மனதேனும் இரங்காதா ? தம் ஒரே மகனை இங்ஙனம் பலிகொடுத்துவிட்டு, அவர் யாருக்காகத் தேசத்தைக் காப்பாற்றப் போகிறார் ? பத்மநாபா ! அவர் மனதையேனும் இரங்கச் செய்.

இராவு : நான் போகவேண்டும் ; இங்கே வரக்கூடாதென்று தம்பிரான் கல்பனை. பத்மநாபன் ரக்ஷிக்கும் ; தம்பிராட்டி பயப்படவேண்டாம்.

[இராவுண்ணிநாயர் போதல்.]

நாரா : அம்மை, இந்தப்பாலைமட்டும் கொஞ்சம் குடிக்கட்டும்.

மாதவி : என்னடி, நாராயணி, என்னைச் சும்மா அலட்டுகிறாய்? இந்தப்பட்டினியால் நான் மரிக்குமோ ? அங்ஙனம் பிராணன் போய்

விடின், இரட்டை ஸந்தோஷமே. ஹிதாஹிதம் தெரியாமல், ஹிம்சை பண்ணுகிறாயே; அவரை நான் திரும்பவும் கண்டாலன்றி, அவர் க்ஷேமமாய் இங்கிருந்து திரும்பிப்போனாலன்றி, நான் ஜலபானம் பண்ணப்போகிறதில்லை. என் மனவினுடைய ஸ்திதியை நீ கண்டால் இப்படிச் சொல்லமாட்டாய். என்னை வீணாகத் தொந்தரைசெய்து புண்படுத்தாதேபோ.

[போதல்.]

## ஐந்தாங்காட்சி.

களம்:--கோட்டையில் தலைவர் அரமனை.] [காலம்:—அந்திப்பொழுது.

[திருமலைசேதுபதியும் தருமிநாச்சியாரும் பேசிக்கொண்டிருந்தல்.]

தருமி:—இன்னும் ஏன் பதில் வரவில்லை?

திரு. சே: இப்படி நீ வீணில் நம்பியிருப்பதெல்லாம், பிற்பாடு அதிகத்துயரத்துக்கே இடம்.

தருமி: உங்கள் வாயால் அபசகுனம்போல் அப்படிச்சொல்லாதேயுங்கள். மேல்பணம் பதினாயிரம்பொன் தருவதாகவும் சொல்லியனுப்பியிருக்கிறேன். நம்மூர்ப்பாதகனைத்தவிர, அந்தத்தளவாய்க்குப் புத்திசொல்வார் வேறொருவரும் இல்லையா?

திரு. சே: அன்று தூதுவந்தாரே சேனையன், அவர் நல்ல யோக்கியர்; சேரமானுக்கு அவர்மேல் வெகுபிரியம்; அவர் இதற்கு இணங்கி யிருக்கமாட்டார். ஆனால், அவன் ஒருவர் சொற்கேட்டு நடப்பவனன்று.

[பணியாள் ஒருத்தி பிரவேசித்தல்.]

பணியாள்: தலைவர் வந்திருக்கிறார்.

திரு. சே: வரச்சொல்.

[பணியாள் போதல்.]

தருமி: இராஜராஜேஸ்வரித்தாயே! நல்ல பதில் வரட்டும்.

[மகாலிங்கஞ் சேர்வை பிரவேசித்தல்.]

என்ன, மகாலிங்கம், இணங்கவில்லையா?

மகாலி: இங்கே உத்திரவானபடி தான்.

தருமி: ஐயோ தெய்வமே! நான் என்ன சேய்வேன்! நான் என்ன செய்வேன்! என் குடரைப்பிடுங்குகிறதே, என்னால் பொறுக்க முடியவில்லையே, தெய்வமே!

திரு. சே: தருமி, இதென்ன பேதைமை இது? அழாதே; போரில் இறந்துவிட்டதாக நினைத்துக்கொள். நான் தான் முன்னமே சொன்னேனே. அவர்கள் சுபாவம் உங்களுக்குத்தெரியாது.

தருமி : மேல் பதினாயிரம்பொன் தருவதாகவும் சொல்லியனுப் பினையோ ?

மகாலி :—என் சொத்தையும் கூடச்சேர்த்துக்கொண்டு, பதினை யாயிரம் பொன் தருவதாகச் சொல்லியனுப்பினேன் ; சண்முகத்தே வர்தான் போனவர் ; பொழுது விடியுமுன் கோட்டைத்திறவுகோல் வராவிட்டால், கறுப்பணபிள்ளைகையில் அவர் தலை வந்துசேரும் என் று பதிற்சொல்லியனுப்பியிருக்கிறான், அந்தக்கொலை பாதகன்.

தருமி : ஐயோ, நான் என்ன செய்வேன் ! என்ன செய்வேன் ! நாதா, இனியேனும் இரங்கமாட்டீர்களா? நீங்களே இரங்காவிட்டால், பகையாளிகளா இரங்கப்போகிறார்கள் ? என்னுயிரும் இத்தோடே போய்விடுவது நிச்சயம். சோமுவையும் என்னையும் பறிகொடுத்து விட்டு, நீங்கள் நாடாளவும் போகிறீர்களா ? உங்கள் மனம் இப்படி யிருக்குமென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லையே. ஊரெல் லாம் அநியாயம், அநியாயம், என்று ஓலமிட்டுப் பதைபதைத்து நடுங்கும்பொழுது, பெற்றதகப்பன் மட்டுமா இப்படியிருக்கவேணும் ?

[ஒரு பணியாள் பிரவேசித்தல்.]

பணியாள் : புலவரும் இன்னும் இரண்டுபேரும் வந்திருக்கிறார் கள். தலைவரை அவசரமாய்க் கூப்பிடுகிறார்கள்.

திரு. சே : அதென்ன பார், மகாலிங்கம்.

[மகாலிங்கஞ் சேர்வையும் பணியாளும் போதல்.]

தருமி : இன்னும் என்மேல் இரக்கம் வரவில்லையே உங்களுக்கு ! நம்மநாட்டை ஆண்டுகொண்டு, நம்மபாட்டுக்கு இராமநாதபுரத்தில் இருந்திருந்தால், இதொன்றும் வந்திராதே. நீங்களாகத் தேடிக்கொ ண்ட வினைதானே இது. இராச்சியம் வரப்போகிறது, நம்மமகன் நாடாளப்போகிறான் என்று சொன்னீர்கள் ; நான் எவ்வளவு மனம் பூரித்திருந்தேன் ! சீக்கிரம் கலியாணம் செய்யவேண்டும் ; பாளையப் பட்டுக்காரர் சம்பந்தம் சரியல்ல ; இராசபதவிக்கேற்க, அவன் அழ குக்கும் குணத்துக்கும் பொருந்த, ஒரு இராசகுமாரியைப்பார்த்துக் கலியாணஞ் செய்துவைக்கவேண்டும் ; இன்ன இன்ன சீர்களெல்லாம் செய்யவேண்டும், என் நவரத்தினமாலையையும், முத்துமாலையையும் அவளுக்குக் கொடுத்துவிடவேண்டும் ; நம்ம அரமனையில், அவளை இராஜராஜேஸ்வரியென்ற பெயராலேயே கூப்பிடவேண்டும் ; என்று என்னவெல்லாமோ எண்ணியெண்ணி, மனக்கோட்டைகட்டி மகிழ்ந்து கொண்டிருந்தேனே. எல்லாம் ஒரு நிமிஷத்தில் கனவுபோலாய் விட் டதே. நாதா ! உங்கள் மனசுமட்டும் ஏன் இப்படி யிருக்கிறது ? நமக்கு வேறுபிள்ளை யிருக்கிறதா ? இனிப்பிறக்கப்போகிறதா ?

[மகாலிங்கஞ் சேர்வை பிரவேசித்தல்.]

என்ன சங்கதி ?

மகாலி : தளவாயிடமிருந்து ஒரு தூதன் வந்திருக்கிறான் ; சின்னவர் கைப்பட ஒரு எழுத்துக்கொண்டுவந்திருக்கிறான். தங்கள் கையிலேயே கொடுக்கவேண்டுமென்று சொன்னாராம். அம்மானும் சண்முகத்தேவரும் இங்கே அழைத்துவந்திருக்கிறார்கள். என்கையிற் கூடக் கொடுக்கமாட்டேன் என்கிறான்.

திரு. சே : இங்கே அழைத்துவா.

[மகாலிங்கஞ் சேர்வை போதல்.]

தருமி, நீ சற்று அந்தப்புறமாக உள்ளேபோயிரு.

[தருமிநாச்சியார் உட்புறம் போதல்.]

(தனி) என்ன எழுதியிருப்பான் ? காமப்பேய்பிடித்து மதியிழந்ததுபோல, சாகப்பயந்து எப்படியாவது தன்னைக்காப்பாற்றவேண்டுமென்று எழுதியிருக்கலாம். எனக்கோ இப்படியொருமகன பிறக்க வேண்டும் !

[மகாலிங்கஞ்சேர்வை, எல்லையப்பர், சண்முகத்தேவன், சேகரன் மண்ணுடியார், இவர்கள் பிரவேசித்தல்.]

எழுத்து எங்கே ?

சேகர : ப்ரபோ ! மற்றொருவரும் நோக்காமல், தங்கள் கையிலேயே கொடுக்கவேண்டுமென்று தங்கள் மகன் கேட்டுக்கொண்ட பிரகாரம், இதோ கொடுத்துவிட்டேன்.

[ஒருகடிதத்தைக் கொடுத்தல்.]

[கடிதத்தைத்திறந்து சிறிது வாசித்தல்.]

திரு. சே : அம்மான், இதை வாசியுங்கள் ; எனக்குக் கண் என்னவோ கரிக்கின்றது.

[கடிதத்தை எல்லையப்பர் கையிற் கொடுத்தல்.]

[வாசித்தல்.]

எல்லை : "திக்குநோக்கித் தெண்டனிட்ட விண்ணப்பம் : தங்களுக்குப் பிறந்திருந்தும், தங்கள் குணாதிசயங்களையும் பிரதாபத்தையும் அறிந்திருந்தும், நான் இவ்வாறு நடந்துவிட்டதனால், வழக்கம்போல என் தந்தைக்கு என்றெழுதவும் மனம் கூசுகின்றது. "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்," என்று நாயனார் கூறியிருக்க, தங்கள் பெயரையும் புகழையும் தெரிந்தோரெல்லாம், 'முற்பிறப்பில் என்னபாவத்தைச் செய்ததமையால், இவருக்கு இப்படியொரு மகன் பிறந்தான் ?' என்று பரிதபிக்கும்

படி செய்துவிட்டேன். யாரும் அறியாமே என்னுள்ளத்தில் குடிகொண்டிருந்த காதலினால் மதியிழந்து, பிறர்சொல்லை நம்பி மோசம் போய், மற்றொருவரும் செய்யாமற் காக்கும்படி எனக்கே தாங்கள் கட்டளையிட்டிருந்த குற்றத்தை நானே நம்பிக்கைத்துரோகமாகச் செய்து, எதிரிகள் கையிலகப்பட்டு, மிகவும் இழிவானகதியைத் தேடிக் கொண்டேன் ; ஆயின், இன்னும் இதனினும் ஈனமானதோர் கதியிருப்பின், என்போன்ற துரோகிக்குத்தக்கதேயாம். என் காதலியையிழந்து இவ்வாறு நான் மடிவதற்காக என்மனம் வருந்தவில்லை ; என்னால் தங்கள் புகழ் மாசுறுவதற்கும், தாங்களும், கண்ணுள்மணிபோற் பாராட்டிச் சீராட்டி என்னை வளர்த்துவந்த என் அருமைத்தாயும் அடையக்கூடும் துயரத்தை நினைந்துமே மனம் வருந்துகிறேன். இப்பொழுது தாங்களனுப்பிய தூதால், என் மனக்கவலை அதிகரித்திருக்கிறது. தங்கள் நன்மதிப்புக்கும் கண்ணோட்டத்துக்கும் சிறிதுமே அருகனல்லாத மஹா துரோகியான என்பொருட்டுத், தங்கள் அரும் பெரும் புகழ் குன்றும்படி, கப்பத்தை யிழந்துவிடுவதாகச் சொலவி யனுப்பியதைக் கேட்டது முதல், யான் படும் துயரம் சிறிதல்ல. இதற்கும் சம்மதிக்கும் அளவு பெரிதோ, என்மேல் தங்களுக்குள்ள வாஞ்சை ? நினைக்க, நினைக்க, என் மனம் உருகுகின்றது. தங்கள் கீர்த்தியைப் பெருக்காவிடினும், அதையிவ்வாறு மங்கச்செய்யவோ நான் பிறந்தேன் ? இக்கவலையுடன் நான் கொலையுண்டால், என் னெஞ்சு வேகாது. நான் ஒரு மகன் பிறக்கவேயில்லையென்று நினைத்துக்கொள்ளுங்கள் ; என்னை முற்றிலும் மறந்துவிடுங்கள் ; தங்கள் புகழுக்கோர் இழுக்கையும், நாட்டுக்கும் குடிகளுக்கும் வசையையும் தீங்கையும், விளைக்கக்கூடிய யாதையுமே, என்பொருட்டுக், கனவிலும் நினையாதேயுங்கள் ; தாங்களும் என் அருமைத்தாயும் அதமாதமனை எனக்காக வருந்தாதேயுங்கள், இதுவே தங்கள் பாதாரவிந்தத்தைத் தொழுது, நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளும் மரணகாலப் பிரார்த்தனை. மனவமைதியோடும் சந்தோஷத்தோடுமே நாளைக் காலைப் பொழுதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். என் அருமைத் தாயின் துயரத்தை எப்படியாவது ஆறுதல்செய்து, என்னை மறந்து விடும்படி செய்வதே, எனக்காகத் தாஙகள் இனிச்செய்தற்குரியகடன். மறுபிறப்பிலேனும், தங்களுக்கும் என் அருமை அம்மைக்குமே மகனாகவந்து பிறந்து, தங்கள் மனம்போல் ஒழுகும் கதியை எனக்கருள் செய்யுமாறு, நாளை என்னுயிர்போமளவும், விடாது கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டிருப்பேன். நிரபராதியாக என் கூடவந்து அகப்பட்டுக்கொண்ட கறுப்பண பிள்ளையை, எங்ஙனமாவது காப்பாற்ற வேண்டுகிறேன். தங்களுக்கும் என் அம்மைக்கும் தெண்டனிடுகிறேன். சோமசுந்தரம்.''

திரு. சே: அம்மான்! மகாலிங்கம்! சண்முகம்! ஏன் விசனப் படுகிறீர்கள்? என் கண்களிற்கூட நீர் ததும்புகின்றதே. இதெல்லாம் ஆனந்த பாஷ்பமே. கடைசியிலேனும் நற்புத்திவந்து, 'என் மகன்,' என்று நான் சொல்லும்படியாயினனே, அதுவே பெரிது. பெண்புத்தியைக்கேட்டுத் திகைத்து, நான் அனுப்பிய தூதின் இழி தன்மையை அவன் எடுத்துக் காட்டியிருப்பதைப் பார்த்தீர்களா? நீயும்கூட என்னை அலட்டினையே, மகாலிங்கம்; இப்பொழுது என்ன சொல்கிறாய்? இனி, போர்முகத்திலிறப்பதினும், இது பதின்மடங்கு புகழுடையதே.

சேகர: ப்ரபோ! அதில் ஸந்தேகமில்லை. அவரை யிப்போழ்து நோக்கினால் எங்களுக்கே ஆச்சரியமாயிருக்கிறது. தம்பிரானுக்கு நான் என்ன பதில் சொல்கிறது?

திரு. சே: இன்னுமா திகைப்பு? ஆதியில் சேஷையனுக்குச் சொன்ன பதிலே இப்பொழுதும். ஒருவேளை இன்னும் நான் மாறுவேனோ என்னும் ஐயமே வேண்டாம். என் மகன் நாடிக் குழாய்களில் ஓடும் உதிரம், ஸ்ரீராமபிரான் காலந்தொட்டுவரும் பெரும்புகழ் படைத்த உத்தமசீலர்களாகிய சேதுபதிகளின் உதிரமாதலின், மகா பாதகர்களின் வாள் அதிற்படுவதே எங்கள் குடிக்கு ஒரு வசையும் இழுக்குமாம். ஆதலின், ஏதூத! அக்கிரமச் செயல்களிலும் பாதகங்களிலும் என்றுமே கறைப்பட்டறியாத இந்த என் வாளையே கொண்டு கொடுத்து, இதனாலேயே என் மகனைக் கொல்லச்சொல்: இதுவே என் எதிரிகளை நான் வேண்டிக்கொள்வது.

[வாளைக் கொடுத்தல்.]

தருமி: [உட்புறத்தில்] ஐயோ தெய்வமே! [போதல்.]

# ஐந்தாம் அங்கம்.

(களம் :—நெல்லைக்கோட்டையும், கோட்டைப்புறத்தே பாசறையும்.)

## முதற்காட்சி.

களம்:—கோட்டைப்புறத்தே ஒரு படைவீடு.] [காலம் :—முன்னிரவு.

[சேகரன் மண்ணுடையாரும் பத்மநாபன் நம்பியாரும் பேசிக்கொண்டிருத்தல்.]

**சேகர :** எனக்கு அத்தனையும் சொல்லத்தெரியவில்லை ; எத்தனை கம்பீரமாயும் உருக்கமாயும் எழுதியிருந்தான் ! என் கண்ணில்கூட ஜலம் வந்துவிட்டது.

**பத்ம :** 'எங்ஙனமாகினும் என்னை விடுவிக்கவேண்டும் ; கப்பமோ, கோட்டையோ, ஸேது ஸம்ஸ்தானமோ, எதைவேண்டினும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும்,' என்று எழுதியிருப்பனென்று, தம்பிரானும் மாறனும் சொல்லிக்கொண்டிருந்தார்களே.

**சேகர :** ஹே ! ஒரு ஸமயம், இங்ஙனம்வரின், இவர்கள் அங்ஙனம் எழுதுவார்கள். அச்சனும் மகனும் ஒன்றுந்தரம் சூரர்கள். மனுஷஜென்மமெடுத்தால் இங்ஙனமிருக்கவேண்டும். நம்பியாரே ! இந்த அபவாதம் நடவாமல் எங்ஙனமாயினும் தடுக்கவேண்டும்.

**பத்ம :** வலியதம்பிரான் அனுப்பினதே கப்பத்தை நிறுத்தத்தானே ? அதுவும் வேண்டாம் ; மேல் பதினாயிரம் பொன்னும் தருகிறோம் என்று சொன்ன பின்னும், யுத்தமேன், இந்த மஹாபாதகம் ஏன் ? தம்பிரான் துர்க்குணத்தையும் மூர்க்கத்தையும் அறிந்தே, வலிய தம்பிரான், நுங்கள் அச்சன் சேஷையன் தம்பிரானையும் அனுப்பினது ; அவரையே சிறையிலாக்கி விட்டாரே, வலிய தம்பிரான் கேட்டால் ஸகிப்பரோ ? எத்தனை துணிவு !

**சேகர :** எல்லாம் நம்முடைய இளக்காரத்தினால்தான். தம்பிரான் யுத்த ஸாமர்த்தியமெல்லாம் நயவஞ்சகம்தானே : என்னுடைய அம்மானை ஊணுக்கு அழைத்து விஷமிட்டுக்கொன்றது மறந்துபோமோ ! இதோ நெஞ்சிலிருக்கிறது. இந்த மாறனுக்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம் ? அவனுக்காக நாமேன் இங்கே கிடந்து மடியவேண்டும் ? என்னை திரஸ்காரம் பண்ணிவிட்டு, கனிஷ்டத்தியை இவர் அவனுக்கு ஸம்பந்தம் பண்ணிக்கொடுக்கிறதோ ? மாதவி, எல்லை கடந்து பாண்டிக்குத்தான் வரலாமோ ? அதிருக்கட்டும் : கண்ணில்கண்ட நியாயத்தைச் சொன்னதற்கு, இவர் என்னுடைய அச்சனை அவமானப்படுத்திச் சிறையிலாக்குகிறதா ?

பத்ம : நுங்கள் அச்சனை இங்ஙனஞ்செய்தது, நாளை இந்தத் துர்க்கிருத்தியத்தை நடத்தத்தானே.

சேகர : நல்லபுத்தி சொல்லியும் கேட்காவிடின், வேறுவழி தேடவேண்டியதுதான். அச்சனைச்சிறையாக்கியது முதல் சைநிய மெல்லாம் பெருங்குழப்பமே. இந்தச் சிறுக்கனுக்காகப் பச்சாத் தாபப் படாதவன் ஒருவனேனுமில்லை. பரமேசுவரப் பணிக்கர் ஒரு ஆள்தான், 'இன்னும் அவர் பக்ஷம் பேசிக்கொண்டிருக்கிறது ; அவர் பாரியை கனிஷ்டனில்லையோ அவன் ? ' கப்பம் வேண்டாமென்று ஸேதுபதி சொன்னபின், யுத்தமெல்லாம் தம்பிரானுடைய க்ஷாத்திரத் துக்காகவும் மாறனுக்காகவும்தான் ; வலியதம்பிரான் கல்பனைப் பிர காரம் அல்ல,' என்று, நான் என் தளவகுப்பு முழுதும் அறிவித்து விட்டேன் ; நீங்களும் அங்ஙனமே செய்யவேண்டும்.

[இராவுண்ணி நாயர் பிரவேசித்தல்.]

என்ன, ராவுண்ணி, மாதவி என்னமாயிருக்கிறாள் ?

இராவு: இந்த மூன்று திவஸத்துக்குள் சரீரம் பாதியில்லை ; தம்பிராட்டியை எனக்கே அடையாளம் தெரியவில்லை ; ஊணுறக்கமே யில்லையாம் ; தன்னாலேயே இங்ஙனம் வந்துவிட்டதென்று, எப்போழ் தும் கரைந்து கரைந்து புலம்பிக்கொண்டும், விசனித்துக்கொண்டு மிருக்கிறாள். எங்ஙனமாயினும், நாளை இந்தக் கொலைபாதகம் நடவா மல் நிறுத்தித் தரும்படி, தங்களிடம் சொல்லச் சொன்னாள்.

சேகர : என்னிடமோ ? அங்ஙனம் மாதவி சொன்னதுண்டோ?

இராவு : அதே ! ' ராவுண்ணி ! மண்ணாடியாரிடத்தில் நான் அதிகம் பிரார்த்தித்ததாகச் சொல்லு : இந்த அபவாதத்தின் சேஷம் என் பிராணன் நில்லாது ; அவர்கள் மனஸு வைத்தால், இதை நிறுத்திவிடலாம்,' என்று தம்பிராட்டி கல்பனையாயிருக்கிறது.

சேகர : ஆஹா ! என்னிடம் சொல்லச் சொன்னாளோ ? அங் ஙனமாயின், என் பிராணனைக் கொடுத்தாயினும், இதைத்தடுத்துவிடு கிறேன். ' கொடுங்கோளூர் பகவதிமேலாணை வைத்திருக்கிறேன், இது நிற்காது,' என்று, அவர் என் அச்சனைச் சிறையிலாக்கினார். நானும், கொடுங்கோளூர் பகவதிமேல் ஆணை வைக்கிறேன் : எங்ஙனம் ஆயி னும் இதை நிறுத்தி, என் அச்சனையும் விடுவிக்கிறேன். உங்கள் ஸஹாயம் மாத்திரம் வேணும்.

பத்ம : } ஓ ! நாங்கள் என்ன ஸஹாயம் வேண்டினும் செய்
இராவு : } கிறோம். [போதல்.]

## இரண்டாங் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்தே மற்றோர் படைவீடு.]

[காலம் :—முன்னிரவு.

[நாகப்பன் சேர்வையும் செம்பகமும் பிரவேசித்தல்.]

சேம்பகம் : இவர் இன்னும் சாப்பிட வரவில்லையா ?

நாகப் : அங்கே தளவாய்படை வீட்டிலே சாப்பிடுவதாகச் சொல்லியனுப்பிவிட்டார்.

சேம்ப : ஆனால் ஒருவேளை இராத்திரி வரமாட்டாரோ ?

நாகப் : வாராமலென்ன ? செம்பகத்தை விட்டுவிட்டு அங்கேயா இருக்கப்போகிறார் ? அதற்கு இன்னும் மலையாளத்தாள் இணங்க வில்லையே. எதற்கோ பிச்சாங்கத்தியை வாங்கிக்கொண்டாயே, அதெங்கே ?

சேம்ப : அதா, மறந்துபோய்ப் பெட்டிக்குள் வைத்துவிட்டேன் ; நாளை யெடுத்துத் தருகிறேன். இந்தக் கொலைபாதகம் நாளைக் காலையில் நடப்பது உறுதிதானாமே ? சமாதானம் ஒன்றும் நிறைவேறவில்லையாமே ?

நாகப் : சேதுபதி மகனே, தமக்காக நாட்டுக்குக் கேடுவரும்படி யொன்றும் செய்யக்கூடாது, கோட்டையை விடக்கூடாது, என்றெழுதிவிட்டாராம்.

சேம்ப : ஆண்பிள்ளையென்று பிறந்தால், சேதுபதியைப்போலவும் அவர் மகனைப்போலவும் பிறக்கவேண்டும் ! கப்பமும்வேண்டாம், பதினையாயிரம் பொன்னும் தருகிறோமென்று சொல்லியனுப்பினார்களாமே : தளவாய்க்கு அதைவிட என்ன ?

நாகப் : அவனுக்கு அரைமனசுதானும் ; நம்மவர்தான் இல்லாதும் பொல்லாதும் சொல்லிக்கெடுத்துவிட்டாரென்று, கோளத்தாரெல்லாம் திட்டுகிறார்கள். கோளத்தாருக்குக் கப்பமும் நின்று பணமும் கிடைத்தால், இவருக்கென்ன ஆச்சுது ? எப்படியாவது சேதுபதி மகனைத் தொலைத்துவிட்டால், தளவாய் தங்கச்சியும் கிடைப்பாள் ; பின்னுக்காவது பட்டமும் கிடைக்கும். அவரை இளவரசராக்குவது அரசர் உத்தேசம் என்று கேள்வியானது முதல், இவருக்கு ஆக்கிரகம் பொறுக்க முடியவில்லை.

சேம்ப : 'தன் வினை தன்னைச் சுடும் ; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்,' என்பார்கள். கடவுள் ஒருவர் இருக்க, இப்படியொரு அநியாயமும் நடக்குமா ?

நாகப் : நாளைவிடியத்தான் நடக்கப்போகிறதே, காணப்போகிறோமே. நம்மவருக்கும் தளவாய்க்கும் கடவுளேது கடவுள் ?

[முருகன் பிரவேசித்தல்.]

மகாராசா இன்னும் வரவில்லையா, முருகா?

முருகன்: அதோ வருகிறார்; கொஞ்சம் குடி முறுக்கு பலம். செம்பகத்தைப் பார்க்கச் சொன்னார், அதுதான் முன்னாலே வந்தேன்.

நாகப்: கண்ணும் பூத்துப்போக, அடியாள் வழிபார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறாளென்று, எதிர்கொண்டுபோய்ச் சொல்லு. இந்த வாழ்வெல்லாம் மலையாளத்தாள் கிடைக்கிறவரையும்தானே.

செம்ப: உலகத்திலே யார்வாழ்வுதான் நிலை?

[வம்சாரிமாறன் பிரவேசித்தல்.]

வம்சாரி: ஓ! இங்கேயே இருக்கிறாயா, செம்பகம்? நல்லது, நீங்கள் போகலாம். முருகா, கிழக்கு வெளுக்குமுன் என்னை எழுப்பிவிடவேண்டும்; மறந்துவிடாதே.

முருகன்: உத்திரவு.

[நாகப்பன் சேர்வையும் முருகனும் போதல்.]

வம்சாரி: இன்னும் நீ சாப்பிடவில்லையா என்ன? வாடினாற் போலிருக்கிறாயே.

செம்ப: இல்லை, சாப்பிட்டாய்விட்டது.

வம்சாரி: இங்கே வா என் பக்கத்தில். கண்சிவந்திருக்கிறதே, அதிகமாய்க் குடித்துவிட்டாயோ?

செம்ப: நான் இன்று குடிக்கவில்லை; கண்ணில் ஏதோ பூச்சி விழுந்தது.

வம்சாரி: இரண்டு கண்ணிலுமா? பின்னையென்ன, எப்பொழுதுமுள்ள குசாலைக் காணோம்? ஊரை நினைத்துக்கொண்டுவிட்டாயோ?

செம்ப: அப்படியொன்றுமில்லை. ஏதோ கொஞ்சம் தலை நோகிறது, அதுதான்.

வம்சாரி: இந்தச் சாக்குப் போக்கெல்லாம் இன்றைக்கு நடவாது. இன்று சந்தோஷமாயிருக்கவேண்டுமென்று நான் வந்திருக்கிறேன், நீ அதற்கு நேர்விரோதமாயிருக்கிறாயே. அரைக்குப்பி அரக்கையெடுத்து உள்ளேவிடு, எல்லாம் சரியாய்ப் போய்விடும்.

செம்ப: இன்றைக்கென்ன அப்படி விசேஷம்?

வம்சாரி: நாளை அந்தத் துஷ்டப்பயல் தொலைந்து போவான். அனேகமாய் நாளையே மாதவி ஸம்பந்தமும் நடக்கும். அப்புறம் அவளறியாமல் ஒளித்துத்தானே நாம் சந்திக்கலாம்? இன்றுதானே நாம் கடைசியாக சந்தோஷமாயிருக்கக்கூடிய நாள்?

செம்ப: தங்களுக்குப் பலவிதத்திலும அவர் விரோதியாயிருந் தாலும், இப்படி நயவஞ்சகமாய்ப் பிடித்துக்கொல்லலாமா! போர் முகத்தில் எதிர்த்தோ, சிறைப்பிடித்தோ, உங்கள் இஷ்டம்போற் செய்தாலும் உலகம் ஒப்பும்; இப்படிச் செய்வதாயிருந்தால், யார் வாழ்வுதான் நிச்சயம்? நம்பிவந்தவரைப் பிடித்துக் கொல்வது, உறங்குகிறவனைத் திடீரென்று குத்திக் கொல்வதுபோலத்தானே.

வம்சாரி: காமத்திலும் பகையிலும் நியாயமேது, முறையேது? உனக்கேன் அவன் விஷயத்தில் இவ்வளவு பச்சாத்தாபம்? வருகிற வழியில் பழக்கமுண்டோ?

செம்ப: இதற்குப் பழக்கம் என்னத்திற்கு? எல்லாரும் சொல் வதையே நானும் சொல்கிறேன். பாசறை முழுதிலும், தங்களையும் தளவாயையும் தவிர, இரங்கிப் புலம்பாத பேரில்லை. தங்களையே முக்கிய காரணஸ்தரென்று எல்லாரும் தூற்றுகிறார்கள்.

வம்சாரி: நான்தான் முக்கிய காரணஸ்தன்; அதிலென்ன சந் தேகம்? என் யுக்தியே இது. அந்தப்பயல் இப்படிவந்து சிக்கிய பின்பு உயிரோடு விட்டுவிட்டால், என்னிலும் மூடருண்டோ! பாசறையெல்லாம் பழிக்கட்டும், பாரெல்லாம் பழிக்கட்டும்; அவர் கள் சொல்வதென்ன என்னைவந்து அடிக்குமா, பிடிக்குமா?

செம்ப: ஆனால் அடிக்கும் பிடிக்கும் மட்டுந்தான் பயப்படு கிறதா? கடவுள் ஒருவரில்லையா? அவருக்காவது பயப்படவேண் டாமா?

வம்சாரி: என்ன, செம்பகத்துக்கு ஞானோதயம் ஆய்விட் டதோ? கடவுளுக்குத்தான் என் தமையனைவிட்டிருக்கிறேனே; ஒரு குடிக்கு ஒருவர்போதாதா? அந்த வீணையை எடுத்துவா; எதாவது ஒரு கிருதி வாசித்து, மெதுவாய்ப்பாடு கேட்போம். "ஈ தினமே ஸுதினமு," என்கிற கிருதியை நீ பாடிக்கேட்டு வெகுநாளாச்சுது. அதைப்பாடு.

செம்ப: இன்றெனக்குத் தலைநோகிறது. நாளையுங்கள் கலி யாணத்தில் பாடுகிறேன்; பொருத்தமாயிருக்கும். சேதுபதி மகன் வெகு தைரியமாயும் சந்தோஷமாயும் இருக்கிறாராமே?

வம்சாரி: என்ன, நான் சொல்வதொன்றையும் மதியாமே, திரும்பவும் திரும்பவும் அவனைப்பற்றியே பேசுகிறாயே? எதாவது தொடுப்புண்டோ?

செம்ப: அவருக்கு என்னைத் தெரியவே தெரியாது, அவர் அப்படிப்பட்டவருமல்ல. தொடுப்பே இருந்தாலுந்தானென்ன? என் னைத்தான் வேசையாக்கிச் சந்தியில் விட்டுவிட்டீர்களே.

வம்சாரி: பழங்கதையைத் தொடங்காதே இப்பொழுது. ஏதாவது பாடப்போகிறாயோ, இல்லையோ?

செம்ப: என்னால் இப்பொழுது பாட முடியாது.

வம்சாரி: முடியாது! என்னிடத்தில்தானா சொல்கிறாய்? சரி: இங்கேதான் படுத்துக்கொள்ளப்போகிறாயோ? உன் கூடாரத்துக்குப் போகிறாயோ?

செம்ப: மகாராசா உத்திரவுப்படி நடக்கிறேன்.

வம்சாரி: அதென்ன, இடுப்பில் புடைத்திருக்கிறது?

செம்ப: இதா? ஒன்றுமில்லை; சேலைகொஞ்சம் நீளம்; கொய்சகம்தான் அப்படித் தெரிகிறது.

வம்சாரி: சரி, உன் இஷ்டம்போல் செய். விளக்கைமட்டும் அணைத்துவிடு; நான் விடியற்காலம் எழுந்திருக்கவேண்டும். சீக்கிரம் தூங்கவேணும். [போதல்.]

## மூன்றாங் காட்சி.

களம்:—கோட்டையில் சண்முகத்தேவன்வீடு.] [காலம்:—நள்ளிரவு.
[மகாலிங்கஞ் சேர்வை, எல்லையப்பர், சண்முகத்தேவன், நெல்லையப்பத்தேவன், இவர்கள் பேசிக்கொண்டிருத்தல்.]

நெல்லையப்பத்தேவன்: அனேகமாய்ப் போகிற காரியமும் முடியாது, அவர்கள் கோபமும் உண்டாகும். ஏழெண்ணாயிரம் சேனைக்கு நடுவே நானூறு பேரால் என்ன முடியும்?

சண்மு: சாகவாவது முடியாதோ? அதுவே போதும்.

மகாலி: அவர் கோபத்துக்கு நீர் அஞ்சவேண்டாம்; என் கைப்படத்தான் உத்திரவெழுதித் தந்திருக்கிறேனே. இங்குள்ள பேரை வைத்துக்கொண்டு, இன்றிரவு, நாங்கள் போனபின் ஒரு சாமப் பொழுதுக்குமட்டும், காவலைப் பதனமாய்ப் பார்த்துக்கொள்ளும்; விடிந்தபின் அவரிடம் தெரியப்படுத்தி விடலாம்.

நெல்லை: உங்கள்மேல் கோபப்படுவாரே என்றுதான் சொல்ல வந்தேன்.

எல்லை: நாங்கள், ஒன்று, அவரை மீட்டுக்கொண்டு வருவோம்; அன்றேல், திரும்பப் போகிறதில்லை. எங்களுக்கென்ன பயம்? செஞ்சோற்றுக் கடன் கழிக்கவோ, புகழோடு சாகவோ, இதனினும் ஏற்ற தருவாயும் நேருமோ?

சண்மு: விடியற்காலமே, இருட்டில் சென்று தாக்கினாலோ?

மகாலி: அவரை எங்கே சிறைவைத்திருக்கிறார்கள் என்பது கூட, உறுதியாய்த் தெரியாதே. அது மோசமாய்விடும்.

நெல்லை : ஒரு ஆளைக்கூட அவசியமின்றிச் செலவழிக்கப் படாது, என்று சொன்னார்களே, தலைவரும் நானூறுபேரும் போய் விட்டால் எப்படி?

மகாலி : ஏன்காணும் சும்மா துண்டு முறித்துப் போட்டுக் கொண்டிருக்கிறீர்? உம்மை வரச்சொல்ல வில்லையே? யாரையுமே கட்டாயப்படுத்தவில்லையே? 'நான்!' 'நான்,' என்று முந்தினவர் கள்தானே இந்த நானூறுபேரும்? அவர் வருமுன் இருநூறுபேர் தானே இருந்தோம்; இப்பொழுது முந்நூறு பேரைக்கொண்டு கோட் டையைக் காக்கமாட்டாமே, அவர் நம்மிலும் தாழ்ந்த வீரரா என்ன? நாங்கள் செயித்துத் திரும்பினால் எல்லாருக்குமே சந்தோஷம்; இல்லாவிட்டாலும் எங்களுக்குச் சந்தோஷமே. பண்டசாலை இருக் கிற சீருக்கு, நானூறு ஆள் குறைந்தால், அந்த மட்டும் நலம்தான்: கூட மூன்று மாதம் முற்றுகை தாங்கும், சேனாபதியும் சேனையும் வரும்வரை கவலையில்லை.

சண்மு : விடியச் சாமத்திற்குப் புறப்பட்டாற் போதாதா?

மகாலி : பதனம் பத்துக் கெளிது: நாம் போயும், ஒரு விநாடி பிந்திவிட்டால், அப்புறம் என்ன பிரயோசனம்? இரண்டு நாழி கைக்கு முந்திப் போய்ச்சேர்ந்தாலும், இருட்டுத்தான், காட்டில் பதுங்கியிருக்கலாம். தவிரவும், நானூறுபேர் பிடாரி மூலைவாசல் வழியாக ஒருவன் பின்னொருவனாய் வெளியேறி அகழி தாண்டப் பொழுது பிடிக்கும். நான் சொன்னபடி எல்லாவற்றையும் சித்தப் படுத்திக்கொண்டு, இன்னும் நாலு நாழிகைப் பொழுதில் அங்கே கூடி விடவேண்டும்.

சண்மு : எல்லாம் சித்தமாய்விட்டது: மனுஷப் பிரயத்தனத் தில் ஒன்றும் குறையில்லை; கடவுள் கிருபைதான் வேண்டும்.

மகாலி : நம்ம உத்தேசம் நிறைவேறினால், நெல்லையப்பருக்கு ஒரு வெள்ளி ரதமும், காந்திமதித் தாய்க்கு அன்ன வாகனமும் செய் வதாக நேர்ந்துகொண்டிருக்கிறேன். என் மனதென்னவோ தைரிய மாகவே இருக்கிறது.

எல்லை : "தெய்வத்தான் ஆகாதெனினும், முயற்சிதன் மெய் வருத்தக் கூலிதரும்," என்றார் தெய்வப் புலவரும்; அவர் சொல் தவறாது.

சண்மு : இருட்டு நேரமே, நமக்குள் அறிகுறிச்சொல் ஒன்று வேண்டாமா? என்ன வைத்துக்கொள்ளலாம்?

மகாலி : அறிகுறிச் சொல்லா? "தர்மமே ஜயம்," என்று வைத்துக்கொள்வோம். எல்லாருக்கும் தெரிவித்துவிடும். ஒன்று மறந்துவிட்டேன்: குதிரைகள் கனையாமல், வாய்ப்பூட்டிட்டுக்

கொண்டுபோகவேண்டும். நெல்லையப்பரே! நாங்கள் திரும்பிவந்தால், எங்களைக் கண்டவுடன் கோட்டைக் கதவைத் திறக்கவும், உடனே மூடிவிடவும், ஆள்கள் சித்தமாயிருக்கவேண்டும்; எதிரிகளும் நுழைந்துவிடாமல், மதிலின்மேல் வில்லாட்களிருந்து காக்க வேண்டும். சேதுபதியிடம் நீர் சொல்லி விட்டாற் போதும்.

[போதல்.]

## நான்காங் காட்சி.

களம் :—கோட்டைப்புறத்துப் பாசறையின் நடுவே ஒரு வெளி.]

[காலம் :—வைகறை.

[படைவீரர் அணியணியாய்ச் சூழ்ந்து தூரத்தில் நிற்றல்; சேகரன்மண்ணுடியாரும் பத்மநாபன் நம்பியாரும் பிரவேசித்தல்.]

சேகரன்மண்ணுடியார் : ராவுண்ணி எங்கே இன்னும் வரவில்லை.

பத்ம ? தம்பிரான் கூடவருவன். கல்பனைப் பிரகாரம் காவல் வந்துவிட்டது. எனக்குமட்டும் இன்னும் ஸந்தேகமே: அங்ஙனம் செய்யமாட்டாரென்றே எண்ணுகிறேன்; இதெல்லாம் ஒரு தந்திரமும் மிரட்டுமே.

சேகர : செய்யவேணுமென்று யாருக்கும் கோரிக்கை யுண்டோ? செய்வதாயின், நான் என்ன செய்கிறதென்று தீர்மானித்துவிட்டேன்; மாதவி என்னை விசுவசித்துச் சொல்லியனுப்பியதின் பின்பு, அல்ப ஸொல்ப ஸம்சயத்தையும் ஒழித்துவிட்டேன். ஸைநியமெல்லாம் இந்த விஷயத்தில் ஒரே மனஸாயிருக்கிறது ஆச்சரியம்.

பத்ம : அது அத்தனை ஆச்சரியமல்ல? தம்பிரான் இங்ஙனம் செய்கிறதுதான் ஆச்சரியம்.—அதோ வருகிறார்.

[தளவாய் கண்ணன் தம்பியும், பரமேசுவரப் பணிக்கரும், இராவுண்ணிநாயரும், சிலபடைவீரரும் பிரவேசித்தல்.]

தளவாய் : மண்ணுடியாரே, கல்பனைப்பிரகாரம், காவலுக்கு இரண்டாயிரம் படைவீரர் வந்துவிட்டார்களோ!

சேகர : வந்து, சூழ்ந்து நிற்கிறார்கள்.

தளவாய் : எல்லாரும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும்; ஒரு ஸமயம் திடீரென்று எதிரிகள்வந்து தாக்கக்கூடும். மாறன் எங்கே, இன்னும் வரவில்லையோ? ராவுண்ணி, மாறனை வேகம் கூட்டிக் கொண்டுவா.

சேகர : [இரகசியமாய்] மாதவிக்குத் தைரியம் சொன்னையோ.

இராவு: ஓ! [இராவுண்ணிநாயர் போதல்.]

தளவாய் : மண்ணுடியார் என்ன ராவுண்ணியிடத்தில் சொன்னது ?

சேகர : ஒன்றுமில்லை : ' என்னுடைய அச்சன் சுகமோ,' என்று கேட்டேன் ; ' அறியேன் ' என்று சொன்னான். தம்பிரான் இங்ஙனம் செய்தது வலிய ஸங்கடம், அவமானம்.

தளவாய் : அது பின்பு நோக்கிக் கொள்வோம். பரமேசுவரா ! இந்த ஆள்களைக் கூட்டிக்கொண்டுபோய், அந்தக் கழுவேறி மகனை நல்லவண்ணம், சோரனைப்போல, பின்கட்டுமாறாகக் கட்டிக்கொண்டு வா. இதோ, இந்த மோதிரத்தைக்காட்டு, இல்லாவிடின் சிறைக் காவலாளி விடமாட்டான்.

[மோதிரத்தை வாங்கிக்கொண்டு பரமேசுவரப் பணிக்கரும் சிலபடைவீரரும் போதல்.]

தளவாய் : நம்பியாரே ! கோட்டைத் தாழ்க்கோல் என்ன இன்னும் வரவில்லையே ?

பத்ம : வருமென்று தோன்றவில்லை. ஆனால், தம்பிரான் வாஸ்தவத்தில் இங்ஙனம் செய்யுமோ ?

தளவாய் : ஹே ! பின்னை இதொக்க வேஷமோ ? அந்தக் கழுவேறிமகன் நேற்றுக்கூட நம்மையெல்லாம் எழுத்தனுப்பி மோசஞ் செய்துவிட்டானே, அவனைக்கொன்றே களைகிறேன்.

[இராவுண்ணிநாயரும் முருகனும் பிரவேசித்தல்.]

முருகன் : கொலையோ கொலை ! ஐயோ ! மகாராசாவை அநியாயமாய்க் கொலைசெய்துவிட்டார்களே, நான் என்ன செய்வேன் !

தளவாய் : என்ன, என்ன ஸங்கதி ?

முருகன் : ப்ரபோ ! விடியற்காலம் எழுப்பச் சொல்லியிருந்தார் ; நான் என்ன சத்தம் கொடுத்தும் பதிலில்லை ; பிற்பாடு திட்டியைத் திறந்துகொண்டு உள்ளே போய்ப்பார்த்தேன் : விளக்கெரிந்துகொண்டிருக்கிறது, மகாராசா படுக்கைமேல் இரத்தவெள்ளத்தில் மடிந்து கிடக்கிறார். ஐயோ ! நான் என்ன செய்வேன் ! என்ன செய்வேன் !

தளவாய் : இராத்திரி ஒருவரும் கூடவில்லையோ ? அந்த போகஸ்திரீ எங்கே ?

முருகன் : இராத்திரி நான் உத்திரவு வாங்கிக்கொண்டு போம்பொழுது, அவள் கூடத்தானிருந்தாள் ; இப்பொழுது அவளைக் காணவில்லை.

**தளவாய் :** அதே ; பாம்பாட்டிக்குப் பாம்பினாலும், மாந்திரீகனுக்குப் பேயினாலும், ஸ்திரீ பிராந்தனக்கு ஸ்திரீயினாலுமே மரணம். ஓ ! மாறன் போய்விட்டானே !

**இராவு :** தம்பிரான், இவன் முழுதும் ஸத்தியம் சொல்லவில்லை ; மாறன் மஞ்சத்தின்மேல் கொலையுண்டு கிடப்பது வாஸ்தவமே ; ஆனால், நான் போம்பொழுது, அங்குள்ள பெட்டகங்களையெல்லாம் திறந்து, இவன் ஆபரணங்களை எடுத்துக்கொண்டிருந்தான் ; தம்பிரானிடத்தில் சொல்லவேண்டாமென்று இந்த மோதிரத்தை எனக்குத் தந்தான்.

[பரமேசுவரப் பணிக்கரும் சில படைவீரரும் சோமசுந்தரசேதுபதியைப் பின்கட்டுமாறாகக் கட்டிக்கொண்டு பிரவேசித்தல்.]

**தளவாய் :** ஹே ! அங்ஙனமோ ? அதைப்பின்பு விசாரிப்போம். பரமேசுவரா ! இந்த நாயினுடைய மகனைச் சிறையாக்கி, நான் வரும்வரை, மாறனுடைய படைவீட்டையும், அதைச்சேர்ந்த படைவீடுகளையும், வெகு பத்திரமாய்க் காத்துக்கொண்டிரு போ.

**முருகன் :** தம்பிரானே, நான் அப்படி யொன்றும் செய்யவேயில்லை ; அநியாயமாய்ச் சொல்லுகிறான்.

**தளவாய் :** அதைப் பின்பு விசாரிப்போம்.

[பரமேசுவரப்பணிக்கரும் சிலபடைவீரரும் முருகனைத் தள்ளிக்கொண்டு போதல்.]

[**சோமசுந்தர சேதுபதியை நோக்கி**] என்னடா, புலையாடி மகனே, உனக்கு யாரும் நாதியில்லையோ ? உன் அச்சனே உன்னைக் கொல்ல இந்தவாளை அனுப்பியிருக்கிறான். நல்ல அச்சன், நல்ல மகன் ! என்ன, மௌனம் சாதிக்கிறது ?

**சோமசு :** மிருகத்தோடு என்ன பேச்சு ? சீக்கிரம் உன் இரத்த வெறியை என்மேல் தீர்த்துக்கொள்.

**தளவாய் :** இன்னும் இத்தனை துடுக்கோ உனக்கு ? என்னை ‘ மிருகம் ’ என்ற நாவை முதலிற் கொய்து, பிற்பாடே உன்னைச் சிரச்சேதம் செய்யவேண்டும். ராவுண்ணி, பிச்சாங்கத்தியை எடுத்து அவன் நாக்கையிழுத்து அறு. என்ன, ராவுண்ணி, சும்மா நிற்கிறாய்? கல்பனை காதுகேட்க வில்லையோ ?

**இராவு :** நான் அங்ஙனம் செய்கிலேன்.

**தளவாய் :** என்னடா, கழுவேறி, மாதவியினுடைய சிக்ஷையோ உனக்கு ? இருக்கட்டும் வழிசொல்லுகிறேன். நம்பியாரே, இந்த ராவுண்ணி ஓடிவிடாமல் பார்த்துக்கொள்ளும்.

இராவு: நான் எங்கும் போகவில்லை; தம்பிரானைவிட்டு எங்கே போவேன்?

தளவாய்: இரு, வருகிறேன் உனக்கு. மண்ணுடியாரே, நுங்களுடைய வாள், இந்தப் பாண்டிக் கழுவேறி மகன் உதிரத்தில் பட வேண்டாம்; இந்த வாளையே எடுத்து, அவனைக் கொன்று களையும் என்ன, சும்மா நிற்கிறது?

சேகர: நான் கொலையாளி யல்ல, தளவீரனே.

தளவாய்: வெகு நன்றாயிருக்கிறது! என்ன நம்பியாரும் அப்படித்தானோ?

பத்ம: அதே.

தளவாய்: அசல் ஆயிற்று!

[ஒரு படைவீரன் ஓடிவந்து பிரவேசித்தல்.]

படைவீரன்: தம்பிரானே, காட்டுமறைவிலிருந்து எதிரிகள் ஓடி வருகிறார்கள். இரண்டு மூவாயிரம் பேரிருக்கும்.

தளவாய்: அங்ஙனமோ? மேல்புறமுள்ள தளவீரர் பத்திரமாயிருக்கட்டும். கொடுங்கோளூர் பகவதிமேல் ஆணையிட்டுச்செய்த பிரதிக்ஞையை நானே நிறைவேற்றிவிட்டு, உங்களுக்கும் அவர்களுக்கும் வழிசொல்லுகிறேன்.

[வாளையெடுத்துச் சோமசுந்தர சேதுபதியை வெட்டப்போதல்.]

படைவீரர்: தம்பிரானே! இந்தப் பாதகம் வேண்டாம்!

சேகர: என் பிரதிக்ஞை நிறைவேறிய பின்னாகட்டும் உன் பிரதிக்ஞை.

[தன் வாளால் தளவாய் கண்ணன் தம்பியின் தலையை வீசிவிடுகிறன்.]

என் அம்மானுடைய ஆத்மா இனித்திருப்தியாகும்.

இராவு: [சோமசுந்தர சேதுபதியை நோக்கி] ப்ரபோ! என்னால் உண்டான கஷ்டங்களையெல்லாம் க்ஷமித்துக்கொள்ளவேணும்; தெரிந்து செய்ததல்ல.

[கட்டுக்களை அவிழ்த்து விடுதல்.]

தாங்கள் இனி இங்கிருந்தால் ஏதாவது அபாயம் நேரிடலாம். தம்பிராட்டியின் படைவீட்டுக்குப் போகலாம் வாருங்கள்.

["தர்மமே ஜயம்," "தர்மமே ஜயம்," என்று கூப்பிட்டுக்கொண்டு, மகாலிங்கஞ் சேர்வை, எல்லையப்பர், சண்முகத்தேவன், சில படைவீரர், இவர்கள் வாளுங் கையுமாகவந்து குதித்தல்.]

மகாலி: ஐயோ, மோசம் போச்சே! அதோ கொலையுண்டு கிடக்கிறாரே!

சோமசு: இதோ இருக்கிறேன் நான். பயப்படவேண்டாம். அந்தப் பாதகனே கொலையுண்டு கிடப்பது.

எல்லோரும்: தர்மமே ஜயம்! தர்மமே ஜயம்! [போதல்.]

## பிற்கூற்று.

**களம்** :—மதுரையில் பாண்டியன் அரமனை.

[எல்லையப்பர் பிரவேசித்தல்.]

எல்லையப்பர் :—

உலக நாடகம் உகந்தருள் மூர்த்தியின்
அலகி லாவிளை யாட்டதி சயமே!
மன்னவன் மனுநெறி வழுவிய போரில்
ஒன்னலர் வெல்வதும் ஒருசார் முறையே;
ஆற்றலில் அரசன் தோற்றுளம் நொந்து,
பேடிகை வாளினில், பிடித்தவன் குறையால்
பீடழிந் திழிந்து கோடிய கோலினை,
அறத்துறை உன்னித் துறத்தலும் முறையே;
துறந்தவன் அன்றே இறந்து படுவதே!
தன்னய மன்றிமற் றென்னய மும்மெனார்,
மின்னெனும் செல்வம் நிலையென விரும்பி
விலங்கின் வாழ்பவர், மேம்படு வேதியர்
குலம்பழி யுறவரு கோளர் இருவரும்,
தம்முடை வலையில் தாமே சிக்கி
இம்மெனு முன்னர் இகலழிந் தொழிவதே!
இறந்தான், எமன்கைப் பட்டான் என்ன
மறஞ்சால் வஞ்சகர் வன்சிறை உற்றோன்,
அன்னவர் கொலையுண் டருநா கெய்திட,
பொன்னணங் கனையவோர் பூவையை மணந்து,
தென்னவர் திருமுடி சூடித் திகழ்வதே!
என்னே திருவுளம் இருந்தவித் தன்மை!
தருமமே சயமென நம்பித் தத்தம்
கருமமே செய்பவர், கடவுள் உண்மையினால்,
செய்மையில் அண்மையில் சேர்வது புகழே!
வாய்மை யேயிது. வாழி வாழியே!

[போதல்.]

[நாடகம் முற்றிற்று.]

MAHAMAHOPADHYAYA